# ஆத்மஜோதி

ஆசிரியர் நா. முத்தையா அவர்களின்



அறுபதாம் ஆண்டு
நிறைவு விழா

## சிறப்பிதழ்

வைகாசி
1978

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. கிரைய இந்தி

# சஷ்டியப்த பூர்த்திவிழாச் சபையினர்.

— தலைவர் —

திரு. பி. டி. கிருஷ்ணசாமி

— இணைச் செயலாளர்கள் —

திரு. E. முத்துக்கிருஷ்ணன்
திரு. P. ராமானுஜம்

— பொக்கிஷதார் —

திரு. P. ராமசாமி

— சிறப்பு மலர் ஆசிரியர் —

டாக்டர். செ. சிவஞானசுந்தரம் (நந்தி)

— கமிட்டி உறுப்பினர்கள் —

திரு. எஸ். வி. ஆறுமுகம்
திரு. ஜீ. இராமதாஸ்
திரு. பொ. யோகேஸ்வரன்
திரு. மு. நடராஜா
திரு. வி. உண்ணுமலை
திரு. வீ. எம். துரைச்சாமி
திரு. எஸ். முத்தையா
திரு. நா. நடேசன்
திரு. எஸ். பொன்னம்பலம்
திரு. எஸ். பி. தங்கவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
முருகா

# ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழா அழைப்பிதழ்

ஸ்ரீ வள்ளி தேவசேனு சமேத ஸ்ரீ முருகப்பெருமானுடைய பரிபூர்ண கிருபையை முன்னிட்டு, நிகழும் மங்களகரமான காலயுத்தி ஷு வைகாசித் திங்கள் எட்டாம் நாள் (22-5-1978) திங்கட்கிழமை பூரணைத் தினமும் விசாக நட்சத்திரமும் கூடிய அன்று காலை 9-00 மணி முதல் 11-00 மணிக்குள் வரும் சுபயோக சுபதினத்தில்

ஆத்மஜோதி ஆசிரியர்
**சிவத்திரு. நா. முத்தையா அவர்களுக்கு**

ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழா நடாத்த பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று, ஷை சுபமுகூர்த்தத்தில் சாந்தி விழா நாவலப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் நடைபெற திருவருள் கூட்டியுள்ளது. அத்தருணம் தாங்கள் அனைவரும் குடும்ப சகிதம் வந்திருந்து சாந்தி விழாவை நடத்திவைத்து ஆசிர்வதிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி-இலங்கை.

இங்ஙனம் தங்கள் அன்புள்ள,
ஷஷ்டியப்த பூர்த்தி விழாச் சபையினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

22-5-1978 திங்கட்கிழமை

காலை 9-00 மணி முதல் 11-00 மணிவரை

## ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழா

பிரதமகுரு பிரம்மஸ்ரீ கி. சுப்ரமண்யக் குருக்கள் அவர்கள்
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், மாத்தளை

...0 மணி

...மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் வழிபாடும் அங்கி...
ருந்து அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம்வரை ஊர்வலமும்

தலைமை:- திரு. பி. டி. கிருஷ்ணசாமி அவர்கள்
தர்மகர்த்தா, ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், நாவலப்பிட்டி

வரவேற்புரை:- திரு. எஸ். வி. ஆறுமுகம் அவர்கள்
அதிபர், கதிரேசன் மகாவித்தியாலயம்

கூட்டு வழிபாடு :- தவநெறிக்காவலர் திரு. கே. வி. கணபதி அவர்கள்
கொழும்பு, ஜிந்துப்பிட்டி, ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
நிர்வாக உறுப்பினர்

சிவத்திரு. நா. முத்தையா அவர்களுக்கு
பொன்னாடை போர்த்தி கௌரவித்தல்

ஆசியுரை வழங்குவோர்:-

திரு. கி. லக்ஷ்மண ஐயர் அவர்கள்
வித்தியாதிபதி, கல்வி அமைச்சு

திரு. பொ. வல்லிபுரம் அவர்கள்
தலைவர், அகில இலங்கை இந்து வாலிபர் சங்கம்

திரு. எஸ். பாலசுப்ரமணிய ஐயர் அவர்கள்
தலைவர், ஸ்ரீ ராமகான சபை, கொழும்பு

தொண்டர் எஸ். சண்முகராஜா அவர்கள்
இளைஞர் அருள்நெறி மன்றம், திருக்கோணமலை

வாழ்த்துப்பா: சங்கீதபூஷணம் செல்வி. பத்மலோஜினி மகாதேவா
சங்கீத ஆசிரியை, மகளிர் மகாவித்தியாலயம், நாவலப்பிட்டி

வித்துவான் சைவமணி மு. சபாரத்தினம் அவர்கள்
விரிவுரையாளர், இந்துக்கல்லூரி, காரைநகர்

திரு. கே. பி ஹரன் அவர்கள்
"ஈழநாடு" ஆசிரியர்

டாக்டர் செ. சிவஞானசுந்தரம் அவர்கள் (நந்தி)
இணைப்பேராசிரியர், வைத்தியக் கல்லூரி; பேராதனை

திரு. பொ. கந்தையா அவர்கள்
"தனசக்தி" திருக்கோணமலை

சிறப்புரை: சிவத்திரு. நா. முத்தையா அவர்கள்

மாலை 6-30 மணிக்கு விசேட பூஜை

இரவு 7-00 மணிக்கு சிறப்பு நிகழ்ச்சி

திருப்புகழ் இன்னிசையும்–சங்கீத உபந்நியாசமும்

பங்குபற்றுவோர்:

திருப்புகழ் தவமணி கே. வி. தியாகராஜ ஐயர் அவர்கள்
திருமதி. சுப்புலக்ஷ்மி தியாகராஜ ஐயர்
திருமதி. மீனாக்ஷி கிருபாசங்கர்
செல்வி. அலமேலுமங்கை ஸ்ரீனிவாசன்

மிருதங்கம் : செல்வன். பிரம்மஸ்ரீ ஷ. கனகசபாபதி சர்மா அவர்கள்

ஆர்மோனியம்: திரு. எஸ். கிருஷ்ணமாச்சாரி அவர்கள்

இரவு 8-45 நன்றியுரை: திரு. பெ. ராமானுஜம் அவர்கள்
[illegible] செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே
-சுத்தானந்தர்

ஜோதி 30 — காலயுக்தி ௵ வைகாசி ஆனி — ௴ (15-5-78)

## பொருளடக்கம்

ஆசிச் செய்திகள்:


| | | |
|---|---|---|
| மணிவிழா நாயகர் | — | 289 |
| பொன் — மணி — முத்து | — | 292 |
| ஆத்மஜோதி முத்தையா மாஸ்டருக்கு 61-ம் வயது | — | 296 |
| சுவைகொள் கரும்பே | — | 305 |
| சிறந்த தீர்த்தம் | — | 315 |
| கர்மவீரன் ஆத்மஜோதி ஆசான் | — | 319 |
| சுவாமி ராமதாஸ் அருளுரைகள் | — | 323 |
| வாழ்வியற்சீரும் மேல்கதிப்பேறும் | — | 324 |
| யாக்ஞவல்க்யர் | — | 327 |
| குறுந்தொகை போற்றும் பெருந்தகை முருகன் | — | 332 |
| இறைத்தன்மையும் — இயற்கைமுறையும் | — | 338 |
| வாழ்க பல்லாண்டு | — | 344 |
| ஆத்மஜோதிக்கு ஆத்ம நிவேதனம் | — | 348 |


### ஆத்மஜோதி சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| இலங்கைக்கு மாத்திரம் வருடச் சந்தா | — | 10-00 ரூபா |
| வெளிநாடுகளுக்கு ,, ,, | — | 20-00 ,, |
| ஆயுள் சந்தா ,, | — | 250-00 ,, |
| தனிப்பிரதி ,, | — | 1-00 ,, |

சிறப்பிதழ் ஆசிரியர்: டாக்டர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி)

ஆசிரியர்: நா. முத்தையா

**ஆத்மஜோதி நிலையம்**

நாவலப்பிட்டி. [போன்: 353]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஞ்சிபுரம்

ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின்

## ஆசிச்செய்தி

ஸ்ரீ லங்காவில் இந்து சமயத்தைப் பரப்பும் சபைகள் பல உள்ளன. அவைகளுள் முக்கியமானது ஆத்மஜோதி நிலையம். இதன் சார்பாக ஆத்மஜோதி ஆசிரியர் நா. முத்தையா அவர்கள் சமயப் பணியும் - சமுதாயப்பணியும் ஸ்ரீ லங்காவில் நிறையச் செய்திருக்கிறார்கள்.

இந்தியாவில் எங்களால் நடத்தப்பட்ட இரண்டு உலக மகாநாட்டிற்கும் நேராகவந்து கலந்து கொண்டு அவர் செய்யும் பணிகளை யெல்லாம் எங்களிடம் விளக்கினர். அந்த ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்களுக்கு சஷ்டி யப்த பூர்த்தி மணிவிழா நடக்க இருப்பதை அறிந்து சந்தோஷிக்கிறோம்.

அன்னாருடைய சமூக-சமய பணிகள் எல்லாம் மேன்மேலும் வளர்வதற்கு இறைவன் அருள் பரிபூர்ணமாக இருக்கட்டுமென்று ஆசிர்வதிக்கிறோம்.

—நாராயணஸ்மிருதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் மொழி அரசு, முத்தமிழ் வள்ளல்,
திருப்புகழ் ஜோதி, திருப்பணிச் சக்கரவர்த்தி,
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின்

# மணிவிழா வாழ்த்து

மூவிருப தாண்டு முருகன் திருவருளால்
பூவுலகில் எய்தியுயர் புண்ணியன் — மேவுபுகழ்
நாவலப் பிட்டியுறை நம்பிசீர் முத்தையாப்
பாவலன் வாழ்க பணைத்து.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

அன்பை யளிக்கும் அருமையுடை
ஆத்ம ஜோதிக் காசிரியன்
இன்பம் விளையும் சிவசமயம்
எங்கும் பரப்பும் இசையுடையான்
என்பும் உருகி சிவனடியை
எண்ணும் இனிய முத்தையா
ஒன்ப தான வீரர் தொழும்
ஒருவன் அருளால் வாழியவே!

ஆய நலனே புரிகின்ற
அறுஜன் அருமை நாயகமும்
தூய தொண்டர் நண்பர்களும்
சூழ்ந்து வணங்கப் பல்லாண்டு
நேயமுடனே சிவசமய
நெறியில் நிற்கும் முத்தையா
மாயன் மருகன் திருவருளால்
மகிழ்ந்து வாழி வாழியவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— தமிழ் நாடு உத்தரமேரூர் உள் வட்டம் —
புலவர் விசூர் மாணிக்கம் அவர்களின்

## வாழ்த்துக்கள்

சைவமும் தமிழும் வாழத்
தரணியில் சேவை யாற்றும்
ஐயன்மீர்! தங்க ளைப்போல்
அடியனேன் கண்டதில்லை!

முத்தான தொண்டை யாற்றும்
முத்தையா! தங்க ளைப்போல்
இத்தரை தன்னில் வேறு
எந்தலைக் கண்ட தில்லை!

செந்தமிழ்த் தெய்வம் நம்மின்
சிங்கார வேலன் பேரை
சொந்தமாய்த் தாங்கிக் கொண்டு
தூயநற் சேவை யாற்றும்,

மெய்ப்புகழ் மிக்கீர்! தங்கள்
மேலான தொண்டைப் போல
வையத்தில் வேறு யாரும்
வாஞ்சையீர்! கண்டதில்லை

பிறவியின் பயனும் நல்ல
பீடுறு தெய்வ பக்தி
நெறியினைப் பாரில் எங்கும்
நேர்மையாய்ப் பரப்பு கின்றீர்!

இந்தோனே சியா மற்றும்
இருக்கின்ற வெளிநா டெல்லாம்
எந்தையே! நீவிர் சென்று
ஈடிலாப் பணிசெய் கின்றீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மிகத் துறையில் மக்கள்
ஆன்றவ ராக வேண்டி
வான்புகழ் "ஆத்ம ஜோதி"
வண்டமிழ் ஏடு கண்டீர்!

— அந்த —

வண்டமிழ் ஏட்டின் மூலம்
வையத்து மாந்தர் தம்மை
அண்டிடும் பாவம் தன்னை
அகற்றிட வழிசெய் கின்றீர்!

மணியான சேவை யாற்றி
மணிவிழாக் காணும் நீவிர் - திருத்
தணிகையன் அருளி னாலே
தரணியில் நீடு வாழி!

மனம் வாக்குக் காயத்தாலே
மாண்புறச் சேவை யாற்றும் - நீவிர்
தினம்தினம் உயர்ந்தே இன்பத்
தீந்தமிழ் போலே வாழி!

பாலாற்று மணலி னும்நீர்
பல்லாண்டுக் காலம் வாழ்ந்து - வடி
வேலாகப் புகழைப் பெற்று
வேதம்போல் நிலைத்து வாழி!

கண்கண்ட தெய்வம் நம்மின்
கதிர்காம முருகன் அருளால்—தெய்வப்
பண்கண்ட தேவா ரம்போல்
பாரினில் வாழி! வாழி!

ஓம் சக்தி அருளைப் பெற்று
உயர்வான முத்தை யாநீர் - அருள்
ஓம்சக்தி சக்தி யென்று
ஓதியே வாழி! வாழி!

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி - கலாசாலை வீதி
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின்

# வாழ்த்துரை

ஆத்மஜோதி திரு. நா. முத்தையா அவர்களின் சஷ்டியப்தபூர்த்தி விழா நிகழ்ச்சியை நினைவுகூரும்போது மகிழ்ச்சி உண்டாகிறது.

ஒருவருக்கு இளம் பருவத்தில் ஆத்மீகசிந்தனை முளை கொள்ளுமாயின் அது பூர்வ ஜன்ம தவ விசேஷம் என்றே கருதல் வேண்டும். திரு. நா. முத்தையா அவர்களின் ஆத்மீக சிந்தனை, இளமைப் பருவத்திலேயே முளை கொண்டு விட்டது.

பெரியார் திரு. க. இராமச்சந்திரா அவர்களின் ஆத்ம சிந்தனையில் உதித்தது ஆத்மஜோதி. ஆத்மஜோதியின் வளர்ச்சி, திரு. நா. முத்தையா அவர்களின் ஆத்மீக வளர்ச்சியின் அளவு மானியாயிருப்பது சிந்திக்கத்தக்கது.

மகான்களைத் தரிசித்தல், அவர்களின் உபதேசங்களைக் கேட்டல், ஆசி பெறுதல், அவர்களின் வாழ்க்கை உயர்வுகளை எழுதுதல் என்றின்னோரன்னவை கிடைப்பது அரிதினும் அரிது. அதற்கு மகா தவம் வேண்டும்.

திரு. நா. முத்தையா அவர்களின் வாழ்க்கை, மகான்களோடு சப்பந்தப்பட்டது. அவர்களிடம் பெறத்தக்கவைகளைப் பெற்றவர்கள் திரு. நா. முத்தையா அவர்கள்.

சஷ்டியப்த பூர்த்தி விழாவில் வழங்கும் வாழ்த்துக்கள் என்றும் பதினாறு வயசு என்று சொல்லத்தக்க வகையில், திரு. நா. முத்தையா அவர்களுக்கு இளமைப் பருவத்தை நல்கி, அவர்களால் மேற்கொண்ட சேவைகளை விரிவுபடுத்தி பல்லாண்டு பல்லாண்டு பெரு நலம் பெருக்குக

என்று

திருவருளை முன்னிட்டு வாழ்த்துரை
வழங்குவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாடு 'கலைமகள்' ஆசிரியர்
திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களின்

## வாழ்த்துரை

நாவலப் பிட்டி என்னுமா நகரில்
நல்லவர் பற்பலர் நண்ணி
ஆவலோ டிறைவன் அருளினிற் குளிக்க
ஆர்வஞ் செய் கோயில் இந்நிலையம்
நாவலர் வருவார் பாவலர் வருவார்
ஞானியர் வந்திருந் துவப்பார்
மேவிய பசனை செய்பவர் வருவார்
விதம் வித அன்பர்கள் வருவார்

யாவரும் இங்கே நிலவிய சாந்தம்
இனிமையார் தருவது கண்டு
மேவியே அமைதி கொண்டுவக் கின்றார்
விளங்கிய மாதத்தாள் ஒன்று
தூவியற் பாக்கள் கட்டுரை யாதி
துன்னவே ஆத்தும ஜோதி
தேவியற் பெயரைக் கொண்டு நன் கலர்ந்து
சிந்தையில் இன்பத்தைத் தேக்கும்

அமைதியே உருவாய அமைதியே உரையாய
அமைதியே உளமென அமைந்து
சமை திரு வாளர் முத்தையா என்னும்
சால் புடைத் தொண்டர் தம் தலைவர்
இமையினை நேர மென்னினும் வீணே
இல்லாத படியருள் தொண்டு
கமையொடும் இயற்றி நல்லருட் கோயிற்
காட்சியென் றுளிர்தரச் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ இராமக்கிருஷ்ண மிஷன்
இலங்கைக்கிளையின் தலைவர்
சுவாமி பிரேமாத்மானந்தா அவர்களின்

# ஆசியுரை

மானிடராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும். அதிலும் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தல் பெருந்தவப் பேற்றினால் கிடைப்ப தொன்று. இவ்வாறு பிறந்து தானமும், தவமும் தான் செய்பவருக்கு வானவர் நாடு வழிதிறந்திடும் என்பர் பெரியோர்.

சமயத் தொண்டு செய்து சமய வாழ்வு வாழ்பவர், பலரும், புண்ணியப் பயனை எதிர் நோக்கி மண்ணையோ பொன்னையோ, பேரையோ, புகழையோ, வேண்டி வாழ்ப வராக இருப்பதைத்தான் பார்க்கிறோம். 'செயலெல்லாம் சிவன் செயல், செயலின் பயனெல்லாம் அவன் திருவடிக ளுக்கே அர்ப்பணம்' என்ற பூரணமனநிலை பெற்று சீவ பேதமற்று, சிவபோத நிலை எய்தி பிறரிடமிருந்து வரும் புகழ் இகழ் இரண்டையும் சமமாகப் பார்த்து இருவினை ஒப்பு, மலபரிபாகம் பெறுதலையே குறிக்கோளாகக் கொண்டு தெய்வீக வாழ்வு வாழ்பவரே வானவர் நாட் டுக்கும் மேலான பரமுத்தி எய்தும் பாதையில் முன்னே றிச் செல்பவராவர்.

சமயத் தொண்டையும், தமிழ்த் தொண்டையும் தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு ஆத்மஜோதி மலரை வெளியிட்டும், இன்னும்பல சமயநூல்களை எழு தியும், நம்நாட்டில் மட்டுமன்றி தென்னாடு, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களிலெல்லாம் சமயப் பிரசங்கங் கள் பல நிகழ்த்தியும் தொண்டாற்றி வரும் திருவாளர் நா. முத்தையா அவர்கள் தனது சஷ்டியப்த பூர்த்தி விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் அவருக்கு உடல் நலமும், நீண்ட ஆயுளும் நிலைக்க வேண்டும் என்று பிரார்த்திப்பதோடு கூட, வானவர் நாட்டுக்கும் மேலான இறைமைத்துவம் பெறும் பாதையில் முன்னேறிச் செல்ல இறையருள் கிட்ட வேண்டும் என்று அவன் இருபதம் போற்றி, எனது நல்லாசிகளையும் ஈந்து மகிழ்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாடு - வடஆற்காடு மாவட்டம்
இரத்தினகிரி அருள்திரு. பாலமுருகன் திருக்கோவில்
தவத்திரு. பாலமுருகன் அடிமையின்

## அருளாசி

ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்களின் மணிவிழா 22-5-78 நாவலப்பிட்டியில் சிறப்பாக கொண்டாட திட்டமிட்டிருப்பதனை அறிந்து மகிழ்வுறுகிறேன்.

தெய்வ பக்தியையும், சைவ சமய நெறியினையும் தமிழர் வாழும் பகுதியெல்லாம் சென்று நன் முறையில் பரப்பிவரும் திரு. நா. முத்தையா அவர்கள் இந்நிலவுலகில் வாழ்ந்து மேலும் அளவற்ற அருந்தொண்டாற்றிட எந்தை இளவழகனை இறைஞ்சி வாழ்த்துதும்.

---

ஐக்கிய அமெரிக்கா-சச்சிதானந்த ஆச்ரமம்
யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தா அவர்களின்

## ஆசிச் செய்தி

ஆத்மஜோதி முத்தையா அவர்களது அறுபதாண்டு நிறைவு விழாச் செய்தியறிந்து அகமிக மகிழ்ந்தேன்.

உலக சேவையே உத்தமன் பூசை என்பதற்குச் சிறந்ததோர் உதாரணமாக வாழ்ந்து வரும் எமது அன்பர் திரு. முத்தையா அவர்கள் ஒரு 'கர்மயோக தர்சினி' என்று கூறிப் புகழ்வதில் இன்புறுகின்றேன். அவர்கள் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர்
திரு. வி. சிவசுப்பிரமணியம் அவர்களின்

# வாழ்த்துரை.

அன்பு, அறம், அடக்கம் முதலிய அரிய பண்புகளைத் தனி மனிதனிடம் வளர்த்து, சமுதாயத்தில் சாந்தியும், சந்தோஷமும் நிலவச் செய்வதில் ஆத்மீகம் பிரதான பங்கினை வகிக்கின்றது. ஆத்மீகத் துறையில் வளர்ச்சி குன்றிய இடங்களில் விரக்தி, சஞ்சலம், அமைதியின்மை முதலியவை தலைதூக்கியிருப்பது கண்கூடு. ஆனால் தமிழ்ச் சமூகம் செய்த தவப் பேறினால் காலத்துக்குக் காலம் பல ஆத்மீகத் தொண்டர்கள் தோன்றி, ஆத்மீகத் துறையில் தமிழர்களை எழுச்சியுறச் செய்துள்ளனர்.

தமிழுக்கும் ஆத்மீகத்திற்கும் தங்களை அர்ப்பணித்த நாவலர் பெருமான், சுவாமி விபுலானந்தர் போன்றவர்களின் அடிச் சுவட்டில் தன்னை வழி நடத்தி, சிறந்த கல்வியறிவுடன் ஆத்மீகத் துறையின் மறுமலர்ச்சிக்காக உழைத்து வருபவர் அன்பர் நா. முத்தையா அவர்கள். என்றுமே பேரின்பத்தை அளிப்பது இறை மார்க்கமே என்பதை அறிந்து, "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற சீரிய நோக்கினைச் சிரமேற் கொண்டு "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற இலட்சிய மூச்சுடன், சமுதாயத்தின் ஆத்மிக பேறுவினாலும் எழுச்சிக்காக நாவினாலும் மட்டுமல்ல, பல ஆக்கப் பணிகள் மூலமும் அன்பர் முத்தையா அவர்கள் ஆற்றி வரும் பணி போற்றுதற் குரியது. அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழா மே மாதம் 22-ம் திகதி நடைபெறுமென அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

அன்பர் முத்தையா அவர்களின் முயற்சியினால் இயங்கி வரும் நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையமும், "ஆத்மஜோதி" என்னும் அரிய சஞ்சிகையும் அன்னாரின் ஆத்மீகப் பணியின் நிதர்சன சாட்சிகளாகத் திகழ்வதை சைவ உலகம் நன்கறியும்.

இலங்கையில் மட்டுமல்ல, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும் கூட அன்பர் முத்தையாவின் ஆன்மீகக் கருத்துரைகள் அநேகரைக் கவர்ந்திருப்பது எமது நாடு பெருமை கொள்ளக்கூடிய விஷயமாகும்.

சிவமணமும் தமிழ் மணமும் ஒருங்கே கமழ அன்பர் முத்தையா அவர்கள் ஆற்றி வரும் தொண்டுகள் யாவும் நீடூழி காலம் நிலைத் தோங்க இறையருள் துணை புரிய வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்,

வாழ்க அன்பர் முத்தையா!
வாழ்க பல்லாண்டு!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவிழா மங்கள

# வாழ்த்து

சிவாகம ரத்நாகரம், ஆகம வித்துவான்
தர்மபுர ஆதீன வேதசிவாகம பாடசாலை அதிபர்
சிவஸ்ரீ எஸ். ஸ்வாமிநாத சிவாச்சாரியார்

ஒவ்வொருவரும் தம் தம் அறுபதாவது ஆண்டு முடிவில் நடத்த வேண்டிய முக்கியமான சாந்திசஷ்டியப்த பூர்த்தி விழா.

காலன், யவனன், யமளன், சுதாம்ரன் என்ற கிரஹங்களாலுண்டாகும் அபமிருத்யு நிவாரணத்தின் பொருட்டுச் செய்யப்படும் சாந்தி விழா.

இப்போது அந்த சிறந்த சாந்திவிழாவானது ஆதமஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்களுக்கு மணிவிழா நடைபெறுவது கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்களை யான் 4–7–76ல், திருக்கேதீச்சரம் அருள்மிகு. திருக்கேதீச்சரப் பெருமான் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றபோது அவருடன் பழகினேன். அவர்கள் சாந்த மூர்த்தியாகவும் சிறந்த அறிவாளியாயும் இருப்பதை உணர்ந்தேன்.

அவர்கள் ஆத்மஜோதி என்ற பத்திரிகை மூலமாக தனது ஆன்மாவினுள் ஒளிபோல் விளங்கும், பல அரிய கருத்துக்களை பல பண்டிதர்களும் பல ஆஸ்திகர்களும் பாராட்டத்தக்க முறையில்தான் எழுதி வெளியிடுவதுடன் மற்றும் பல வித்துவான்களைக் கொண்டும் பல அரிய கட்டுரைகளை எழுதும்படி செய்து வெளியிட்டுவருவது போற்றத்தக்கதான அரிய செயல். இத்தகைய சிறந்த ஞானியான ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள் இப்போது சஷ்டியப்தபூர்த்தி விழாவைப் பெறுவதுடன் இனி. சதாபிஷேகத்தைப்பெற வேண்டுமாய் ஆண்டவனை வேண்டுகிறேன்.

சஷ்டியப்த பூர்த்திவிழாவைப் பெறும் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்களுக்கு திருக்கடவூரில் விளங்கும் ஸ்ரீ அமிருதம்ருத்யுஞ்சயேச்வர சுவாமியின் திருவருளாலும் ஸ்ரீ அபிராமி அன்னையின் திருவருளாலும்

''அகிலமதில் நோயின்மை கல்வி தனதானியம்
அழகுபுகழ் பெருமை இளமை
அறிவு சந்தானம் வலி துணிவு வாழ்நாள் வெற்றி
ஆகுநல்லூழ் நுகர்ச்சி
தொகை தரும்: பதினாறுபேறும், என்று

அபிராமி அம்மைப் பதிகத்திலுள்ளபடி குறைவின்றி இருக்க வேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மை தேவஸ்தானம்

சிவஸ்ரீ ஐ. கைலாசநாத குருக்கள் அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

நமது ஆத்மஜோதி முத்தையா என்பவர் தாவர சங்கமமாகிய சகல ஆத்மாக்களுக்கும் அறிவுச்சோதியாய் இருந்து நற்போதனைகளை பத்திரிகை மூலமும் பேச்சு மூலமும் மிகமிகத் தெளிவாக எழுதியும் பேசியும் உற்சாகப்படுத்தி வருகிறார் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அவரது வாழ்க்கை செயலிலும் பேச்சிலும் ஒரே தன்மையுடையது.

அன்னார் எண்ணூறுக்கு மேற்பட்ட பிறைகண்டு சஷ்டியப்த பூர்த்தி விழாவோடு ஆயிரம் பிறையையும் கண்டு சதாபிஷேகமும் பெற எமது அன்னை நயினை ஸ்ரீ நாகபூஷணியம்மையை வணங்கி வாழ்த்துகின்றோம்.

சுபம்.

---

## யாழ்ப்பாணம் 'திருஆலவாய்'

*சிவநெறிப்புரவலர்*

திரு. க. கனகராசா ஜே. பி., அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

*மலையகத்தில் கடந்த பல்லாண்டுகளாக சைவமணத்தையும், தமிழ் வளர்ச்சியையும் ஆக்கிவரும் அன்பர் திரு. நா. முத்தையா அவர்கள் சஷ்டியப்த பூர்த்தி விழா கண்டு இன்னும் பல்லாண்டு காலம் பணிபுரிய எல்லாம் வல்ல திருவாலவாய் அண்ணலை வேண்டுகின்றோம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலாலம்பூர்
'தமிழ்நேசன்' ஆசிரியர்
சு. நடராஜன் (நடனம்) அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

"ஆத்மஜோதி" முன்னாள் ஆசிரியராய் இருந்த திரு. க. இராமச்சந்திரன் அவர்களை நான் அறிவேன். அவர் ஆன்மீகவாதி; காந்தியவாதி; சத்திய சீலர். அவர், ஆத்மஜோதியை தமது அன்புக் குழந்தையாகவே பாவித்து, அதற்கு அருளமுதம் ஊட்டி, கண்ணைக் காத்து, வளர்த்து, இலங்கையில் சைவ நெறியைத் தழைக்கச் செய்தார்.

அத்திருமகன் இருந்தபோதே தமது வாரிசாக திரு. நா. முத்தையா அவர்களை ஆத்மஜோதி ஆசிரியர் பீடத்தில் அமர்த்தினர்.

திரு. முத்தையா அவர்களை நான் நன்கறிவேன். அவர் பல்லாண்டுகள் ஆசிரியர் தொழில் புரிந்து மாணக்கர்களை நல்வழிப்படுத்தியவர். தமிழில் புலமை வாய்ந்தவர்; சைவ நூல்களை ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்தவர்; பன்னூலாசிரியர்; திறமை வாய்ந்த சொற்பொழிவாளர்; வீர சைவர்; ஜீவகாருண்ய சீலர்; சீலத்தில் சிறந்த நண்பர்; கடவுளன்பர்: எப்போதும் நீறுபூத்த நெற்றியினர்; தூயவெண்ணிற ஆடையினர்.

திரு. முத்தையா அவர்களின் சைவத்தொண்டு சிறக்க, அது மேன்மேலும் தொடர, அன்னார் பன்னெடு நாள் நலமுடன் வாழ்வாங்கு வாழ, அவரது 60-ஆம் ஆண்டு நிறைவு விழாவில் அன்னாரை மனமார வாழ்த்துகின்றேன்; நல்லாசி கூறுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுரை–ஆதீனம் திருவருள் தவயோக

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கிய

# ஆசியுரை

எல்லாம் வல்ல எம்பெருமானது இன்னருளால் எல்லா நலங்களும் எய்துக. தங்களின் சஷ்டியப்த பூர்த்திவிழா 22-5-1978-ல் நடைபெற இருப்பதை அறிந்து மகிழ்கின்றோம்.

தங்களுக்கு சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவ ஞானமும், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானமும் உவமையிலாக் கலைஞானமும், உணர்வரிய மெய்ஞ்ஞானமும், சிந்தித மனோரதசித்தியும், அரோக திடகாத்திரமும், தீர்க்காயுளும், அஷ்ட ஐஸ்வரிய ஆதிக்கமும், நித்திய மங்கள குரு கடாக்ஷமும் மென்மேலும் பெருக, உண்டாகத் திருவருள் பாலிக்குமாறு, எல்லாம்வல்ல எம் அங்கயற்கண்ணி பங்களும் ஆலவாய் அண்ணலைப் பிரார்த்தித்து ஆசிர்வதித்த விபூதி, குங்குமப் பிரசாதமும் இத்துடன் எழுந்தருளச் செய்திருக்கிறோம். எல்லோரும் திருவருட்கவசமாக அணிந்து மேன்மையுறுவீர்களாக. எல்லோருக்கும் ஆசிர்வாதம்.

---

## நல்லை ஞானசம்பந்த ஆதீன குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக ஞானசம்பந்த
பரமாச்சார்ய சுவாமிகள் அருளிய

# நல்லாசிகள்

*"ஆத்மஜோதி" ஆசிரியர் ஸ்ரீ நா. முத்தையா அவர்களது சஷ்டியப்த பூர்த்தி விழா நடைபெறுவதறிந்து மிகமகிழ்கின்றோம். நாளும் இன்னிசையாற்றமிழ் பரப்பிய ஞானசம்பந்தப் பெருமானின் கருணையுடன் நீவிர் ஞானசம்பந்தம்பெற்று, மேன்மேலும் சைவப் பெரும்பணி புரிய எல்லாம்வல்ல இறைவன் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாங்கொடை — சாந்தி நிலைய ஸ்தாபகரும் தலைவருமாகிய

**Dr. K. M. P. முஹம்மது காசிம் Ph. D., அவர்களின்**

# அருளுரை

## ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழா.

அறிவு நிலை பெற்று அமைதி மனம் கண்டு ஆனந்த மயமாகி இறை தியா[illegible]த்திலேயே இன்பமுறும் அன்பர் திரு. நா. முத்தையா அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடும் நற்செய்தி அறிந்து பெரிதும் மகிழ்ச்சி.

ஆரம்பத்தில் இளைஞர்களுக்கு இனிய நற் கல்வியையும் ஒழுக்கத்தையும் போதிப்பதோடு, குறிப்பாக மலைநாட்டு பகுதிகளில் வசிக்கும் பாமர மக்களின் உள்ளங்களிலே பக்தியின் மகிமையை வித்திட்டார்கள். யோக சாதனையில் ஈடுபட்டு, பிரம்மச்சரியத்தை வழுவாது கடைப்பிடித்து, ஞான நெறியில் தீவிரமாக முன்னேறி தன் சொந்த அனுபூதியில் கண்டறிந்த உணர்ந்த உன்னத அனுபவங்களை அழகிய செந்தமிழில் தெளிவாகப் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லமை பொருந்திய நிபுணத்துவம் வாய்ந்த கலைஞர்.

மண்ணுலக வாழ்விலே மயங்கிடும் மக்களை இறைவனடியெனும் இன்ப நிலையத்திற்கு அழைத்துச் செல்வதே அவர்கள் ஆத்மஜோதி மூலம் செய்யும் சிறந்த, உயரியத் தொண்டாகும்.

வாழ்க்கை வனப்பு மிகுந்ததோர் சோலையாக மாற வேண்டுமானல் மனித ஜீவியத்தின் உயிர் நாடியாகிய ஆத்மீக விடுதலையை நாம் அவசியம் பெற்றாக வேண்டும். பண்பாடிழந்து, பக்தி ரசனை கெட்டுக் குழப்பம் நிறைந்த மனத்துடன் காணப்படும் இன்றைய மனிதனுக்கு அருள் மணங்கமழும் ஆத்மஜோதியைப் படிப்பதே ஆத்மீக வாழ்வை ஆர்வத்துடன் வாழத் துணை செய்யுந் தூண்டுகோலாகும்.

மனிதஜீவியத்தின் உயிர் நாடியாய் அமைந்துள்ள ஆத்மீகப் பண்பாடு அழியும் போதுதான் வாழ்வு வரட்சியாகி மனிதன் துக்கத்திற் சுழல்கிறான். ஆகவே, ஞானவழியில் நாட்டமுள்ள உத்தம நண்பர்களின் உறவும், சாதுசங்கப் பழக்கமுமே வாழ்வின் புனிதக் குறிக்கோளாகி முத்தி நிலை பெறச் சிறந்த மார்க்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தன்னுணர்வைத் தானறிந்து அத்தெய்வீக நிலையிற் சஞ்சல மற்றுவாழ்வதே ஆத்மீக மறுமலர்ச்சியும் விடுதலையுமாகும்.

அமைதியை நாடி ஆத்மீக சாதனையிலே ஈடுபடும் அனைவரும் தியானமெனும் மனங்கடந்த மகத்தான நிலையில் சார்ந்து, யாரிடத்திலும் ஆசையும் வெறுப்பும் இன்றி, பற்று அகற்றி, புலன்களை வென்று, அன்பும் கருணையுங்கொண்டு, துக்கமும் சுகமும் சமமாகக் கருதி, செய்யவேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்துகொண்டு போவதே ஞான வாழ்வின் ரகசியமாகும். வெகுளி, அச்சம், மனக் கிளர்ச்சி இவற்றிலின்றும் விடுபட்டு, பயமற்று எந்நிலையிலும் எதையும் நாடாமல் சாந்தமாக வாழ்வதே பெரிய தவமாகும். தியானத்தில் ஈடுபடுவது என்பது எங்கும் நிறைந்த உணர்வெளியில் புகுந்து நான் எனும் அகந்தை முற்றிலும் நீங்கப் பெற்ற பேரின்ப நிலையாகும். அந்தத் தெய்வீக மோன நிலையில் சதா காலமும் ஓய்ந்து சுட்டற்ற பூரணத்தில் சம்பூர்ணமாகச் சரணடைவதே மட்டற்ற ஆனந்தம் பெற சிறந்ததோர் மார்க்கமாகும். அந்த ஆத்மீக [illegible]னுபூதி நிலையை மனிதர்கள் தினசரி வாழ்க்கையில் அறிந்திடல் வேண்டும், அடைதல் வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு தொண்டாற்றிடும் உத்தம நண்பர்தான் திரு. முத்தையா அவர்கள். ஆன்மீக அறவழியில் அரிய பணியாற்றும் அவர்கள் அல்லாஹ்வின் நிறையருளால் சீரோடு, சிறப்போடு, வளமோடு, வனப்போடு பல்லாண்டு காலம் வாழ்ந்திட வாழ்த்துகிறேம்.

வளர்க ஆத்மீகத்தொண்டு! வளர்க அருள்நெறி!!
வளர்க அருள் நேயர்கள்!!!

**அமுத மொழிகள்:-**

உண்மையே பேசுக
நன்மையே பேசுக
அன்பாகப் பேசுக
மெதுவாகப் பேசுக
இனிமையாகப் பேசுக
சிந்தித்துப் பேசுக
சமயமறிந்து பேசுக
சபையறிந்து பேசுக
பேசாதிருந்தும் பழகுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. கி. லக்ஷ்மண ஐயர்,
இலங்கை கல்வி அமைச்சு, வித்தியாபதி அவர்களின்

# வாழ்த்துரை

அன்பர் திரு. நா. முத்தையா அவர்கள் அறுபதாவது ஆண்டைப் பூர்த்தி செய்தமையையொட்டி விழா வொன்றைக் கொண்டாடவும் ஆத்மஜோதியிலே சிறப்பிதழ் ஒன்றை வெளியிடவும் ஏற்பாடுகள் நடைபெறுவதை அறிந்து பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

திரு. முத்தையா அவர்களைப் பாராட்டும் வாய்ப்பொன்று அண்மையிலே எனக்குக் கிடைத்தது. அவர்கள் தாம் எழுதி வெளியிட்ட "திருமுறைச் செல்வம்" என்னும் நூலுக்கு மதிப்புரை எழுதும் சந்தர்ப்பத்தை எனக்கு அளித்திருந்தார்கள். நான் எழுதிய சிறிய மதிப்புரையிலிருந்து சில வசனங்களை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

"திருமுறைச் செல்வம் என்னும் இந்த நூல் வெளிவருவது மகிழ்ச்சி தருகின்றது. இதனை எழுதிய ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள் எந்த விஷயத்தை எடுத்தாலும் அந்த விஷயத்தைப்பற்றித் தெளிவாகவும் அழகாகவும் பேசவும் எழுதவும் வல்லவர். தமது பேச்சுத்திறமையையும், எழுத்துத் திறமையையும் நமது சமய வளர்ச்சிக்காகவே தமது வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்து வருபவர். சமயத்துறையிலே சமரச மனப்பாங்குடையவர். பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக அமைபவர். போற்ற வேண்டியவற்றைப் போற்றுவதற்கும் கண்டிக்க வேண்டியவற்றைக் கண்டிப்பதற்கும் தயங்காதவர்."

திரு. முத்தையா அவர்கள் நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட கல்லூரி அதிபராக இருந்து கல்வித்துறையில் ஆற்றிய பணி, ஆத்மஜோதி ஆசிரியராக இருந்து உலகெங்கணும் பரப்பி வரும் ஆத்மீக ஒளி, மலையகத்தில் நடத்திவரும் சமயப்பிரச்சாரத்தின் மூலம் செய்துவரும் சமயத் தொண்டு, ஏனைய நிறுவனங்களோடு இணைந்து ஆற்றிவரும் சமய இலக்கியப் பணிகள், தற்போது கடல் கடந்து சிங்கப்பூர், மலேசியா ஆகிய இடங்களில் புரிந்து வரும் அரும் பணிகள் அவர் இயற்றி வெளியிட்ட நூல்கள் ஆகிய ஒவ்வொன்றையும் விரிவாக விவரிப்பதாயின் பெரும் அத்தியாயங்களாகும்.

கல்வித் துறையிலே அவர் ஆற்றிய பணியின் சிறப்பையும் நிர்வாகத்திறனையும் நேரிலே காணவும் பாராட்டவும் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தமை பற்றி மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு. முத்தையா அவர்கள் நல்ல ஆரோக்கியத்துடன் பல்லாண்டு வாழ்க எனவும் அவர் மேற்கொண்டுள்ள பணிகள் யாவும் சிறக்க எனவும் மனமாற வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிஷிகேசம் சிவானந்த நகர்

சுவாமி நிர்மலானந்தா அவர்களின்

## ஆசிச் செய்தி

தங்களின் சஷ்டியப்த பூர்த்தி விழா ஆத்மஜோதி சிறப்பு மலருக்கும் தாசனின் அன்பின் ஆசியும், வாழ்த்தும் வழங்கி மகிழ்ச்சி கொள்கிறேன். தங்களின் அருட்தொண்டு உலகிற்கு மேன் மேலும் கிட்ட நோயற்றவாழ்வும் குறைவற்ற செல்வமும் இறைவன் அருளப்பிரார்த்திக்கிறேன். தாங்கள் பல நூற்றுண்டுகள் வாழ்ந்து ஆத்மஜோதியின் அருட்பணியை வளர்க்க வேண்டுமாக. புனித விழாவினை நடத்தும் அன்பர்களுக்கும் அடியேனுடைய சிரம் தாழ்த்திய வணக்கமும் வாழ்த்தும் உரியது.

வேல்முருகனின் வெற்றிவேல் துணைபுரியுமாக. அடியேனும் நடந்த தசகோடி அர்ச்சனையில் தங்களையும் அடிக்கடி நினைவும் கொண்டேன். மணிவிழா காணும் ஆத்மஜோதி திரு. முத்தையா பல்லாண்டு பல்லாண்டு வாழ்வாராக.

---

தமிழ் நாடு — மகாவித்துவான்

பண்டித நடேசனுர் அவர்களின்

## வாழ்த்துரை

நலம் சாலியரோ! நலம் சாலியரோ!
தொலையா நலமே நலம் சாலியரோ!
நாவலப் பிட்டி நன்மக்கள் தலைவ!
நற்குணப் பெரும! நாவலந் தீவின்
சைவ வடிவோய்! சற்குணக் குன்றே!
அருமை நாயக! அண்ணு வாழ்க
அன்பும் தொண்டும் அணிந்த ஆசிரிய!
கற்ருேர் போற்றும் காணரும் கலைஞ
நற்றவ மணியே நாளும் வாழ்க!
அறுபத மாண்டுநல் அணிவிழா காணும்
முத்தையா வாழ்க! முன்னவனருளால்
பல்லாண்டு வாழ்க! பல்லாண்டு வாழ்கவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தோனேசிய இந்து சங்க பிரமுகர்
மு. ஸ்ரீராமுலு அவர்களின்

## வாழ்த்துரை

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்பது ஔவை மூதாட்டியாரின் அருள் வாக்கு!

அந்த மனிதப் பிறவியும் பிறவிப் பெருங் கடலில் ஆழ்ந்து அமிழ்ந்து விடாமல், சமுதாயத் திற்குப் பயன் தருவதாய் அமைதல் மிகவும் அரிது.

தவத்திரு நா. முத்தையா அவர்களின் வருகையால் இந்து நேசியா. மீடான் வாழ் இந்துக்கள் நன்கு பயன் அடைந்தனர். தவத்திரு. நா. முத்தையா அவர்களின் சமயச்சொற்பொழிவுகள் மக்களின் மனதை கவர்ந்தது, மீடான் ஸ்ரீமாரியம்மன் ஆலய நிர்வாகஸ்தர்களின் அழைப்பை ஏற்று மீடான் மா நகரில் ஒரு மாதகாலம் தங்கி ஒவ்வொரு நாளும் கோவில்களிலும், இயக்கங்களிலும் எந்தப் பிரதிபயனும் கருதாது சமயச் சொற்பொழிவுகள் செய்து வந்ததோடு, மீடானிலே தியான சபை ஒன்றை உருவாக்கி அந்த தியான சபை வழி பலர் இன்று ஆத்ம பலம் பெற்று வருகின்றனர். ஆத்ம ஜோதி என்ற பத்திரிகை வாயிலாக அரனருளமுதத்தை மக்கள் மனம் கொள்ளும் வகையில் புகட்டி வருகின்றார்கள்.

தாம் எளிமையும், சீலமும், தவமும் நிறைந்த சீரிய ஒழுக்க நெறி நின்று, பிற மக்களும் செந்நெறிசெல்ல வழிகாட்டும் நமது சுவாமி அவர்கள், தமது அறுபதாவது ஆண்டு பூர்த்தி விழாவைக் கொண்டாடுகிற இவ்வேளையில், அன்னாரின் அருள் தொண்டு நீடு நிலைக்க வேண்டும், அதற்கான உடல் நலமும், நீண்ட ஆயுளும் இன்னும் பல்லாண்டுகள் நீடு வாழ திருவருள் துணை நிற்க வேண்டுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மாப்பு

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்
## ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமி தம்பிரான் அவர்களின்
## அருளுரை

### அடியார் பெருமை

அடியவர்களிலேயே சின்னவர் என்றும் பெரியவர் என்றும் பேதம் கிடையாது. ஆனால் நம் தவராஜ சிங்கம் ஸ்ரீ ஆதி குமரகுருபரசுவாமிகள் தம் மதுரைக்கலம்பகத்துள் "சிற்றடியார்" என்ற ஒரு சொல்லை அருளுகின்றார்கள். அது மட்டுமன்று... "அந்தச் சிற்றடியார்கள் இடும் குற்றேவல்களை நான் சிரசின்மேலேற்று "நமக்கு இப்பேறு கிடைத்தவாறு என்ன ஆச்சரியம்" என்று இறுமாப்பு அடைய வேண்டும். அஃது ஒன்றை வேண்டியே ஆதியம் கடவுள் நின் பொன்மலர் பொதுளிய சின்மலர் பழிச்சுதும்-திருவடியைப் புகழ்கிறேன்" என்று அருளுகிறார்கள். இது சத்சங்க விசேஷம்; நல்லவருடன் இணங்குதலின் நலனைப் புலப்படுத்தும் பகுதி; சிற்றினம் சேராது பெரியவரைத் துணைக்கோடலின் பீடு உணர்த்தும் இடம், சங்கம வழிபாட்டின் சால்புணர்த்தும் பகுதி.

'சிற்றடியவர்க்கே குற்றேவல் தலைக்கொண்டு' என்ற தொடரை மேலும் சிந்திப்போம்.

சமய வாழ்வு வேறு உலகியல் வாழ்வு வேறு என்று பிரிக்கப் பிரிக்கத்தான் தனி மனித வாழ்வில் ஒழுங்கு, ஒழுக்கம் அற்றுப்போகிறது. அருளாளர்கள் சமய உலகியல் வாழ்வுகளை இணைத்தே பாதை அமைத்தார்கள்.

ஆணவம் உள்ளவர்கள் கௌரவம் பார்ப்பார்கள். ஆணவம் குன்றக் குன்ற கௌரவம் என்னும் போலித்திரை விலகும்.

நாம் நல்லவராக இருந்து கொண்டு அதனால் ஒரு சமுதாய அந்தஸ்து ஏற்படுகிறதே அது தேவை. ஆனால் பெற்ற கல்வி, உற்ற செல்வம், மற்ற பதவி இவற்றால்தான் ஏதோ ஆகாசத்தில் சஞ்சரிப்பது போல வரட்டு கௌரவத்தைக் கற்பித்துக்கொண்டு வாழும் வாழ்க்கை கொண்டவனைச் சமுதாயத் தோப்பில் ஒரு தனி மரம் என்றுதான் வருணிக்கிறோம்.

மாபெரும் சேரமன்னர் சேரமான்பெருமாள் நாயனார் தன் பிரஜை என்றும் பாராமல் சலவைத் தொழிலாளி என்றும் கருதாமல் 'அடியேன் அடிச்சேரன்' என்று கூறி வணங்கியதால பெற்ற— ஆணவம் அழிந்த நிலையில் அடைந்த — அந்த அந்தஸ்துதான் உண்மையான கௌரவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்ன வேலைகளையும் கூச்சமின்றிச் செய்யும் அடியவர்கள் சிற்றடியவர்கள். ஒரு திருக்கோயில். அங்கே புல் மண்டிக் கிடக்கிறது. ஒரு தொண்டர் அதைப் பார்க்கிறார்; கோயில் பொது இடம்; அது தூய்மைபெறச் செய்யவேண்டியது மனிதக்கடமை' என்று கருதுகிறார். புல் செதுக்கும் பணி செய்கிறார். அப்போது வேறொரு பக்தர் அங்கே வருகிறார். 'ஐயா நான் செதுக்கி வைத்துள்ள புல் குவியலை திருக் கோயிலுக்கு வெளியில் எடுத்துப்போட உதவி செய்யலாமா? என்று கேட்கிறார். வந்தவர் சுய கௌரவம் பார்க்காமல் தொண்டுக்கு உதவு கிறார். அந்தத் தொண்டர்தான் சிற்றடியார்; பணம் பதவிகளினால் இல்லாமல் சுய முயற்சிகளினால் தொண்டு செய்பவர்தான் சிற்றடிய வர்; அவருக்குச் செய்யும் உதவிதான் 'சிற்றடியவர்க்குச் செய்யும் குற்றேவல்'. தொண்டர்க்குத் தொண்டராகும் இத்தூயநிலை, பொது வாழ்வுக்கு மிக இன்றியமையாதது.

இக்கருத்தெல்லாம் உள்ளடங்கவே ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்
சிற்றடியவர்க்கே குற்றேவல் தலைக்கொண்டு
அம்மா கிடைத்தவா என்றே
செம்மாப்புறும் திறம் - ஆகிய சத்சங்க பாக்கியம்
வேண்டுகிறார்கள். உலகினர்க்கு வற்புறுத்துகிறார்கள்.

## குருபக்தி

ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள் அவர்கள் தருமை ஸ்ரீமாசிலாமணி தேசிக சுவாமிகளிடம் ஞானோபதேசம் பெற்றவர்கள். அவர்களிடம் எல்லையில்லாத பக்தித்திறம் பூண்டவர்கள். அந்தக் குருபக்திக்கு இணையான வேறொன்றை ஏகதேச உதாரணமாகக் கூட நம்மால் சொல்ல முடியாது. குருபக்தி இல்லாத வாழ்வு வெறும் ஜட வாழ்வு. அதுவும் துறவு வேடம் பூண்டவனுக்குக் குருபக்தி இல்லை என்றால் அவன் மனிதனே இல்லை.

தம் குருதேவர் மீது பண்டார மும்மணிக்கோவை பாடிக்களித்த வர்கள் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்.

"அன்னவர் கமலப் பொன்னடி விளக்கி—அத்
தீம்புனல் அமுதம் ஆர்த்தனன் அதனால்
வேம்பெனக் கொண்டனென் விண்ணவர் இமுதே"

எண்ணிறந்த சித்துக்கள் அவருக்குச் சித்தித்தன; ஸ்ரீவாரணசியில் அற்புதங்கள் பல நிகழ்த்தியருளினார்கள்; காசியில் ஸ்ரீ குமாரசாமி மடம் ஸ்தாபித்தார்கள்; அறச்சாலைகள் நிறுவியருளினார்கள். தென் பாரதத்துக்கும் வடபாரதத்துக்கும் இணைப்புப் பண்புருவாக அமைத் தருளினார்கள். தன் குருதேவரை முன்னிலைப்படுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்நெறி பெற்று இன்பமார்ந்திருக்கும்
பிறவா நன்னெறி பெறப்புரிவதுவே—என்று வேண்டி
ஆங்கது புரிதற்கு அரிதெனின்''

நின் திருவடிக்குத் தொண்டு செய்யும் அடியவர்கள் உண்டு எறிந்த இலையில் எஞ்சியதையுண்ணும் ஞமலியாகப் பிறந்தாலும் நின் அருளை உண்டவனுவேன் என்ற பக்தியுரை நம்மை ஆனந்தக் கண்ணீர் வடிக்கச் செய்கிறது. அந்த வைராக்கியம் நமக்கு பிரமிப்பூட்டுகிறது. வழிகாட்டுகிறது.

திரு. நா. முத்தையா

இலங்கை ஆத்மஜோதி இதழ் ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்களை வாழ்த்து முன், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள், அ[illegible]பார் பற்றியும் குருபற்றியும் சிந்தித்ததைச் சொன்னேம். திரு. முத்தையா அவர்கள் இவ்வுயரிய குணநலன்கள் கொண்டவர் என்பதுடன் அவற்றை தம் இதழில் பரப்பியவர் என்பதனுலாகும்.

திரு. முத்தையா அவர்கள் சதாபிஷேகம் கொண்டு, சால்புகள் யாவும் உற்று, மரபு தழைக்க மாண்புகள் செழிக்க நீடினிது வாழ்வாராகுக எனவும், ஆத்மஜோதி தழைத்துச் செழிப்பதாகுக எனவும் செந்தி நகர்க்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறேம்.

சுபம்.

---

## தோப்புக்கரணம் ஏன் போடுகிறேம்?

பிள்ளையாருக்கு எதிரே நின்று தோப்புக்கரணம் போடுகிறேமே, அதை நமக்கு எல்லாம் காட்டியவர் மகாவிஷ்ணுதான் என்று ஒரு கதை இருக்கிறது. ஒருசமயம் மகாவிஷ்ணுவினுடைய சக்கரத்தைப் பிடுங்கிக்கொண்டு அவரது மருமகனை பிள்ளையார் தம் வாயில்போட்டுக் கொண்டு விட்டாராம். பிள்ளையாரிடமிருந்து பிடுங்குவது என்ருல் அது முடியாது. அவர் மிகவும் பலமுடையவர். அதட்டி மிரட்டி வாங்கவும் முடியாது. ஆனல் அவரைச் சிரிக்கவைத்து சந்தோஷத்தில் அவர் வாயிலிருந்து சக்கரம் கீழே விழுந்தால் எடுத்துக்கொண்டுவிடலாம் என்று மகாவிஷ்ணுவுக்குத் தோன்றியதாம். உடனே நான்கு கைகளாலும் காதுகளைப் பிடித்துக்கொண்டு ஆடினராம். விநாயகர் விழுந்து சிரித்தார். சக்கரம் கீழே விழுந்தது. விஷ்ணு எடுத்துக் கொண்டார்.

''தோர்பி: கரணம்'' என்பதே தோப்புக்கரணம் என்று மாறியது. ''தோர்பி: என்ருல் ''கைகளினல்'' என்று அர்த்தம். கர்ணம் என்ருல் ''காது', ''தோர்பி கர்ணம்'' என்ருல் கைகளால் காதைப் பிடித்துக்கொள்வது.

—சங்கராச்சாரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் மிகுந்து வாழி

அருட்கவி சி. விநாசித்தம்பி
அளவெட்டி.

வெண்பா

வாழ்திரு. நா. முத்தையா மாண்புப் பெயரானே
ஏழ் கதிரின் பானுநிகர் ஏந்தலே—சூழ்சைவத்
தண்பயிரின் காவல, நின் சஷ்டியப்த பூர்த்திவிழா
பண்புயர்வைக் காட்டும் பளிங்கு

அன்புவளர் முத்தையா வாசிரிய மாமணியே
பொன்பரவு சைவம் பொழிமுகிலே – ஒன்பதுகோள்
நின்னுண் டுறுபதுமேல் நீடுநா ளுண்டுதந்தார்
என்னுளும் மெய்ப்பணிசெய் யென்று

அன்று தொடக்கி வைத்த ஆத்மஜோ திச்செல்வம்
இன்று பலரை இறைபதத்தில்—ஒன்றுதற்குக்
காரணனும் நீயன்றோ, கற்பகமே நின்றொண்டிற்
பூரணனாய் வாழ்க பொலிந்து

விருத்தம்

வேதமொ டாகமங்கள் விளங்கிடு மிதிகாசங்கள்
ஓதிடு புராண நூல்கள், உய்த்துணர்ந் துண்மை கண்டு
மேதினி நலம் பிறக்க விரிவுரை செய்யும் மேலோய்
மாதொரு பாகர்பாத மலரொளி வளர்ந்து வாழி

அன்னையே மாலைவூரி னருந்தவப் புதல்வா, சேவை
உன்னியே நாவலூரில் உறைந்தவா, அமரராகி
மன்னிய இராமச் சந்த்ரன் வரம்புயர் வயலில் பக்திக்
கனி எலாம் ஆத்மஜோதிக் கனிதந்தாய் தமிழ்போல் வாழி

தூயன காணும் நெஞ்சம் சொற்பொருள் செழித்தவாக்கு
தீயன சேரா வாழ்க்கை, சிவநெறி பிடித்த கல்வி,
தாயெனத் தழுவும் கண்கள், தாங்கிய மகானே, ஓங்கும்
வேயன தோளிபங்கன் மெய்யருள் மிகுந்து வாழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதியை அகில மெங்கும் பரப்பும்
# ஆசிரியர் முத்துஜோதியின் அறுபதாண்டு
# நிறைவுவிழா வாழ்த்து

ஈங்கோய்மலை
ஸ்வாமி அத்வயானந்த ஸரஸ்வதி

அந்தர் ஜ்யோதி: பஹிர் ஜ்யோதி: ப்ரத்யக் ஜ்யோதி: பராத்பர:
ஜ்யோதிர்: ஜ்யோதி: ஸவயம் ஜ்யோதி ஆத்ம ஜ்யோதி: சிவோஸ்ம:யஹம்
என்பது மந்த்ரம்]

இதன் உரைப்பா:-

உள்ளுறும் ஒளியே வெளிநிறை ஜோதியாம்
உள்ளுறும் திசையெலாம் ஒளிர்ந்திடும் ஜோதி
ஏற்றமாம் எவற்றினும் ஏற்றமாம் அதனின்
ஏற்றமா யதுவாம் இலங்குறும் ஒளிக்கெலாம்
ஒளியினை அளிக்கும் ஒளியதாம் ஜோதி
ஒளிபெற் றொளிரும் ஒளிபோல் அன்றி
தானே ஒளிரும் தகையுறும் ஜோதி
யானே நீயே யாவையும் ஆகும்
ஆத்ம ஜோதி அஹம்சிவம் ஆகும்
ஆத்ம ஜோதியை அளிக்குமிம் முத்தே.

ஆத்மஜோதியை அறிந்தவரே ஞானியாவார். முக்தர் எனப் படுவார். ஆத்ம ஜோதியை அறிந்து அடையப்பெற்றவரே மனிதப் பிறவி எடுத்ததன் பயனை பெற்றவர் ஆவார். இத்தகைய ஆத்மஜோதியை அறிந்து அடைவதற்குரிய கர்ம, பக்தி, யோக, ஞான நெறிகளைக் காட்டுவன ஆத்மஜோதி என்னும் மலர்கள் ஆகும். இந்த ஆத்மஜோதியைத் திங்கள்தோறும் வெளியிட்டு உலகெங்கும் பரப்புபவர் இதன் ஆசிரியர்—இலங்கை, நாவலப்பிட்டி, ஆத்மஜோதி நிலையத் தலைவர் நா. முத்தையா என்னும் ஜோதி முத்து ஆவர்.

முடிவுற்ற பேரின்ப முக்தியைப் பெறுவதற்குக் கலப்பற்ற பக்தியே ஞானமே காரணம் என்று நன்னூல்கள் நவில்கின்றன. ஆகவே வேண்டியவற்றில் வேண்டாதவற்றைக் கலக்காத செந்நெறியுடையவரே சிறந்தவர் ஆவார்.

தற்காலத்தில் எங்கு பார்த்தாலும் கலப்புக்களைச் செய்வதே வழக்கமாக ஆகிவிட்டது. கலப்படங்களைச் செய்யாத சுத்த செந்நெறியில் நிற்பது மிக மிக மிக அரிதாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணும் பொருள்களிலெல்லாம்கூட உண்ணத் தகாத பொருள்கள் கலக்கப் பெறுகின்றன. கலக்க வேண்டாத வற்றிலெல்லாம் கலப்படங்களைச் செய்வதே சரியான நெறி என்றுகூட ஆகிவிடும் போலிருக்கின்றது. கலப்படங்கள் செய்யாதவர்கள் பிழைக்க வழி தெரியாதவர்கள் என்று, கலப்புக்கள் செய்வோரால் கருதப்படுகின்றனர். இவர்களெல்லாம் கடவுள் ஒருவர் இருக்கின்றார். அவர் நன்மை செய்கின்றவர்களுக்கு நன்மையையும் தீயன செய்கின்றவர்களுக்கு தீயவற்றையும் அவசியம் செய்தே தீருகின்றார். அவர் அறியாதது ஒன்றுமில்லை என்பவற்றை அறிகின்றிலர் போலும். இவர்கள் மனிதராய்ப் பிறந்ததன் பயன்தான் என்னவோ!

எங்கு பார்த்தாலும் பாமர மக்கள் மிக அதிகமாக விரும்பிச் சென்று பார்க்கும் பேசும் படக் காட்சிகளிலெல்லாம் காணத்தகாத காட்சி[illegible] கலக்கப்படுகின்றன. பக்திச் சுவை மிகுந்த பக்தியைப் பரப்பக்கூடிய நல்ல கதைக் காட்சிகளில்கூட பக்தியைப் பாழ்படுத்தி மறக்கச் செய்து, வேண்டத் தகாத செய்கைகளில் ஈடுபடச் செய்யும் காதல் சிற்றின்பக் காட்சிகள் கலக்கப்படுகின்றன. இப்படிக் கலப்புகள் இல்லாவிட்டால் காட்சிகளே நடைபெறாது என்று எல்லோரும் கருதுகின்றனர்.

இவற்றைப் போலவே அறிவு, பக்தி, ஞானம், நன்னடை ஆகியவற்றைப் போதிக்கும்—பரப்பும் - பத்திரிகைகளிலும்கூட — இலைநிறைய நல்ல சுவையுள்ள பரிசுத்த உணவைப்படைத்து அதில் ஒரு பக்கத்தில் சிறிது மலத்தையும் வைத்திருப்பது போல - வேண்டாத விஷயங்களும் கலக்கப்பெறுகின்றன.

இத்தகைய இக்காலத்தில் இத்தகைய சூழ்நிலையிலும்கூட ஆத்மஜோதித் திங்கள் மலர்கள் கலப்படமற்ற பரிசுத்தமான பக்தி, அறிவு, ஒழுக்க ஞானங்களைக் கற்பிக்கின்றன. சிறப்பாக எல்லோரும் ஏற்றுக் கொள்ளும்படி தமிழ் தெரிந்த எல்லா தேசங்களிலும் ஏன் சுவர்க்கத்தில்கூட வெற்றிகரமாகப் பரப்பி வருகின்றன. இங்ஙனம் வீரமுரசு கொட்டி, முப்பத்தொரு ஆண்டுகளாகியும் இன்னும் மென்மேலும் வளர்ந்தோங்குகின்றன.

இத்தகைய ஆத்மஜோதியைப் பரப்பும் ஜோதி முத்து ஐயா அவர்களுக்கு அறுபது ஆண்டுகள் நிரம்பிவிட்டன. இந்த பரிசுத்தமான தெய்வீக வாழ்க்கை நெறியிற் செல்கின்ற ஆசிரியர் அவர்கள் நல்ல ஆரோக்கியத்துடன் பல்லாண்டு வாழ்ந்து செந்நெறியை ஆத்மஜோதியின் மூலம் எங்கும் வெற்றிகரமாகப் பரப்ப எல்லாம் வல்ல கடவுள் சக்தி அருள்புரிய எல்லோரும் வேண்டுவோமாக! ஓம்...ஓம்.........ஓம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி ஆசிரியரும் சைவப் பெரியாருமான திரு. நா. முத்தையா அவர்களின் 60-ஆம் ஆண்டு

# நிறைவு விழா

## மாத்தளை—அருணேசர்

திரு. நா. முத்தையா அவர்களை அறியாதார் இலங்கையில் இருப்பது மிக்க அபூர்வமே. இலங்கையில் மட்டுமன்றி தமிழ்நாடு, சிங்கப்பூர், இந்தோனேசியா முதலிய நாடுகளிலும் இவரைப்பற்றிப்பலர் அறிவர்.

அன்னவரின் அறுபதாம் ஆண்டு நிறைவுறுவதை நினைவுறுத்தும் பொருட்டு அவருக்குப் பல அன்பர்கள் பாராட்டு விழா கொண்டாடு கிறார்கள். 22-5-78இல் அவருக்கு அறுபது ஆண்டுகள் நிறைவுறு கின்றன. இத்தகைய பெரியோர்களுக்குப் பாராட்டுவிழா நடத்துவது மிகமிக அவசியமானது என்பதை நாம் கூறித்தெரியவேண்டியதில்லை.

திரு. முத்தையா அவர்கள் பள்ளிக்கூட ஆசிரியராக இருந்து கொண்டே சமயப்பிரச்சாரத்திலும் ஈடுபட்டுக் கடந்த 37 ஆண்டுகளாக மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் மற்றும் நகர மக்களுக்கும் இடையே இருந்து சமயப்பணி ஆற்றிவருகின்றார்.

காலஞ்சென்ற சைவப் பேரறிஞர் திரு. க. இராமச்சந்திரா அவர் களின் ஆதரவும், ஆசியும் பெற்று ஆத்மஜோதி மாதாந்த வெளியீடு தொடங்கி 30 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து வெளிவந்துகொண் டிருக்கிறது. சமயப்பணி செய்யும் முறையில் வெளிவரும் எந்தப் பத்திரிகையும் இத்தனை காலம் இடைவிடாது நடந்துவருவது இலங் கையில் எங்குமே கிடையாதெனலாம்.

ஆத்மீக சம்பந்தமான பல அரிய கட்டுரைகளை மாதந்தோறும் தாங்கிவரும் இச்சஞ்சிகை, திரு முத்தையா அவர்களின் தளரா ஊக்கத்தினாலும் உழைப்பினாலும் இவ்வாறு நிலைபெற்று வளர்ச்சி யடைந்துள்ளது.

திரு. முத்தையா அவர்கள் சமயப்பிரச்சாரம் மாத்திரமன்றி பல ஆத்மீக சம்பந்தமான நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். அவை—திருமுறைக்காட்சி, திருமுறைச் செல்வம், முப்பெருஞ் சித்தர், ஸ்ரீலஸ்ரீ சிவபாலயோகி, கேதார்பத்திரி யாத்திரை, ஏழாலை, தத்துவக்கதைகள், பன்னிருமாத நினைவுகள், இலங்கையில் ஓர் இல்லறஞானி என்ற நூல்களாகும்.

கடந்த பல ஆண்டுகளில் இந்தியாவிலும் மலேசியாவிலும் நடை பெற்ற சமய மகாநாடுகள் பலவற்றில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து மகாநாடுகளின் வெற்றிக்கு ஆக்கபூர்வமான பல கருத்துக்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்கூறியுள்ளார். முக்கியமாக இளஞ்சிறுர்களுக்கு இளமையிலிருந்தே சமயக்கல்வி புகட்டப்படவேண்டும் என்றும், பாடசாலைகளனைத்திலும் சமய அறிவு கட்டாய பாடமாக்கப்பட வேண்டும் என்றும், அத்துடன் உலகெங்கணும் பசுவதை தவிர்க்கப்படவேண்டும் என்றும் மகா நாடுகளில் வற்புறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலய அதிபராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றுள்ள இப்பெரியார் தமது ஓய்வு நேரம் முழுவதையும் சமயப்பணிக்கென்றே அர்ப்பணித்துள்ளார்.

பிரமச்சாரியாகவே இருந்து துறவு நிலையில் வாழ்ந்து வரும் இவருடைய அரிய பணியை நாம் மனமார வாழ்த்துகின்றதோடு, அவருக்கு மேலும் நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் கொடுத்து தொடர்ந்து சமயப்பணிபுரிவதற்கு அருள்புரியுமாறும் இறைவனை வேண்டிக்கொள்ளுகின்றோம்.

---

வடகுமரை — சார்வாய்

## ஸ்ரீ நொச்சியூர் சுவாமிகளின்

# வாழ்த்துரை

அன்பு நிலையம் சச்சிதானந்த நிலையம் வரும்
அடியவர்க் கமுத நிலையம்
அறிவுகலை வளர் நிலையம் தரும சமரசநிலையம்
அருளாத்ம ஜோதி நிலையம்
இன்பவெளி நிலையம் ஏகாந்த அனுபவ நிலையம்
எண்ணுவோர்க்கேற்ற நிலையம்
இலகு முத்தமிழ் நிலையம் அத்துவித வேதாந்த
யோக கைவல்ய நிலையம்
தென்புல மிலங்கைச் செழுந் தீவிலே வளம்
சேர் நாவலப்பிட்டியில்
திசையெலாம் போற்றிடத் தெய்வீக மணம் கமழ்
சிவரத்ன தீப நிலையம்
தன்பெருமை சற்று மெண்ணாத குணசீலரும்
சாந்த முத்தையா நிலையம்
தவநிலையம் அதிபுனித நவ நிலையம் என்றும்
தழைத்தோங்கி வாழ்க இனிதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— சைவ மக்களுக்குக் கிடைத்த பெருவாய்ப்பு —

சிவத்தமிழ்ச்செல்வி

செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி
(தர்மகர்த்தா – துர்க்கா தேவி ஆலயம் – தெல்லிப்பழை)

## வாழ்த்து

ஆத்மஜோதி ஆசிரியரின் சஷ்டியப்த நிறைவு விழாவில் அடியேனது வணக்கத்தையும், வாழ்த்தையும் தெரிவிக்க வேண்டியது பெருங்கடனாகும்.

பெரியார் அவர்கள் தமது சொல்லாலும், எழுத்தாலும் பணிபுரிந்து வரும் சிறப்பை அகில உலகமும் அறிந்து போற்றுகிறது. ஆசிரியர் பணியை அன்புப் பணியாகவும் அறப் பணியாகவும் ஆற்றி ஆயிரம் ஆயிரம் மாணவ உள்ளங்களில் இடம் பெற்றவர் எங்கள் முத்தையா மாஸ்ரர் அவர்கள். நாவலப்பிட்டி நகரோடு ஒன்றி விட்ட நாமம் அவருடைய பெருநாமம் என்றால் அதில் மிகை யொன்றுமில்லை. வாழ்ந்து காட்டுவதிலும் இப் பெருந் தகையார் முன்னணியில் திகழ்கிறார். தியானமரு உணர் வும், சிவநாம பஜனையும், திருத்தொண்டின் நெறியைப் பரப்பலும் பெரியாரின் வாழ்வில் நாம் காணும் சிறப்பு களாகும். இந்தியா, மலேசியா முதலாம் நாடுகளுக்குச் சென்று பல மகா நாடுகளிலும் சைவ ஸ்தாபனங்களிலும் பங்கு கொண்டு பல சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார்.

இன்று பெரியாருடைய சஷ்டியப்த பூர்த்தி விழாவில் பங்கு கொள்ளும் வாய்ப்பு சைவ மக்களுக்குக் கிடைத்த பெருவாய்ப்பாகும். இந் நாளில் ஆசிரியப் பெருந்தகை யாரின் நற் பணிகளைப் போற்றி பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டுமென்று வாழ்த்தி நிற்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்நெறி மன்றத்தின்

# வாழ்த்துச் செய்தி

தொண்டர் சண்முகராஜா—திருக்கோணமலை

இருபதாம் நூற்றாண்டு பெரிதும் சோதனைக்கும் வேதனைக்குமுரிய ஆண்டாகவே விளங்குகின்றது நமது வாழ்நாளில். என் செய்வது மனித இனத்தின் வாழ்வு பல வழிகளிலும் இன்னலே மிகுந்து காணப்படுகின்றது. காரணம் என்ன என்பதுதான் நாம் காணவேண்டிய ஒரு பெரும் பொறுப்பாக அமைந்திருக்கின்றது. காரணத்தை கண்டுபி[illegible]ப்பதென்பது, இயந்திரம் போன்ற வாழ்வில் சுற்றிச் சுழன்று கொண்டே வாழும் நமக்கு காரணத்தைக் கண்டுபிடிக்க இயலாத வாறு நமது வாழ்வின் பலவேறு பிரச்சனைகளும் ஒவ்வொரு நொடியும் முண்டியடித்துக்கொண்டு நெருக்குகின்றது.

இந்த நெருக்கத்தில் திக்குத் திசை தெரியாது தத்தளிக்கும் மனிதனுக்கு இமைப்பொழுதும் அவகாசம் இருக்கின்றதா? இல்லை என்றே சொல்லலாம். ஆனுல், நெருக்கடி மிகுந்த வாழ்வில் திசை தெரியாது தத்தளிக்கும் மனிதனுக்கு ஆறுதல் அளித்து அரவணைத்து சில நிமிடங்களாவது தன் வாழ்வையும், வாழ்வின் குறிக்கோளையும், குறிக்கோளின் சிறப்பையும் எடுத்துக்கூறி, அல்லல்படும் மனித வாழ்வுக்கு அல்லலிலிருந்து சற்று அமைதியுடன் சிந்திக்கவும், சிந்தனையின் பயனை நல்லெண்ணமாக எண்ணச்செய்து, எண்ணத்தைச் செயலாற்றி அதன் மூலம் மனித வாழ்வுக்கு பெறற்கரிய பேறு போன்ற அமைதியையும் அமைதியின் மூலம் அளவிலா ஆனந்தத்தையும் அருளுகின்றது பெரியார்களின் தொடர்பும் அவர்களின் திருவுள்ளத்தினின்று எழும் கருத்துக்களும், அவர்கள் நமக்கு அருளுரைகள் மூலமும் எழுத்தோவியங்கள் மூலமும் காட்டுகின்ற நன்னெறிகளும்.

இந்த நன்னெறி நின்று, நன்மைபெருகு அருள்நெறியை நாநிலமெங்கனும் பரப்பித் தாம் பெற்ற இன்பத்தைப் பெறுக இவ்வையகம் என்ற அருண்மொழிக்கமைய, நமது பொன்னுடாகிய இலங்கையிலும், மற்றும் கடல்கடந்த நாடுகளிலும் நற்பணிகள் பல ஆற்றியருளுகின்ற நமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராக விளங்குபவர் அருளாளர் சிவத்திரு. முத்தையா ஐயா அவர்கள். அவர்களின் வாழ்வும் வளமும் எல்லாமே சிவப்பணிக்கே உரியதாக்கினர்கள். மதிப்புக்குரிய ஆசிரியப் பெருமகனுகக் கடமையாற்றிய காலத்திலும் அந்நேரப் பணியையும் தமதாக ஆக்கிக்கொள்ளாது, சிவப்பணியாக்கினர்கள். அவர்கள்தம் சிவப்பணியால் பயன் பெற்றவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல ஆயிரம் ஆயிரம் என்றே சொல்லலாம். இறையுணர்வற்றவர்கள் கூட, ஐயா அவர்களின் தொடர்பினால் இறையுணர்வு பெற்று வாழ்வில் அமைதிபெற்று விளங்கினார்கள். திருவருளை நினைக்காத நெஞ்சினர்கள்கூட ஐயா அவர்களின் தொடர்பினாலும், கருத்துரைகளாலும், எழுத்தோவியங்களாலும் நெஞ்சாரத் திருவருளை நினைந்து அவ்வழிபட்டுத் திருவருளின்பம் கைவரப்பெற்று வாழ்வில் அமைதி பெற்றார்கள், பெறுகின்றார்கள். இவ்வுண்மையை நாம் இன்றும் கண்கூடாகக் கண்டுகொள்ளுகின்றோம். சிறு பராயத்தினர் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்குமே இனியவராக விளங்கும் ஐயா அவர்களின் ஆத்மஜோதி பணி இருண்ட நெஞ்சங்களில் எல்லாம் ஒளியை ஏற்றியருளி அருளுகின்றது. இத்தனைக்கும் இனியவராகவும் அருளாளராகவும் விளங்கும் ஐயா அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழா நடைபெறுவது குறித்து அருள்நெறியுலகம் பெருமையடைகின்றது. வாழ்த்து கூறுகின்றது. வணங்கி மகிழ்கின்றது.

திருச்சிற்றம்பலம்

---

## வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து ஏன் அர்ச்சனை செய்கிறோம்?

வெற்றிலை நம் உடலைக் குறிக்கும். தூல உடல், சூக்கும உடல் இரண்டையும் குறிக்க இரண்டு வெற்றிலை வைப்பது வழக்கம். தூல உடல், சூக்கும உடல், காரண உடல் மூன்றையும் குறிக்க மூன்று வெற்றிலையும் வைக்கலாம். நோயில்லாமல் நம் உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என வேண்டுவதே இதன் குறிக்கோளாகும்.''

''பாக்கு'' செல்வத்தைக் குறிக்கும். இரண்டு வாழைப் பழங்களும் நாம் செய்யும் நல்வினை, தீவினை இரண்டையும் குறிக்கும். எனவே ஆரோக்கியம், செல்வம்; பாவ—புண்ணிய விடுதலை ஆகிய மூன்றையும் வேண்டியே வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து அர்ச்சனை செய்கிறோம். இது மாயா மலத்தையும், கன்ம மலத்தையும் நீக்குவதற்கு இறைவன், துணையை நாம் நாடுகிறோம் என்பதை உணர்த்தும். சுருக்கமாகத் தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் ஆகியவை வைத்து அர்ச்சனை செய்வதன் நோக்கம் ''அறிவு'' ஆரோக்கியம், செல்வம், ''பாவ — புண்ணிய விடுதலை'' ஆகிய பயன்களைத் தரவேண்டும் என்பதேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட ஆத்மஜோதி முத்தையா

(குடவாசல் — கே. எஸ். ராமசாமி)
தலைவர், இன்ஷ்யூரன்ஸ் பீல்டு ஊழியர் சம்மேளனம்,
தென்மண்டலம்.

''ஆத்மஜோதி'' ஆசிரியர் மாஸ்டர் சிவத்திரு. முத்தையா அவர்களை முதன் முதலில் இந்தியாவில் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்கள் குழுவினருடன் புதுக் கோட்டை வந்த சமயம், வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு அவர்களோடு பேசி மகிழ்ந்தேன்.

அவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளில், ஆற்றிய சிறப்பு உரைகளில் எல்லாம், ''ஆத்மஜோதி'' தெளிவாக வெளிப்பட்டது. வேதாந்தத்தையும், சித்தாந்தத்தையும், சிறு சிறு கதைகள் மூலம் விளக்கிச் சொல்வதில், அவருக்கு நிகர் அவரே தான். சிறு குழந்தைகளுக்கு புரியும் வண்ணம், சின்ன கதைகள் சொல்லி, சிறப்பான நீதிகளை மனதில் பதியும் படி, எடுத்துச் சொன்னார்.

இந்தியாவில் சந்தித்த பின்னர், அவரை ஸ்ரீ லங்காவிலேயே, 1974 ஆகஸ்ட் மாதம் வந்து சந்தித்தேன். நாவலப்பிட்டி, 'ஆத்மஜோதி' நிலையம் மிகவும் அமைதியுடன் கூடிய சூழ்நிலையில் உள்ள ஒரு சிறந்த இடம். ஸ்ரீ லங்காவில், அவர்களை ''மாஸ்டர்'' என்று அன்போடு அழைப்பதை பார்த்தேன்.

பள்ளிச் சிறுவர்கள் சிறுமியர்களுக்கு மட்டும் அவர் 'மாஸ்டர்' அல்ல. எல்லோருக்குமே அவர் 'மாஸ்டர்' தான். காரணம், சிறுவர்களுக்கு பள்ளியில் பாடங்கள் போதிப்பது போலவே, பெரியவர்களுக்கும், 'பெரியபுராணம்' போன்ற பல தமிழ் நூல்களுக்கு விளக்க உரை வகுப்புகள் ஸ்ரீ லங்காவின் பல பாகங்களில் நடத்தி, கருத்துக்களை போதித்து வரும் 'மாஸ்டர்' அவர்.

திடசித்தம், கட்டுப்பாடு, ஒழுங்குமுறைகள் அனைத்தும் நிறைந்தவர் 'மாஸ்டர்'. அவருடைய பக்திப்பாடல் முறைகள், பஜனை எல்லாமுமே, அனைவரையும் கவரும், சக்தி படைத்ததாகும்.

சுமார் ஒருமாதகாலம், நான் அவர்களுடன் நெருங்கி, பேசி, பழகி இருந்த சந்தர்ப்பங்களில், அவர் உள்ளத்திலே ஊறிக்கிடக்கும் நல்ல சிந்தனைகளின் ஊற்று, அடிக்கடி பிரவாகமாக மாறி, என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவர்களுக்கு, வசந்தகால நிலையை ஏற்படுத்திக் கொடுத்தது. அவருடைய உள்ளத்திலே பதிந்து கிடக்கும், ஜோதியின் பிரதிபலிப்புதான் 'ஆத்மஜோதி'— அருமைத் தம்பி சிவத்திரு. அருமைநாயகமும், மற்றும் சீடர்களும். தன்னை அர்ப்பணித்துக்கொண்டு நடத்தும் சிறந்த பத்திரிகை 'ஆத்மஜோதி! நம் ஒவ்வொருவரின், எண்ணங்களிலே பதிந்து கிடக்கும், நல்லவைகளை, கிளர்ந்து எழச் செய்து, நமக்கு நல்வழி காட்டியாக விளங்கும் 'ஆத்மஜோதி'யின் ஆசிரியர், நம் எல்லோருக்கும், இந்த சமுதாயத்திற்கும், கிடைத்த ஒரு பொக்கிஷமாகும்.

அவர்களுக்கு 'மணிவிழா' (சஷ்டியப்தபூர்த்தி) வரும் நல்ல நாளில் (22-5-78) அவர் மேன்மேலும் திடகாத்திரத்துடனும், நோய், நொடிவு இல்லாமல், சுகமாகவும், சுபீட்சமாகவும், நீண்ட ஆயுளுடன், மக்கள் தொண்டு புரிந்து, அனைவரின் ஆத்மஜோதி நல்ல நிலையில் பிரதிபலிக்க 'ஆத்மஜோதி' பத்திரிகையின் நல் ஆசிரியராக, சிறந்து விளங்க, இறைவன் அவர்களுக்கு ஆசிகள் வழங்க இருதய பூர்வமாக பிரார்த்தனை செய்கிறேன். வாழ்க 'மாஸ்டர்'!

பொங்குக மங்களம்!

## கோயிலில் ஏன் தேங்காய் உடைத்து அர்ச்சனை செய்கிறோம்?

நம் சமயம், ஞானம் பெறுவதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது. ஞானம் என்பது அறிவு; நம் அறிவை எப்பொழுதும் ஆணவ மலம் மறைத்துக் கொண்டிருக்கிறது. ஆணவ மலம் நீங்கினால் தான் அறிவு பிரகாசிக்கும். குடுமி, கண்கள் ஆகியவற்றைத் தேங்காய் உடையதாக இருப்பதால், அறிவுணர்ச்சிக்கு இருப்பிடமான நம் தலையை அது குறிக்கிறது. தேங்காயைச் சுற்றியுள்ள ஓடு அறிவைச் சூழ்ந்துள்ள ஆணவ மலத்தைக் காட்டுகிறது. ஆணவ மலத்தை நீக்கி, அறிவைப் பிரகாசிக்கச் செய்யவேண்டும் என இறைவனைக் கேட்பதே தேங்காய் உடைப்பதன் கருத்தாகும். நம் அறிவினாலேயே இறைவனை அடைந்து விடலாம் எனக் கருதுபவர்கள் உண்டு. நம் அறிவு ஆணவ மலத்தால் மறைக்கப் பட்டிருப்பதால் அதன் துணை கொண்டு இறைவனை அறிய முடியாது; அன்பினால் நெக்குருகி வழிபட்டால், இறைவன் ஆணவ மலத்தை நீக்கி நம் அறிவைப் பெற வாய்ப்பேற்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தோனேசியா—மீடான் நகர்
ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்,
இந்துமத தலைமைச் செயலகம் வழங்கிய

## வாழ்த்துப் பாமாலை

ஆத்மஜோதி ஆசிரியரும் ஆத்மஜோதி நிலையத் தலைவருமாகிய உயர்திரு. நா. முத்தையா அவர்கள் கடந்த ஒருமாத காலமாக இந்தோனேசியாவைச் சேர்ந்த மீடான் நகரில் சமய சமூக தமிழ்ப்பணி ஆற்றி அன்னார் 24-3-78ல் தாயகம் திரும்பிய போது அன்னாருக்கு மீடான் ஸ்ரீ மாரியம்மன் தேவஸ்தானத்தினர் வாசித்தளித்த வாழ்த்து.

குறள்

முத்தையப் பேரோன் முந்து நம் நல்வினையால்
இத்தேசம் வந்தான் இன்று

வெண்பா

ஈழம் செய் அருந்தவத்தால் இனிதே வந்துதித்த
ஆழம் அறியா அருங்குணத்தோன் - நாளும்
இறை நாமம் பரப்பி எங்களை மகிழ்வித்தான்
இறையருளால் வாழ்க நிதம்

அகவல்

ஈழம் தந்த இனிய ஆசான்
பாழும் மனத்தைப் பண்புகள் செய்தான்
நாம செபத்தை நாளும் பரப்பினன்
காம மாதி ஆறும் தொலைந்தன
பிரமச் சாரியாக வாழ்ந்தான்
பரமனைப் பாடிப் பணிகள் செய்தான்
மலையக மக்கள் பத்து லட்சம்
இலையென நின்றனர் செய்வத றியாமல்
சமயசாதனை சாற்றக் கேட்டு
இமயம் என்ன நிமிர்ந்து நின்றனர்
மீடான் மக்கள் செய்தவம் பலித்தது
மாடாய் உழைத்து மாண்புகழ் பெற்றனர்
மாரியின் வரவால் மாநிலம் செழித்தது
முத்தையன் வரவால் அருளினைப் பெற்றோம்
அந்தர் யோகமும் ஆண்டவனறிவும்
இந்த முறையில் எய்தப் பெற்றோம்
வீட்டுப் பிரார்த்தனை கூட்டுப் பிரார்த்தனை
நாட்டுக்கு நலம் என்பது கண்டோம்
நாமம் கூற நாடு வாழும்
நாளும் வாழ்வோம் உலகம் வாழ
என்றும் கூறிய எங்கள் ஆசான்
இன்று போல் என்றும் வாழிய வாழிய!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபதாண்டு நிறைவு வாழ்த்து

**சுவாமி அபேதானந்தா - அபேதாஸ்ரமம்**
**திருவனந்தபுரம் – கேரளா.**

"குர்வன்னேவேஹ கர்மாணி
ஜிஜீவிஷேச்சதம் ஸமா:"

"நற்செயல்களைச் செய்து கொண்டே நூறாண்டுகள் (நீடியகாலம்) வாழ விரும்புவாயாக" என்று "ஈசாவாஸ்யோபநிஷத்" கூறுகிறது. அதற்கிணங்க "ஆத்மஜோதி"யை பரப்பிக் கொண்டு அரும்பணிகள் ஆற்றிவரும் ஈழநாட்டுத் தொண்டர் திரு. நா. முத்தையா அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் அருளோடும் புகழோடும் இன்பமாய் வாழ என்னுயிராம் உண்ணிக் (குழந்தை) கண்ணனை ஏத்துகின்றேன்.

பக்தர்களும், பகவானும் ஒன்றேதான். பக்தர்களைக் கொண்டாடுவது பகவானைக்கொண்டாடுவதற்கொப்பாகும். பக்தனில்லையேல்பகவானுக்கு என்ன மகிமை. ஆதலால் பகவானுக்கும் பெருமையளிக்கும் பக்தர் திருக்கூட்டம் வாழ்க! அத்தகைய திருக்கூட்டத்தில் ஒருவராகிய திரு. நா. முத்தையா அவர்கள் வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

சுவாமி பிரணவானந்தா
தலைவர் தெய்வீக வாழ்க்கைச் சங்கம் - மலேசியா.

ஆத்மஜோதி ஆசிரியரும் எளியேனது ஆன்மீகத் தோழரும் கெழுதகை நண்பருமாகிய திரு. நா. முத்தையா அவர்களுடைய 60ம் ஆண்டு நிறைவு விழாவினை 22-5-78 அன்று நாவலப்பிட்டியில் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகள் விழாக்குழுவினரால் செய்யப்பட்டுள்ளதென அறிந்து பெருமகிழ்வெய்துகிறோம். பிரமச்சாரியான இவர் தமது வாழ்க்கையைச் சமயத்தொண்டிற்கென்றே அர்ப்பணித்துள்ளார். நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் சுமார் 35 ஆண்டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்த அவர் 21 வருட காலம் அதன் அதிபராகக்கடமையாற்றி இளைப்பாறியுள்ளவர்.

ஆத்மஜோதி என்னும் சமய, மாதசஞ்சிகையின்நிர்வாக ஆசிரியராக 29 ஆண்டுகள் இருந்து, அதன் ஆரம்ப காலம் தொட்டு ஆசிரியராக விருந்த அருட்பெரியார் திரு. க. இராமச்சந்திரனுருடைய மறைவுக்குப்பின் ஆசிரியப்பணியை ஏற்றுக்கொண்டுள்ளவர். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவராகவும் அச்சங்கம் வெளியிட்டுவரும் 'இலங்கை இந்து' என்னும் பத்திரிகையின் ஆசிரியராகவும் திரு. நா. முத்தையா பணிபுரிந்துவருகிறார். சொற்பொழிவுகள் ஆற்றியும், கூட்டு வழிபாடு, அந்தர்யோகம் முதலிய சாதனைகளை நடத்திவருவதன் மூலமும் மக்கள் மத்தியில் சமய விழிப்புணர்ச்சியைப் பரப்பி வருவகிறார். "திருமுறைக்காட்சி" "கேதார் பத்ரியாத்திரை" "தத்துவக் கதைகள்" போன்ற பல நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

சுவாமி சிவானந்தர், ஸ்ரீரமண பகவான், சுவாமி இராமதாசர், கவியோகி சுத்தானந்தர், காஞ்சி காமகோடி புதுப்பெரியவர் ஆகியோரின் ஆசியையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1976ல், சென்னையில், நடைபெற்ற அகில இந்து சமய மகாநாட்டிலும், அடுத்த ஆண்டில் மதுரையில் நிகழ்ந்த உலக சமய, தத்துவ, கலாச்சார மகாநாட்டிலும் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டு பாராட்டுப் பெற்றுள்ளவர்.

மேற்குறித்த இரு மாநாடுகளும் காஞ்சி காமகோடி பீடத்தின் ஆதரவில் நடைபெற்றவை. பின், 1976ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மலேசியா நாட்டின் தலைநகராகிய கோலாலம்பூரில் நடந்த உலக இந்துப்பேரவையின் முதற் கூட்டத்தில் இலங்கைப் பிரதிநிதிகளில் ஒருவராகவும் ஆத்ம ஜோதி நிலையத்தின் சார்பிலும் கலந்துகொண்டு நல்லாலோசனைகள் கூறினார். பின் மலேசியாவில் பல ஊர்களிலும் சிங்கப்பூரிலும் ஆங்காங்கு சமயச்சொற்பொழிவுகள் செய்துள்ளார். மீண்டும் இவ்வாண்டு முற்பகுதியில், இந்தோனேஷியாவைச் சேர்ந்த மீடான் டெல்கிப் பகுதியில் ஒருமாதகாலம் சுற்றுப்பிரயாணம் செய்து பல அரிய சமய விரிவுரைகள் ஆற்றிவிட்டு, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய பிரதேசங்களிலும் சொற்பொழிவுகள் செய்துவிட்டு தாயகம் திரும்பியுள்ளார். சமய ஞானமும் சொல்லாற்றலும் மிக்க திரு. முத்தையாவினுடைய பேச்சுக்கள் எங்கும் வரவேற்றுப் போற்றப்படுகின்றன.

ஸ்ரீலங்காவின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏழாலைக்கிராமத்தில் பிறந்த அவர் நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் ஆசிரியராக இருந்தகாலத்தில் ஆத்ம ஜோதி நிலையத்தை நிறுவி மலையக மக்கள் மத்தியில் சமயத்தைப் பரப்புவதற்கு அருந்தொண்டாற்றி வந்துள்ளார். மேற்படி கல்லூரியின் அதிபராக ஆசிரியப்பணியிலிருந்து இளைப்பாறிய பின், தமது முழுநேரத்தையும் சமயப்பணிக்கு அர்ப்பணித்து, இந்தியா, சிங்கப்பூர். மலேசியா, இந்தோனேசியா முதலிய வெளிநாடுகளிலும் விரிவானசமயத்தொண்டு செய்துவருகிறார். தமது 60-ம் ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடும் இவ்வேளையில் அவர்களுக்கு அறுபதோடு அறுபது ஆண்டு ஆயுளையும், பூரண தேகாரோக்கியத்தையும் தெய்வசம்பத்துக்களாகிய நல்லன வெல்லாவற்றையும் அருளி ஆசீர்வதிக்க எல்லாம்வல்ல இறைவன் திருவடிகளை மனமார வந்தித்து வாழ்த்துகிறோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துடன் வைக்கப்படும்"

ஹரி ஓம் தத் சத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமார வாழ்த்துகின்றோம்


சுவாமி மதுரானந்த-வெள்ளிமலை
நலேவர் விவேகானந்த மந்திரம்-அம்மாண்டி விளை
குமரிமாவட்டம்

எழில்மிக்க இலங்கை நாட்டில் பல்லாண்டுகளாக "ஆத்மஜோதி" என்ற தமிழ் மாத இதழ் மூலமும், திருவிளக்கு வழிபாடுகள் சத்சங்கங்கள் மூலமும் தெய்வீக ஒளியைப் பரப்பிவரும் சைவ நன் முத்தான நைட்டிகப் பிரம்மச்சாரி திரு. நா. முத்தையா அவர்களுடைய மணிவிழா நடைபெறப்போகின்றது என்ற நற்செய்தி கேட்டு மனம் மிக மகிழ்ந்தோம்.

ஆண்டவனைப் பணிந்துவிட்டு அடியார்களைப் பணியாது சென்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளை விறல்மிண்ட நாயனுர் "புறம்" என்று தள்ளி விட்டார். அதன்பிறகுதான் தன் பிழையை நினைந்துருகி "அடியார்க்கடியேன்" என்ற அருமையான திருத்தொண்டத் தொகையைத் தந்தார் சுந்தரர். நாமும் அதுபோல் அடியார்களைப் போற்ருதுவிடக்கூடாது. அம்முறையில் சிறந்த அடியாராகிய திரு. நா. முத்தையா அவர்களை நாம் மனமாரப் போற்றிப் புகழ்கிருேம். அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் "மண்ணில் நல்லவண்ணம்" வாழ்ந்து "எண்ணில் நல்ல கதியை" அடைய இறைவனை இறைஞ்சுகின்ருேம்.

வாழ்க முத்தையா! வளர்க ஆத்மஜோதி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தத்துவக் கதைகளுக்கு
சாகித்திய பரிசு — 1976



இந்திய வானொலியில்
ஆத்மீக ஒலி — 1973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவதீட்சை – நாவலப்பிட்டியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகர்

(நந்தி)

பூஜை நேரத்தில், கோவில் கோபுர மணியை அடிக்கும் ஒரு சிறு பையனின் மனநிலையோடு, இந்த ஆசிரிய உரையை எழுதுகிறேன். பூஜையை மக்கள் அனைவருக்கும் தெரிவிக்கும் மணிஓசை போல, ஒரு மணிவிழாவை எனது இதய ஓசையும் இந்த எழுத்துக்கள் மூலம் அறிவிக்கின்றது.

கற்பகத் தருவைச் சார்ந்த
காகமும் அமுதம் உண்ணும்

'ஆத்மஜோதி' யுடன் தொடர்புகொண்ட என் போன்றவர்கள், அவ்வப்போது, சமய வாழ்வைப் பற்றிச் சிந்திப்பதுண்டு, பேசுவதும் எழுதுவதும் உண்டு; அங்ஙனம் வாழ முயலுவதும் உண்டு. இதுதான் ஆத்மஜோதியின் சாதனை. சாதாரண மக்களுக்கு சமய வாழ்வையோ, சுகாதார வாழ்வையோ, கலை வாழ்வையோ காட்டி, அவர்களை அவ்வழியே வாழவைப்பது இலகுவான காரியம் அல்ல. ஆனால் இந்தக் காரிய சித்தியை ஆத்மஜோதி நிலையத்தில் இருந்து, ஆத்மஜோதி பத்திரிகை மூலம், ஒரு தொண்டர் அடைந்து வருகின்றார்.

இன்று, சஷ்டியப்த பூர்த்தி மணிவிழா காணும் இந்த தொண்டருக்குப் பலர் பல வேளைகளில் அன்புடனும் மதிப்புடனும் அளித்துக் கௌரவித்த பட்டங்கள் பல. ஆனால் அவருக்கு மிகப்பொருத்தமான ஆகுபெயராகவும், காரணப் பெயராகவும் அமைந்தது 'ஆத்மஜோதி' என்ற நாமந்தான். ஆத்மஜோதி - முத்தையா. பிரிக்க முடியாத அர்த்தம் உள்ள இணைப்பு ஆகிவிட்டது.

உள்ளத்தில் உண்மை ஒளி உண்டானால்
வாக்கினிலே ஒளி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மஜோதி முத்தையா அவர்களின் வாக்கினில் உள்ள ஒளியை, ஆத்மஜோதி பத்திரிகை வாசகர்களும், அவர் எழுதிய பல சமய நூல்களைப் படித்தோரும் அனுபவித்துப் பயன் அடைகிறார்கள். படிக்கத் தெரியாதவர்கள் அவரது சமய உரைகளையும், கதைகளையும் கேட்டுப் பரவசம் அடைகிறார்கள்.

இலங்கையின் மலை நாட்டிலே ஏழைத் தோட்டத் தொழிலாளர் மத்தியிலும், பள்ளிப் பிள்ளைகள் மத்தியிலும் தொடங்கிய இந்தச் சமயப் பணி, இன்று நல்லுலகின் தமிழ் உலாவும் பாகங்களிலே, பரவி வருகின்றது.

தமிழ் நாடு, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளிலே நமது ஆசிரியருக்குக் கிடைத்துள்ள நல்ல வரவேற்பையும் மதிப்பையும் அறிந்து, நாம் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம். அவரது திறமைக்கும், உழைப்பிற்கும், சேவைக்கும் கிடைத்த இந்த மரியாதை நியாயமானது. அதனைப் பாங்குடன் அளித்த எமது தென் கிழக்கு ஆசிய சைவச் சகோதர சகோதரிகளுக்கு எமது நன்றியைக் கைகூப்பித் தெரிவிக்கின்றோம்.

இருளைக் குறை கூறிக்கொண்டிருப்பதிலும், பார்க்க
மெழுகு திரியைப் பற்ற வைப்பது நல்லது

என்பது ஒரு சீனப் பழமொழி. சீன முக நாடுகளுக்குப் போவதற்கு முன்பே, இந்த உண்மையை நன்கு உணர்ந்தவர் நமது ஆசிரியர். நமது நாட்டிலேயே அறிவீனம், அகந்தை, அற்பத்தனம் போன்றவை சமூக-சமய வாழ்வை இருட்டிய வேளைகளிலும், குறை கண்டு அவற்றைக் கூறிக்கொண்டு இராமல், எழுத்தாலும் பேச்சாலும் ஒளியை ஏற்றி சமூக முதல் சிகிச்சை செய்தவர் அவர்.

நமது நாட்டிலே நீதி நியாயம் தெரிந்தோரும், நாவல் நகருக்கு விஷயம் தந்த நல்லோரும் நன்கு அறிந்த சேவை இது. இத்தகைய அடக்கமான சேவைக்குத்தான் இன்று மணிவிழா நடைபெறுகின்றது. இந்த விழாவின் நாயகனை, நமது நாட்டின் பிரபல கல்விமானான திரு. கி. லக்குமண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயர் அவர்கள், "சமயத்துறையிலே சமரச மனப்பாங் குடையவர். பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக அமை பவர். போற்ற வேண்டியவற்றைப் போற்றுவதற்கும் கண்டிக்க வேண்டியவற்றைக் கண்டிப்பதற்கும் தயங்காத வர்" என்று இரத்தினச் சுருக்கமாக மதிப்பீடு செய்திருக் கின்றார். "திரு. நா. முத்தையா அவர்களின் வாழ்க்கை மகான்களோடு சம்பந்தப்பட்டது. அவர்களிடம் பெறத் தக்கவைகளைப் பெற்றவர் அவர்" என்று அந்த மதிப்பீட் டுக்குக் காரணம் தருகின்றார் எமது பண்டிதமணி அவர்கள். வாழ்த்தப்படவேண்டிய அவருடைய வாழ் வுக்கு, பல பெரியார்கள் மணி மணியான ஆசி உரைகளை வழங்கியிருக்கிறார்கள்.

"இனிய முத்தையா" என்ற திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் அன்பு வார்த்தைகளும், 'கர்ம யோகதர்சனி' என்று கூறும் யோகிராஜ் சச்சிதானந்த சுவாமிகளின் வாழ்த்தும் மணிவிழா காணும் ஆசிரியரின் உள்ளத்தையும் சேவையையும் வர்ணிக்கின்றன.

'அன்னாருடைய சமூக சமயப் பணிகள் எல்லாம் மேன் மேலும் வளர்வதற்கு இறைவன் அருள் பரிபூரணமாக இருக்கட்டும்"

இப்படியாக அருள் நிறைய ஆசீர்வதிக்கும் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளுடனும், சைவ உலகின் பெரியோர்களுடனும் சேர்ந்து நாமும் ஆத்மஜோதி திரு. முத்தையா அவர்களை முழுமனத்துடன் வாழ்த்து கின்றோம்.

## உன் மனம்!

இன்பமும் துன்பமும் உனது மனத்தினின்றும் உண்டாகின்றன; மனமே பந்தத்திற்கும் முத்திக்கும் காரணமாகிறது. தீய மனம் நரகத்தைத் தருகின்றது. நன் மனம் பரகதியைத் தருகின்றது. மனத்தழுக்கு அற்றவரே பெரியார். மனத்துக்கண் மாசிலனாதலே எல்லா அறங்களுமாம். ஆதலினால் உன் மனம் பளிங்குபோல் இருக்கட்டும்!

— திருமுருக கிருபானந்தவாரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் - மணி - முத்து

ஒரு வரலாறு: தகவல் சேர்த்து எழுதியவர்:
(டாக்டர்: செ. சிவஞானசுந்தரம் 'நந்தி')

பொன்: பொன்னுப்பிள்ளை — தாயார்.
மணி: நாகமணி — தந்தையார்.
முத்து: முத்தையா — வரலாற்றுக்கு உரியவர்.
பிறப்பு: 1918 — 5 — 25.
திகதி: காலயுத்தி வருஷம் வைகாசி மாதம் விசாக நட்சத்திரம்.
ஊர்: ஏழாலை.
தந்தை: கமக்காரர், முருகபக்தர், கந்தரலங்காரம் அவரது பாராயண நூல்.
தாயார்: பதி பக்தியும், தெய்வ பக்தியும் மிகுந்தவர்.
உடன் பிறந்தார்: திருமதி. செல்லமுத்து நாகலிங்கம்,
திருமதி. சின்னம்மா தம்பிப்பிள்ளை,
திரு. நா. கந்தையா,
திரு. நா. அருமைநாயகம்.

படிப்பு:-

| | |
|---|---|
| 1923—1928 | ஏழாலை, கத்தோலிக்கப் பாடசாலை |
| 1928—1931—1934 | சுன்ஞகம், மயிலணி சைவ வித்தியாசாலை |
| 1932—1933 | கொட்டடி நமச்சிவாய வித்தியாசாலை நாவலர் வித்தியாசாலை |
| 1935 | திருநெல்வேலி சாதனு பாடசாலை ஆசிரிய தராதரப் பத்திர வகுப்பு |
| 1937—1939 | திருநெல்வேலி, சைவாசிரியர் கலாசாலை ஆசிரிய பயிற்சி |

முக்கியமான இலக்கிய, இலக்கண சமயக்கல்வி:- கற்பித்தவர்

நாவலர் பெருமானின் மருகர் த. கைலாசபிள்ளை அவர்கள்

பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை அவர்கள், மயிலிட்டி சி. சுவாமிநாதன் அவர்கள்

பேராசிரியர்: க. கைலாசபதி

ஆசிரியர் நியமனம்:- 15-10-1939 நாவலப்பிட்டி, சாந்த மேரி பாடசாலை.
1-1-1949 நாவலப்பிட்டி, கதிரேசன் கல்லூரி.
1-1-1971 அம்பிட்டியா, கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலை
1-1-1972 நாவலப்பிட்டி, கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயம்.

சங்கங்களில் சேவை:

1. நாவலப்பிட்டி இந்து வாலிப சங்கம்.
காரியதரிசி 1944 – 1955.
உபதலைவர் 1956 – 1967.

2. நாவலப்பிட்டி தமிழாசிரியர் சங்கம்.
காரியதரிசி 1945 – 1962.
தலைவர் 1963 – 1970.

3. மத்திய மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம்.
காரியதரிசி 1946 – 1952.
பரீட்சைக் காரியதரிசி 1954 – 1968.

4. அகில இலங்கை இந்து மாமன்றம்
உபதலைவர். 1960 – 1974.
இலங்கை இந்து ஆசிரி: 1976 – இன்றும்.

5. அகில இலங்கை தமிழாசிரியர் சங்கம்
உபதலைவர் –2 ஆண்டுகள்.
ஆசிரியன் பத்திரிகை ஆசிரியர்–5 ஆண்டுகள்.

சமய பெரியோர்கள் முதலாவது தொடர்பு:-
1944 ரமண மகரிஷி
மீரா அன்னை (அரவிந்தாச் சிரமத்தில்)
சுவாமி சுத்தானந்த பாரதியார்
திருவண்ணாமலை சிவானந்த முனிவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1946 யோகர் சுவாமிகள்,
உயர்திரு. க. இராமச்சந்திரா,
பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகள்.
1948 ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாச்சார்ய சுவாமிகள்
1951 சுவாமி இராமதாசர்,
அன்னை கிருஷ்ணுபாய்.
1953 சுவாமி சச்சிதானந்தா,
சச்சிதானந்த மாதாஜி.
1954 பகவான் அரவிந்தர்,
திருஈங்கோய்மலை அத்வையானந்த சரஸ்வதி சுவாமிகள்.
1955 கவிஞர். பரமஹம்சதாசன்.
1966 திரு. கி. வா. ஜகந்நாதன்
1967 பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா,
திருமுருக கிருபானந்த வாரியார்.
1968 தவத்திரு. குன்றக்குடி அடிகளார்
1973 ஸ்ரீ சாயிமாதா சிவ பிருந்தாதேவி.

சில முக்கிய நிகழ்ச்சிகள்:

1948 ஆத்மஜோதி பத்திரிகை வெளியீடு.
1960 ஆத்மஜோதி அச்சகம் ஆரம்பம்.
1955 தோட்டங்களில் சமய சமூக சேவை ஆரம்பம்.
1973 ஆத்மஜோதி வெள்ளி விழா.
1976 ஆசிரியர் தொழிலிலிருந்து ஓய்வு.
1976 கோலாலம்பூர், அகில உலக சமய மகா நாட்டில் பிரதிநிதியாகக் கலந்துகொண்டமை.
சென்னை, அகில உலக இந்து சமய மகா நாட்டில் பிரதிநிதியாகக் கலந்துகொண்டமை.
1977 மதுரை, அகில உலக சர்வ சமய மகா நாட்டில் பிரதிநிதியாக கலந்து கொண்டமை.
1978 இந்தோனேசியா சமயப் பிரச்சாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டுப் பிரயாணம்:

1947 தென்னிந்திய ஆச்சிரம தரிசனை.
1952 ரிஷி கேசம்.
1955 ரிஷி கேசம். கேதார்பத்திரி
1956 - 1967 பல தென்னிந்திய சமய யாத்திரைகள்.
1976 மலேசியா.
1977 சென்னை — மதுரை.
1978 சிங்கப்பூர், இந்தோனேசியா, மலேசியா.

எழுதிய நூல்கள்:-

1. திருமுறைக் காட்சி (1960) சமயக்கட்டுரைகள்
2. கேதார்பத்திரி யாத்திரை (1961) (பிரயாண நூல்)
3. பக்தராஜ் ஸ்ரீ ஜலராம் மகராஜ்ஜீ (1965)
4. ஸ்ரீ சிவபால யோகி சரிதம் (1970) (வாழ்க்கை வரலாறு)
5. முப்பெருஞ்சித்தர் (1973) வாழ்க்கை வரலாறு
6. இலங்கையில் ஓர் இல்லறஞானி (1974) (வாழ்க்கை வரலாறு சிவத்திரு க. இராமச்சந்திரனார்)
7. தத்துவக் கதைகள் (1975) சமயச் சிறுகதைகள் (1976-இல் ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலப் பரிசு நூல்)
8. ஏழாலை (1977) வரலாறு
9. திருமுறைச் செல்வம் (1978) (சமயக் கட்டுரைகள்)
10. பன்னிருமாத நினைவுகள் (1978) (சமயக்கட்டுரைகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி

## முத்தையா மாஸ்டருக்கு 61ம் வயது

பித்துக்குளி முருகதாஸ்

ஆழ்கடலில் மூழ்கித் திணறிஅள்ளுவார்கள் முத்துச்சிப்பி
அன்புக்கடல் மூழ்கி நானும் இந்த முத்து எடுத்தேன், அன்று
சூழ்நிலையாம் ஆத்ம ஜோதி, சுத்த ஞான ஒளி வெளியில்
துரியநிலை கண்டார் சேயாய், தொடர்ந்தார் வயது அறுபத்தொன்று

வாழ்க்கையில் வயது, உடற்கட்டு, உணர்ச்சிவேகம் என்ற மூன்று தோற்றங்களால் மனிதனை எடைபோட லாம். ஒன்றுக்கொன்று தொடர்பு உடையது. ஒன்று தளர்ந்தால் மற்றது தரங்குறையலாம். குறைபாடு கள் சூழலாம். முக்கியமாக உணர்ச்சிவசப்படாமல்-எதை யும் தெளிவாக சிந்தித்து - உணர்ந்து - தெளிந்துகொண்டு வாழ்வதும், அப்பியாசங்களால் உடலையும் வயதையும் வனப்பும் வலிமையும் உடையதாக்கிக்கொள்ளவேண்டும். தத்வம் தத்வார்த்தம் சூழ்நிலை சந்தர்ப்பம் ஆகிய கொண்டு மன மதிகளைப் பழக்கி மிதமான உணர்ச்சி களுக்கும் - நற்சாதனைகளை ஏற்படுத்தி வயதையும் அனு பவத்தையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். எளிமை யான பக்தியோகத்தால்—நரம்புகளின் அதிர்ச்சியை தெய் வீகமாக ஆக்கிக்கொண்டு - நோக்கம் - ஆக்கம் கொண்டு வாழ்பவர்கள் தான் இல்லறத்தை நல்லறமாக்கிக்கொண்டு யோகியர்கள் - சித்தர்கள் வாழ்த்தும் நிலையில் யவ்வனத் தை (இளமையை) தங்கள் கட்டுக்குள் வைத்துக்கொண்டு நீடூழி வாழ்வார்கள் வாழ்ந்தார்கள்-இப்படிப்பட்டவர்கள் தான்இனி நீடூழி வாழ்வார்கள். இதனைசிவ வாக்கியசித்தர்,

''உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவை
கருத்தினால் இருத்திய கபால மேத்த வல்லிரேல்
விருத்தரும் பாலராவர் மேனியுஞ் சிவந்திடும்
அருள்தரித்த நாதர் பாதம் அம்மைபாத முண்மையே'' என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையைச் சொல்லாக்கிச் செவுமடுத்து கண்நோக்கி
நிந்தனைக்கு உரித்தாக்கும் வளவளப்பை நீக்கிச் செய்யின்
வந்தனைக்கு உரித்தான ஞானகுரு சொல் கேட்கும்
உந்தனை நான் வணங்கிடுவேன்-ஓமதியே-மனமே கேள்

என்பது, மனத்தை பார்த்து தாசன் உளறியது. எனவே, இளமையும், நல்லுணர்வும் நற்செயலும் நிறைந்திருக்க முக்கிய சாதனை தெய்வீக த்யானம் பஜனைகளே.

நமது ஆசிரியர் முத்தையா இதனை பல மஹான்களின் உபதேசக் கருத்துக்களால் சாதனையில் கொண்டுள்ளார். எளிமை – பக்தி - இனிய சொல் இவற்றின் உருவம் நம் முத்தையா.

ஸ்ரீலஸ்ரீ யோகசுவாமியின் அன்புக்கும் அரவணைப்புக்கும் பாத்திர மான ஒருசிலரில் இவரும் ஒருவர்.

கண்கொண்டு தெருவில் தடுக்காமல் நடப்பார் – ஞான
கண்கொண்டு உளப்பாங்கின் தன்மையினைப் படிப்பார் ஆம்
விண்கண்ட புகழ் சூழ்யோக ஸ்வாமி மகிழ் அன்பன் முத்து
பண்பட்ட உள்ளுணர்வால் பலர்போற்ற வாழ்கின்றான்.

தாசன் போன்ற பித்தர்களையும் மதிக்கத்தெரிந்தவன். வாழ்க.

1946 சித்திரை விஷுக்கு அன்று திருவனந்தபுரம் பிரதம நீதிபதியான திருப்புகழ் மணி அவர்கள் குழுவுடன் தாசன் ஈழம் வந்தான். அப்பொழுது ஆடிட்டர் ஜெனரலாக இருந்த வட்டுக்கோட்டை கனகரத்தினம் அவர்களும், திருவிளங்கம், டாக்டர் குருஸ்வாமி செல்லையா முதலியவர்கள் எங்களை அழைத்து எல்லா இடத்திலும் பஜனையும் பிரசாரமும் செய்யவைத்தார்கள். அப்பொழுது திருப்புகழ் மணியவர்களால் துவக்கப்பட்டது, ''இசைக்கலை மன்றம்''. அடுத்தமுறை தாசன் அழைக்கப்பட்ட போது, தொண்டர்களுக்காகவும் பக்தர்களுக்காகவும் துவக்கப்பட்டது ''சத்சங்கம்''.

சத்சங்கம் என்றால் ஒரு அன்புக்கூட்டம். எங்கு ஏது நல்ல காரியம் நடந்தாலும் இவர்கள் சென்று இயன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டாற்றி நற்கருத்துக்களைக் கொண்டு ஜாதி மதஇனபாகுபாடு இன்றி மொழி இட, சமயபேதமின்றி சர்வ சமய சம்மதக் கருத்துக்களைக் கொண்டு இயங்கி வந்தார்கள். குறிப்பிட்டகாலமே காரியதரிசி, முருகன் தலைவன், காசு அதிகாரம் எதுவும் இல்லாது சத்சங்கம், அன்பர்கள் தாங்களாகவே சிறிது சிறிதுஇயன்றபணஞ்சேர்த்து தாசனை யும்சில அன்பர்களையும் அழைத்துவிருந்து கொடுத்து ஞான விருந்து கொண்டார்கள். அக்காலத்தில் தாசன் காசு தொடான், அந்நாட்களில் பலநாள் மௌனம். இப்படிப் பட்ட ஒரு சமயம் மலைநாட்டுக்கு அழைக்கப்பட்டான்.

தினம் காலை 5 மணிமுதல் யோக ஆசனம், தியானம் பஜனை, சிற்றுண்டி. பிற்பகல் 2 மணிமுதல் பெண்கள், குடும் பத்தலைவிகளுக்கு தேவாரம், திருப்புகழ், திருவாசகப் பாடல்கள் பொருளோடு சொல்லித்தரல். மாலை 6 மணி முதல் கேள்வி, பதில், தியானம், பஜனை, பக்திச் சம்பாஷணை இரவு சிற்றுண்டியின் பின் வாசஸ்தலஞ் செல்லல்.

நாவலப்பிட்டியாவில் சத்சங்கம் முத்தையா மாஸ்டர் விடுதியில் ஏற்பாடாகியது. கதிரேசன் கல்லூரி பஜனைக்கு மேடையாகியது. யோகிஸ்வரி சரஸ்வதி அம்மா, (சாமியா ரம்மா) சாப்பாடு வளங்கினர்கள். அன்பும் அரவணைப் பும் நாவலப்பிட்டியாவில் தெய்வீகக்குடும்பமாக வளர்ந் தது. ஏற்கனவே ஞானியர்களால் பண்பட்ட உள்ளம் தாசனின் சிறுதூண்டுகோலால் ஞானப் பிரகாசத்தோடு வளர்ந்தது. பலமுறை தாசனை-கொழும்பு வந்த போ தெல்லாம் அழைத்துப் போய், மலைநாடுகளில் பஜனை சத்சங்கங்களை ஏற்படுத்தி மக்களுக்கு தாசன் வழியாக நிறைய சேவை செய்தார். எல்லா எஸ்டேட்டுக்களிலும் கோவில்கள் புதுப்பிக்கப்பட்டன. தேயிலைத்தோட்டத் திலே திவ்விய நாம சங்கிர்த்தனம் எழுந்தது. படித்தவர் கள் நல்லன படிக்க வேண்டும் என்ற ஆவலைப் பெற்ற னர். எல்லாமே சத்சங்கத் தொண்டர்களான முத்தையா சகோதர சகோதரிகளின் அற்புத பணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தோடு சத்துகள் சேர்ந்தால் சங்கீர்த்தன சத்சங்கங்கள்
சந்தனத்தோடு அது உரைத்தால் சந்தோஷ சுகந்த வாசம்
கத்தும் கழுதை இரண்டு கூடில் கால்கொண்டு உதைத்துக்கொள்ளும்
உத்தமரே கேளுங்கள் ஒன்று உரைக்கின்றேன் கபீர்நானே. என்றபடி

1946 முதல் 1952 வரை ஈழநாடு பூராவும் பஜனையும் களங்கமற்ற சத்சங்கமும் கொடி கட்டிப் பறந்தது. சிவானந்தர் ரிஷி கேசத்தினின்று ஈழம்சென்றார். ராமதாஸர் தென் கன்னடத்தினின்றும் இலங்கை வந்தார். எல்லாவிதத்திலும் ஈழ நாட்டில் இது புனிதமான தெய்விக காலம். சுத்தானந்த பாரதி சென்றிருந்தார்.

பல ஊர் சங்கத் தொண்டர்களின் விருப்பத்திற்கிணங்க திருக்கேதீஸ்வரத்தில் சத்சங்க சாதனா வாரம் நடப்பதாக ஏற்பாடாயிற்று. விவசாய இலாகா இஞ்சினியர் ஆறுமுகம் அவர்களின் உறுதுணையுடன் க. ராமச்சந்திரா ஐயா அவர்கள் தலைமையில் இது நடந்தது. இதில் பஜனைக்கும் - சாதனைக்கும் - யோகத்திற்கும் - தாசனும் பக்தித்தத்வ சாதனைபற்றி பாலயோகி ராமதாசரும் சாஸ்திர - வேத - பக்தி சரித்திர அனுபவத்திற்கு சுகப்பிரும்மம் ராமஸ்வாமி சாஸ்திரிகளும் தமிழ் நாட்டிலிருந்து சென்றிருந்தோம். திருஞான சம்பந்தர் மடாலயத்தில் இவ்வற்புத சத்சங்க சாதனா வாரம் நடைபெற்றது. ஈழத்தின் பல பகுதிகளினின்றும் குடும்பத்துடன் பல நல்லவர்கள் பெரியவர்கள் வந்து சிறப்பித்தனர். தாசன் ஒரு குறும்புக்காரன். முசுப்பாத்தியான விளையாட்டுக்காரன் என்று உங்களுக்குத் தெரியுமே.

ஒரு வேடிக்கையான ஒரு சோதனை (ஆனால் கடினமையானது.) வைத்தான். அதாவது,

1. சாதனா வார முடிவானஇன்று உங்கள் மனநிலை என்ன?
2. நீங்கள் வாழ்க்கை பூராவும் பின்பற்ற கொண்டுள்ள சங்கல்பம் என்ன?
3. அதில் வரும் இடையூறுகளைப் பற்றி விளங்கி இதில் தேறுவிட்டால் தோற்றுப் போவார்களே என்பது போல

பல குறுக்கீடுகள் செய்து பலர் எடுத்துக்கொண்ட சபதத்தை நழுவ விட்டு முயற்சி செய்வதாக தத்வங்கள் நியதி முறைகள் சிலவற்றைக் கொண்டு விடைபெற்றனர்.

ஆனால் திரு. முத்தையா - சிவபூஷணம் அம்மையார் - திரு. ஜோதி அவர்கள் மூவரும் பிரும்மச்சார்யம் கைக்கொள்வதாகவும் - சமயப் பணி கூடுமானவரை எதிர்பாற்பின்றி பிரசாரம் - பத்திரிகை வெளியீடு - கல்விக் கூடம் முதலியவை மூலம் மேற்கொள்வதாக உறுதி கூறினார். இன்று வரை வெற்றியே பெற்று வருகின்றனர்.

மூவரில் சிறந்த முத்தையா, முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பித்த ஆத்மஜோதி மூலம் இன்று வரை அரும் பெரும் பணிகள் செய்து வருகிறார். ஈழ நாட்டிலே ஈடு இணையில்லா தொண்டர்களில் ஒருவராய், பேச்சு, தியானம், பத்திரிக்கை மூலம் பக்தியைப் பரப்பி வருகின்றார்.

''உட்கார்ந்து - தியானித்து உலவிவரும் உங்களாலே
உலகத்து ஜீவர்களுக்கென்ன பயன் சொல்லீரோ''

என ரமணமகரிஷியைக் கேட்டார். அதற்கு அவர்,

''தெருத் தெருவாய் நின்று ஒளி சுமந்து தரும் கம்பங்கள்
சோம்பேரி என்றது வர்மஜெனரேட்டர் நிலையத்தை''

என்றார் மகரிஷி. கேள்வி கேட்டவர் பெரிய அறிவாளி. அரசியல்வாதி. புரிந்து கொண்டார். வணங்கிச்சென்றார்.

ஈழத்து மலைநாட்டு நடுவினிலே இருந்து கொண்டு
இயக்குதையா ஆத்மஜோதி முத்து அதன் ஒளிஎங்கும்
பாழத்து பரமசுகம் பாரினிலே பெறுவதற்கு
பார்காடுபோக வேண்டாம் பண்புடனே வாழ்போதும்

என்றபடி திரு. முத்தையா இன்று 60 ஆண்டு வயது கடந்து இளமையோடு வாழ்கின்றார்.

சொல்லுஞ் சொல் கலை அழகு சூறுமங்கள் தெளியாமல்
சொல்லுவாரைச் சுயநலத்தால் புகழ்வார்கள் தாழ்ந்திடுவார்
வல்லமைகள் தோற்றுவிடும் வாக்குகளும் பொய்த்துவிடும்
நல்லசத்து சங்கத்தவர் நாடுவார்கள் சத்தியத்தை

என்பது தாசனது 55 வயது அனுபவம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 வயது முதல் தாச னுடைய வாழ்க்கையும் அதன் சோதனைகளும் வேதனை களும் வெற்றிகளும் ஞாபகத்தில் உள்ளது. அடைவது எளிது. அதனைக் காத்துக்கொண்டு அதே மன-உணர்வு நிலைகளில் வாழ்வது கஷ்டம். அதற்கு சாதனைகளின் வேகம் குறையாமல்-கற்றது கை மண்ணளவு - கல்லாதது உலகளவு - பெற்றது சிறு துளி பெருதது மேருவிற் பெரிது -என்ற நினைவோடு வாழும் போது மன நிறைவும் கர்வ மின்மையும் ஏற்படும்.

தன் சாதனையாலும் ஆன்றோர்கள் ஆசியாலும்-நல்ல அனுபவமாகப் பேசக்கூடியவர் முத்தையா, உலக சமய மகாநாடு சென்னையில் நடந்த போது எளிய கருத்தாழ முள்ள கருத்துக்கள் அடங்கிய கருத்துக்களை இலவசமாக அச்சிட்டு வழங்கி ஈழத்து மதபற்றுள்ளவர்களின் நல்ல தொரு பிரதிநிதியாக விளங்கினார். சில ஆண்டுகளுக்கு முன் அருணையில் நடந்த அருணகிரிநாதர் விழாவில் பங்கு கொண்டு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப் பட்டார்.

மனிதர்களையும் அவர்கள் காட்டும் சித்திகளையும் மட்டுமே நம்பி உலாவும் உலகில் கடவுளை நம்பி-நற்பணி செய்யும் நல்லவர் நம் முத்தையா. இவர் பல்லாண்டு வாழ்க.

காண்பார் காணும் காக்ஷிக்கப்பால் கருத்தாம் ஞான ஒருமை
பூண்பார் அன்புப் புகழாரமே பொலிவாய் திகழ் வடிவாய்
ஆண்பால் பெண் பொதுப்பாலிவை அனைத்துங் கடந்துலவும்
மாண்பான் பரமேசன் அருள் வலிவால் வாழ்க முத்தையா!
முத்தாம் நல்ல எழுத்தோடுறை செயலால் மன நிறைவால்
சத்தாம் முத்தையா உயர் மெய்யா நீ வாழ்க.

## முத்துவுக்குப் பத்துப் பாட்டு

எழுத்தால் ஈழத்து மக்களுள்ளே தெய்வீகம்
எழுச்சிபெற இசைவிக்கும் இன்சொல் முத்தையா வாழ்க
அமுதமான இன்ப அன்பு அறிவுநிறை நடத்தை நேர்மை
இத்தனையுங் கொண்டவன் நம் ஆத்மஜோதி முத்து வாழ்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தினை ஆழ்கடல் மூழ்கி எடுப்பது போல் அன்பு நல்லான்
முத்தையா எனக்குக் கிடைத்தார் கேதிஸ்வரத்து சத்சங்கத்தில்
சித்திபெற்ற உளம் ஆனால் செருக்கறியா எளிய வாழ்க்கை
பெத்த வயிறு வாழ்த்துப் பெறவே வாழும் ஈழத்தாத்மஜோதி

ஜோதி கண்டு வாழ்வா ரவரில் சிலபலபேர் யானும் அறிவேன்
ஆதியையே நம்பும் உறுதி அம்மா இவற்கதிகம் ஆமாம்
நீதிநிலை மதிப்போ டென்றும் நிலைத்த நல்ல சாதனை உடையன்
காதி மோதா அடக்கமுள்ள கருணைகர்ம சிந்தை மிக்கவன்

என்முன்னே எத்தனையோ பேர் இருந்தார்கள் போனார் வருவார்
தன்முன்னே பிறர்தாம் வாழத் தத்துவமாய் வாழ்ந்து காட்டும்
முன்வினையும் மூலவிதியும் முயன்று வெற்றி கண்டார் சிலரில்
நன்வினையின் சாதனையதனால் நாதமுணர் சித்தன் இவனே

சித்தமலம் அறுத்தன்றென்னை சிவமாக்கிப் பாடவைத்த
அத்தன் கதிர்காமம்உறை ஆண்டவனின் அன்புசேய் ஆம்
சித்தமதில் சிவைக்கன்றிபிட மில்லா இப்பித்தன் உள்ளும்
புகுந்தவரில் ஒருவன் ஆமாம் புத்தகம் பல எழுதிடுவான்

புத்தம்புது உணர்வோடு பொலிவுடைய அன்பர்குழாம்
சித்தமொன்றி சிவன் உமைவாழ் சிகரமேறித் திரும்பிய உன்
மெத்த ஆடல் அருள்பெற்ற மேன்மை பலர் உரை என்றே
புத்தகமாய் அடியார் புகழ் க்ஷேத்திர யாத்திரை நூலுங்கண்டான்

கண்டவர்கள் விண்டவிதம் கண்டவாறே இருந்திருந்தால்
காலமதுங் கோலமதுங் கடுகளவும் மாற்றமின்றி
உண்டவர்கள் நிறைவதுபோல் ஒருமை மன நிறை விருக்கும்
உயர்வு காணும் பாங்குடையான் உயர்கருத்து எழுத்தாளன்

எழுதியது எல்லாமே எத்து இன்றி புத்அகமாய்
பழுது காணு வாழ்வு காட்டும் பாதையதாய் இருந்திடுமேல்
அழுது ஏங்கும் ஏழ்மை ஏது அச்சமேது கொச்சை ஏது
தொழுது வேண்டும் பித்தன் சொல்வேன் முத்துநல்ல சத்து ஆமாம்

சத்து என்று நாடிப்போவோம் சாதிபேதச் சழக்கு அங்கு
சத்தமின்றித் திரும்பிவந்து – சத்தியத்தின்முன் அழுவோம்
அத்தன் புகழ் கேட்கப் போவோம் – அங்கும் காசு புகழ்கூச்சல்
இத்தனையும் இல்லா சங்கம் இருக்கும் ஆத்ம ஜோதியில் பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதியாள் பாலன் தந்தை தனயன் பரந்தாமன் ஏக புத்தன்
கூறுகின்ற ஞான ஒருமை கேட்கப் பார்க்க அருள்தான் வேண்டும்
பேர்பாடி நூறு ஆண்டு முத்துவாழ வேண்டும் என்று
தார்மார்புக் காளி ஆதி சக்தி தானே வேண்டுகின்றேன்.

பத்து கேள்வி கேட்டு அன்று ஈழத்து மக்களுக்கெல்லாம் ஆத்மஜோதிமூலம் விடைவாங்கி மலர் வெளியிட்டு மகிழ்ந்த முத்தையாவிற்கு நல்லமுறையில் மணிவிழா கொண்டாட வேண்டும். நிறைய பொருள் திரட்டி ஆத்மஜோதி ஆயிரமாண்டு - தமிழ் உள்ளளவும் வாழச் செய்யவேண்டும்.

இன்பமே சூழ்க — எல்லோரும் வாழ்க

அனைவருக்கும் அன்பு ஆசி

---

தென் இந்தியா ராஜபாளையம்

ஸ்வாமி சீதாலக்ஷ்மி அம்மாள் அவர்களின்

## வாழ்த்துரை

தெய்வ பக்தியும் ஆத்மிக சிந்தனைகளும் அடங்கிய நல்ல கருத்துக்களை ஆத்மஜோதி பத்திரிகை மூலம் ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள் வெளியிட்டு வருவது போற்றத்தக்கது. இதன் மூலம் இந்தியாவிலும் குறிப்பாக தமிழ் நாட்டில் ஆத்மஜோதியை பிரகாசிக்கச் செய்த சித்தரும் முத்தருமாவார்.

அவரது சஷ்டியப்த பூர்த்திவிழா இனிமையாக, ஞானம், பலம், தேஜஸ், கீர்த்தி, வைராக்கியம் ஆகிய சகல சம்பத்துக்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை சிவயோக சமாசம்
## ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா அவர்களின்
## ஆசியுரை

நாகரீக முன்னேற்றம், விஞ்ஞானம் இவைகளைப் பற்றி நாம் கூடுதலாகப் பேசி பெருமைப்படுகின்றோம். என்ன முன்னேற்றங்கள் இருந்த பொழுதிலும் அவை ஆரோக்கியகரமாக வளராவிட்டால் சமுதாயத்தில் எத்தகைய சுகமும் அமைதியும் கொடுக்கக் கூடியதன்று. காரியங்களை ஊன்றி நினைத்தால் மாரடைப்பு வருமளவுக்கு மனிதனும், மனித சமுதாயமும் பலவீனமடைந்து வருகின்றது. இவைகளை மாற்றி அமைப்பதற்கு மிகவும் சக்தி வாய்ந்த ஒரு தார்மீக இயக்கம் தேவைப்படுகின்றது. உணவினால் மாத்திரம் உயிர் வாழ்வது வாழ்வன்று. நன்றாக வாழ்வதற்கும், நெறியுடன் இறப்பதற்கும் ஒரு சிறந்த இலட்சியமும் நம்பிக்கையும் இருக்க வேண்டும். அதில்லாமல் இருந்தால் மனிதன் திக்குத் திசை தெரியாமல் தடுமாறித் திரிவான். வாழ்க்கையின் தாளம் பிழைக்கும்.

கர்மவினை சாராமல் வாழ்வதென்பது வாழ்க்கையின் ஒரு உயர்ந்த நோக்கம். பல்லாண்டுகளாக கேட்டுக் கேட்டு பழகி வந்த ஒரு அரும்பெரும் கருத்து. இனிப் பிறவாமல் இருப்பதற்கு அதுதான் ஒரே ஒரு வழி. கர்மங்கள் எத்தகையதாக இருந்தாலும் சரி பலாபலனை இறைவனுக்காக அர்ப்பணம் பண்ணிவிடு. இது தான் வினைப் பயன் சாராமல் இருப்பதற்குக் கூறும் சித்தாந்தம். அங்கும் இங்குமாக அபூர்வமாக சிலர் இதை சாதித்திருக்கின்றனர். இந்த அபூர்வமான சிலருடைய அனுபவங்களை சமுதாயத்தின் பரவலான சமசிந்தனைக்கும் செயலுக்கும் உட்படுத்தி எடுக்க வேண்டும். அப்பொழுது தான் மனித வாழ்க்கை பெரு வாழ்வாக உயர முடியும்.

கடவுளைப் பற்றி தெளிவான உணர்வில்லாத மனத்தால் வினைப் பயனை சமர்ப்பணம் பண்ணுவதென்பதே ஒரு அசாத்தியமான காரியமாகும். இதை எளிதான முறையில் சாதிக்கக் கூடிய வழிகள் இருக்கின்றன. கர்மத்தையும் கர்மபலனையும் சமுதாயத்திற்காக அர்ப்பணம் செய்க. சமுதாயம் இறைவனுடைய படைப்பென்பதால் சமுதாயத்திற்கு அர்ப்பணிக்கும் சகல கர்மங்களும் அதனுடைய பலாபலனும் இறைவனைச் சார்ந்திருக்கும். அங்ஙனம் தேசத்தின் ஆத்மீக பௌதீக சேவை மூலம் இறப்பு பிறப்பில் இருந்து விடுவிக்கின்றது. இத்தகைய இலட்சியத்துடன் செயல்பட்டு வரும் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்களுக்கு அறுபது ஆண்டுகள் பூர்த்தியாகின்றது. மனித வாழ்க்கையில் அறுபது ஆண்டுகள் என்பது சிறந்த அனுபவங்களுடைய ஒரு காலகட்டம். அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு தான் ஒருவர் மனித சமுதாயத்திற்கு தெளிந்த நிலையான கருத்துக்களை பகிர்ந்து கொடுக்க முடிகின்றது. திரு. முத்தையா அவர்கள் மனித சமுதாயத்திற்கு இன்னும் கூடுதலான உத்வேகத்துடன் ஆத்மீக சமுதாய சேவைகள் செய்வதற்கு பல்லாண்டுகள் வாழ்வதாக. பரமேஸ்வர கடாட்சத்தால் மேலும் மேலும் அவர்களுக்கு சகலவிதமான மேன்மைகளும்உண்டாவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவை கொள் கரும்பே

நா. முத்தையா

கரும்பில் இரண்டு வகை. சுவைகொண்ட கரும்பு ஒரு வகை. சுவை கொள்ளாத கரும்பு மற்ற வகை. சுவை என்பது இங்கே அறுசுவையுள் ஒன்ருகிய இனிமையைக் குறித்து நின்றது. சுவை இல்லாத கரும்பை பேய்க்கரும்பு என அழைப்பர். பொய்க்கரும்புதான் பேய்க்கரும்பு எனவும் பெயர் பெற்றிருக்கலாம் போலும். உருவத்தில் கரும்பினுடைய தோற்றம்தான், ஆனுல் சுவையில் அப்படி அல்ல.

இதே போல உருவத்தில் எல்லாரும் மனிதரேதான். ஆனுல் உள்ளத்தால் மனிதப்பண்பு அற்றவர்களேயும் பார்க்கிருேம். எந்த ஒரு நல்ல குணத்தையும் தனக்கு என்று வைத்துக்கொள்ளாத ஒரு சிலர் இருக்கத்தான் செய்கின்ருர்கள். அவர்களே வள்ளுவர் கயவர் என்று அழைக்கிருர். கயமையை உடையவன் கயவன். அதாவது கீழ் மக்களது தன்மை மனித சமுதாயத்தின் நல்வாழ்விற்கு விரும்பத் தக்கனவாக எந்த ஒரு நற்குணமும் இல்லாத மிகவும் கீழ்த்தரமான மனிதர்களும் இருக்கவேதான் செய்கின்ருர்கள். இவர்களேத்தான் வள்ளுவர் "மக்களே போல்வர் கயவர்" என்று குறிப்பிடுகின்ருர்.

வெளித்தோற்றத்தில் கயவர்கள் மற்ற மனிதர்களேப் போலவே காணப்படுவார்கள். ஆனுல் அவர்களிடத்தில் மனிதத்தன்மையே இருக்காது. மனிதத்தன்மை இல்லே என்ருல் வேறு என்ன தன்மை இருக்கும்? அதற்குச்சரியான உவமானம் சொல்ல முடியாது. அதாவது, கயவர்கள் இனத்தால் மனிதர்களோடு சேர்ந்தவர்களே. ஆனுலும் குணத்தாலும் செயலாலும் அவர்கள் யாரோடும் சேர்ந்த வர்கள் அல்ல.

பேய்க்கரும்பு தோற்றத்தால் கரும்புதான். ஆனுல் சுவையால் வேறுபட்டது. ஆகவே உண்மையானகரும்பைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேய்க்கரும்பினின்றும் பிரிப்பதற்காகச் சுவைகொள் கரும்பே என்றார். பிஞ்சுக்கரும்பிலே முதிர்ந்த இனிமையைக் காணமுடியாது. நுனிப்பகுதியிலே கரும்பைத் தின்றால் சுவைக்காது. அடிநோக்கிச் செல்லச் செல்ல இனிக்கும். ஆதலால்தான் பெரியவர்களுடைய நட்புக்கு நுனியிலிருந்து அடிநோக்கி உண்ணும் கரும்பை உவமையாகக் கூறினார்கள்.

இங்கே சுவை கொள் கரும்பே என்று குறிப்பிட்டது சரஸ்வதி தேவியை. ஆரம்பத்தில் பக்தி செய்யும் போது தேவியின் திருஉருவைத் தியானிப்பார்கள். அத்திருஉருத் தியானம் ஆரம்பத்தில் நுனிக்கரும்பைச் சுவைப்பதுபோலவேதான் இருக்கும். தேவியின் திருவடிவத் தியானத்தில் லயிக்கும்போதுதான் உள்ளம் பேரின்ப நிலை எய்துகின்றது. அது அடிக்கரும்பைச் சுவைப்பது போன்றதாகும். அடிக்கரும்பிற்கு அப்பால் சுவை இல்லாதது போல திருவடித் தியானத்திற்கு அப்பால் ஒரு பேரின்பம் இல்லை என்பது கருத்து. இதனால் தான் பெரியோர்கள் ''திருவடியே ஞானம்'' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்தச் சுவை கொள் கரும்பாகிய தேவியை தனது நாவிலே வைத்து அனுபவிப்பவன் பிரமதேவன், சுவைக்குரிய இடம் நாவுதானே. சுவையை அனுபவிக்கும் இடமும் நாவாகிறது. பிரமதேவன் நாவிலே மாத்திரம் வைத்து அனுபவிக்கும் ஒரு பொருளை குமரகுருபரர் உள்ளத்திலே வைத்து தாம் அனுபவிப்பதுமல்லாமல் எம்மையும் அனுபவிக்கச்செய்கின்றார்.

பிரமதேவன் தேவியை நாவோடு மாத்திரம்தான் வைத்துக்கொண்டான். உள்ளத்திலே அவன் வைத்துக் கொள்ளவில்லை என்பதற்கு இரண்டு சான்றுகள் உள்ளன. அடிமுடிதேடிய போது தாளம் பூவைப் பார்த்து தான் முடியைக் கண்டதாகப் பொய்கூறுமாறு வேண்டியிருக்கிறான். அத்தருணத்திலே வாக்தேவியாகிய சரசுவதியும் பிரமதேவனுடைய நாவை விட்டுத் தூரத்திலே தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருக்கவேண்டும். சரசுவதிதேவி பிரமதேவனுடைய உள்ளத்திலே இருந்திருந்தால் நாவிலே பொய் வந்திருக்காது அல்லவா? ''உள்ளத்திலே ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்'' என்ற தத்துவம் இதனைத்தான் காட்டுகின்றது.

வேதங்களுக்கு அதிகாரி பிரமதேவன், நாவால் ஓதினான், ஆனால் பொருள் உணர்ந்து ஓதவில்லை. அதனால் 'ஓம்' என்ற பிரணவத்திற்குப் பொருள் தெரியாது குட்டும் வாங்கிச் சிறையும் பட்டான். சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்பவர்கள் தான் சிவபுரம் செல்லக் கூடும். பிரமதேவன் தேவியை நாவிலே மாத்திரம் வைத்துச் சுவைத்தான். அதனால் அடியும் குட்டும் பட்டான். இப்படி தனக்கு நேராது இருக்கவேண்டும் என்று கருதித் தேவியைத் தனது உள்ளத்திலே எழுந்தருளப் பண்ணுகின்றார் குமரகுருபர சுவாமிகள்.

சரசுவதிதேவி வெள்ளைக் கலை உடுத்து வெள்ளைப் பணிபூண்டு, வெள்ளைக் கமலத்திலேதான் வீற்றிருக்கிறாள் என்று புலவர்கள் பாடி உள்ளார்கள். பிரமதேவனும் தாமரையைத்தான் ஆசனமாக உடையவன். தமிழருடைய கலையின் அழியாச் சின்னமாக விளங்குவது தாமரை என்று தான் கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி குறிப்பிட்டுள்ளார்கள். எமது இதயம் தாமரை வடிவம். நாம் கை கூப்புவது தாமரை வடிவம். முகம் தாமரை, கண் தாமரை, இப்படி எத்தனையோ உவமைகள் எல்லாம் தாமரை மயம். சூரியனைக்கண்டு விரியும் ஒரே ஒரு பூ தாமரைதான். பூக்களில் அழகியது தாமரை என்பதை நாவுக்கரசர் ''பூவினுக் கருங்கலம் பொங்குதாமரை'' என்று குறிப்பிடுகின்றார்.

தாமரை சூரியனைக் கண்டு மலர்வது போல எமது இதய தாமரையும் குருவாகிய ஞான சூரியனைக் கண்டு மலர்கின்றது. சூரியன் இல்லாது தாமரைக்கு மலர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாததுபோல குருவாகிய ஞானசூரியன் இல்லாது சீட னுடைய இதய மலர்ச்சியும் இல்லையாகும். எப்படியும் சரசுவதிதேவியினுடைய திருப்பாதம் தனது உள்ளத் தாமரையிலே பதிந்தால்தான் தனக்கு ஞானம் உண்டா கும் என்பது குமர குருபர சுவாமிகளுடைய நம்பிக்கை.

தேவியைத் தியானித்துத் தியானித்தே தனது உள்ளம் வெள்ளையாகிவிட்டது என்கிறார். நிறத்தால் மாத் திரம் அன்று குணத்தாலும் சாத்வீகநிலை அடைந்துவிட் டது என்கின்றார். பக்தியாகிய நீரிலே இதயமாகிய தாமரை வளர்கின்றது. அதனால் மாசற்ற உள்ளம் ''மனத்துக்கண் மாசு இலனாதல் அனைத்து அறன்'' என்பது வள்ளுவ னுடைய கருத்து. ''மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்'' என்று சொல்வார்கள்.

''வெள்ளைத்தாமரைப் பூவில் இருப்பாள் வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்'' என்று புலவர்கள் பாடினார்கள். அப்படி வெள்ளைத்தாமரையில் தான் நினது திருப்பாதம் தங்கியிருக்கும். எனது வெள்ளை உள்ளத்திலே வந்து தங் குவதற்கு எனது உள்ளம் தகுதி அற்றதா? என்று கேட் கிறார்.

இருவினைப் பந்தபாசங்களினின்றும் கடந்த மனநிலையே மாசற்ற மனநிலையாகும். நல்வினையும் பிறப்புக்கு கார ணம். தீவினையும் பிறப்புக்குக் காரணமாகும். நல்வினை பொன்விலங்கு, தீவினை இரும்புவிலங்கு. இருவினை ஒப்பு ஏற்ப டுகின்ற பொழுது தான் மனது மாசு அறுகிறது. இரு வினை, ஒப்பு மலபரிபாகம் ஏற்படுகிறபோது தான் இறை யருள் பதிகின்றது. இதனைத் தான் சத்திநிபாதம் என்பர். சத்தியே திருவருள், திருவருளே சக்தி.

தம்மை உணர்ந்தவர் வெள்ளை உள்ளத் தண்தாமரை யினை உடையவர். அடியவர்கள்தாம் உய்தி பெறுவதற்கு இறைவனின் திருவடித் தாமரையினையே பற்றுக் கோ டாகக் கொள்வர். திருவடிப்பேறே திருவடிஞானம் என் றும் அழைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடியை நாடிச்சென்ற திருமால் திருவடியைக் காணுதவராயினும் திருவடிஞானம் பெற்ருர். அதனுல் உலகத்தாரால் வணங்கும்பேறும் பெற்ருர். முடியை நாடிச் சென்ற பிரமதேவன் திருவடி ஞானம் பெருமையால் மக்களால் வணங்கப்படும் பாக்கியமும் இல்லாதவராஞர். அகங்காரம் பிடித்தவர்கள் நிமிர்ந்து பார்ப்பார்கள். அதனுல் அவர்களுக்குத் திருவடிஞானம் கிடைப்பதில்லை. அகங்காரம் அற்றவர்கள் கீழேயே எந்தநேரமும் பார்ப்பார்கள். அதனுல் அவர்களுக்குத் திருவடிஞானமும் கிடைக்கின்றது.

உலகிலுள்ள எல்லா ஜீவர்களதும் வாழ்க்கையின் குறிக்கோள் திருவடி ஞானம் பெறுதலாகும். அதனுல் தான் எம்மை எல்லாம் திருவடியாத்திரைக்காரர் என்று அழைப்பார்கள். இந்த ஞானம் கிடைக்கும் போதுதான் உலக சகோதரத்துவம் ஏற்படும். உலகிலுள்ள இன்னல்கள் அத்தனைக்கும் மூலகாரணம் இந்தத்திருவடி ஞானம் பெருமையே யாகும்.

வெண்தாமரை கலைமகளின் இருக்கை, வெள்ளை உள்ளத்தண் தாமரை அடிகளாரின் இதய தாமரை. அதனைத் தண் தாமரை என்றது உயிர்களிடத்துக் கொண்டுள்ள கருணையாகிற தன்மை பற்றியாகும்.

தகாது கொலோ? என்ருெரு கேள்வி எழுகின்றது. தகுதி உடையது என்ற உறுதிப்பாட்டினுல் எழுந்த கேள்வியாகும். ''நின் கருணை ஏன் பிறக்கவில்லை'' எனவினவும் உரிமையினுலும் அக்கேள்வி எழுந்திருக்கலாம்.

திருவடிப்பேறு பெறுதலை நாடுதலே உயிர்கட்கு ஆவதான பேரின்ப நாட்டத்திற்குரிய செயல் என்பதனை வள்ளுவர் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் நன்கு தெளிய வைக்கின்ருர். கற்ற கல்வியின் பயன் இறைவன் திருவடி ஞானம் என்று இரண்டாவது குறளில் கூறிய வள்ளுவர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்" என்றும்
"அடிசேர்ந்தார்க் கியாண்டும் இடும்பை இல" என்றும்
"தாள்சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது" என்றும்
"தாள்சேர்ந்தார்க் கல்லால் பிறவாழி நீந்தலரிது" என்றும்
"எண்குணத்தான் தாளை வணங்காத்தலை" என்றும்
"நீந்தார் இறைவனடி சேராதார்" என்றும்
மற்றைய குறள்களிலே திருவடிப்பெருமையைப் பரக்கக்கூறுகின்றார்.

இறைவன் ஆன்மாக்களை ஈடேற்றும் பொருட்டு ஐந்து தொழில்களைப்புரிகின்றான். அவை படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாம். முதல் மூன்றும் உடலோடு சம்பந்தமானவை. பின்னிரண்டும் உயிரோடு சம்பந்தமானவை. படைத்தல் என்றால் உடலைப் படைத்தல். இதற்கு அதிகாரி பிரமதேவர். இவ்வுலகத்தே வாழும் உயிரினம் அனைத்தையும் வேறு வேறான உடற்கூறு களிலே சென்று சென்று பிறக்குமாறு செய்கின்றவர் அவரே.

காத்தல் தொழிலுக்கு அதிகாரி திருமால். உடற்கூறு எடுத்துப் பல்வேறு உயிரின வகைகளாகி பிறந்தவை அனைத்தும் வாழவேண்டும். அவை வாழ்வதற்கு உறுதுணை யாகியும் தீமைகளினின்றும் அவை விடுபட்டு நன்மைவழிச் செல்வதற்கு உதவுவோனக விளங்குபவரும் அத்திருமாலே.

பிரமனின் படைப்புத் தொழிலும், திருமாலின் காத்தல் தொழிலும் இடையீடின்றி நிகழ்ந்துகொண்டே போனல் இவ்வுலகில் அவை வாழ்வதற்கான இடமின்றிப் பெருநெருக்கடியும் ஏற்பட்டுவிடும். ஆகவே அனைத்தையும் உரியகாலங்களிலே அழிக்கும் கடமையைப் பூண்டு விளங்கினார் சிவபெருமான். வினையினால் வந்த உடல் வினை முடிந்ததும் அழிந்துதானே ஆகவேண்டும்.

மறைத்தல் தொழிலுக்கு அதிகாரி மகேசுவரன். அதாவது ஆன்மாவை மூடி இருக்கும் ஆணவ இருளை நீக்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது பொருள். செம்போடு கூடிய களிம்பு அநாதியானது போல ஆத்மாவோடு கூடிய ஆணவமும் அநாதியானதாகும். கோயிலிலே சுவாமி முன்னிலையில் உள்ள திரைச் சீலையை குருக்கள் நீக்கிய உடனே இறைவனது திருவுருவம் காட்சி கொடுப்பது போல ஞானகுரு ஒருவருடைய உபதேசத்தினால் ஆணவத்திரை இழுபடுகிறபோது ஆன்மா பளிச்சௌனத் தெரியும்.

அருளல் தொழிலுக்கதிகாரி சதாசிவமூர்த்தியாகும். மலம் அகன்ற உடனே திருவருள் தானாகவே வந்து பதிகின்றது. ஊழிக்காலம் என்ற ஒன்று உண்டு என்பார்கள். அந்தக் காலத்திலே அனைத்து உலகத்தையும் அறவே அழித்துப் பித்தனாகிச் சுடலையாடியாகச் சிவபெருமான் திகழ்வார். உயிர்களைத் தனித்தனியே உடற்கூட்டினின்றும் பிரித்து அழிக்கும் சிவபெருமான், அப்போது அனைத்தையுமே ஒருசேர அழித்து விடுகின்றார்.

மாயையினின்றும் தோன்றிய தனுகரண புவனபோகங்களாகிய அனைத்தும், மீளவும் மாயையிலேயே சென்று ஒடுங்கி விடுகின்றன. அந்த ஊழிக் காலத்திலே சக்தியின் அருள் நோக்கினால் பெருமானின் வெம்மை குறைகிறது. பெருமான் மீளவும் தனுகரண புவனபோகங்களைப்படைக்கும் பெருங்கருணையினை நினைவு கொள்கின்றார் குமரகுருபரர். அவ்வேளை மீளவும் அனைத்தையும் உண்டாக்கும் வண்ணம் நான்முகன் கைக்கொள்ளும் பிறப்பிக்கும் செயலையும் எண்ணுகின்றார். ''அவர் சுவையாகக் கொள்கின்ற கரும்பே'' என அழைத்துக் கலைவாணியைப் போற்றுகின்றார்.

தயிர் உண்ட கண்ணனை யசோதரை உறுக்கினாள். கண்ணன் தயிர் உண்ணவில்லை என்று சாதித்தான். யசோதரை கண்ணனுடைய வாயைத் திறந்துபார்த்தாள். அதனுள்ளே உலகத்தைக் கண்டாள். யசோதரை அதிசயித்தாள். கண்ணா வாயை மூடு மூடு என்று அலட்டிக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமால் உயிர்களைக் காக்குந் தொழிலைச் செய்பவர். ஏழு உலகங்களையும் அருள் செய்து காத்து முடிவில் அவற்றைத் தானே உண்டு தன் வயிற்றுள் அடக்கிக் கொண்டவர் திருமால். அங்ஙனம் அடக்கிய பின்னர், திருப்பாற்கடலிலே பாம்பணையிலே அறிதுயில் நிலையிலும் அவர் அமர்ந்து விட்டார்.

ஸ்ரீ மகாலட்சுமிக்குச் சுயம்வரம் நிகழ்ந்தது. ஸ்ரீ மகாலட்சுமியைத் திருமணம் செய்ய வேண்டும் என்ற விருப்பால் கீழ் ஏழு உலகங்களிலும் உள்ளாரும் மேல் ஏழு உலகங்களிலும் உள்ளாரும் திரண்டு வந்திருந்தார்கள். சுயம்வர மண்டபம் பொங்கி வழிந்தது. கையில் மாலையுடன் இலட்சுமிதேவி தோன்றினர். இலட்சுமிதேவியால் மாலையிடப்பெறும் பாக்கியம் யாருக்குக் கிடைக்கப் போகிறதோ என்று எல்லார்கண்களும் இலட்சுமிதேவியை நோக்கின.

இலட்சுமிதேவி மேடை மீது தோன்றினர். தனது பிரதிக்கினையை அங்கு கூடியிருந்தவர்களுக்குக் கூறினர். யார் என்மீது ஆசையில்லாது இருக்கிறார்களோ? அவர்களுக்குத்தான் நான் மாலை சூடுவேன் என்று கூறிவிட்டு உடனே மண்டபத்தை விட்டு வெளியேறி விட்டார். அங்கிருந்தவர்கள் அத்தனை பேரும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆசையால் வந்தவர்களே. சுயம்வர மண்டபத்தில் இருந்தவர்கள் அத்தனை பேருமே ஏமாந்து விட்டார்கள்.

மாலையுடன் வெளியேறி இலட்சுமிதேவியார் நேராகத் திருப்பாற்கடலுக்குச் சென்றார். அங்கு அறிதுயில் கொண்டிருக்கும் கிருஷ்ணபரமாத்மாவைக் கண்டார். அவருக்கே மாலை சூட்டினர்.இன்றுவரையும்அவரதுபாத சேவையே தனது ஜன்மசாபல்யம் என்று அவரைப் பிரியாது பாதசேவை செய்து வருகின்றார். சேவையின் பயனாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமாலின் திருமார்பை விட்டு நீங்காப்பெரும்பேறு அவருக்கு கிடைத்தது. இப்படிப் பிரதிபலன் கருதாது ஆசையற்றுச் சேவைபுரிதலே சர்மமுத்தி என்று கூறப்படும்.

அழித்தல் தொழிலுக்குக் காரணராக இருப்பவர் சிவபெருமான். அவரைப்பித்தர் என்று சுந்தரர் பாடினார். எல்லா ஆத்மாக்களையும் தனது திருவடி நிழலில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்ற பெரும் பித்து உடையவர். அதனால் பெரும் பித்தனாகி ஊழிக்காலமுடிவிலே ஊழிக் கூத்து ஆடி எல்லா ஜீவாத்மாக்களுக்கும் ஆறுதல் கொடுக்கின்றார். ஒரு ஜீவாத்மாவையாவது அதாவது தனது திருவடியிற் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பதே அவரது பெரும் பித்து. அவரது ஊழிக்கூத்து வெளித் தோற்றத்திலே பயங்கரமானதாகக் கொடூரமானதாக இருக்கலாம் ஜீவகோடிகள் அத்தனைக்கும் ஆறுதல் கொடுக்கும் கருணைக்கூத்து என்றே கூறவேண்டும்.

ஜீவகோடிகள் ஆறுதல் பெறவேண்டும் என்ற காரணத்தைக் கொண்டு சிவபெருமானார் ஊழிக்கூத்து ஆடுகின்ற அதேநேரத்திலே அவரவர் வினையை அவரவர் அனுபவித்துத் தீர்த்து விடவேண்டுமென்ற கருணையினாலே பிரமதேவர் ஜீவகோடிகள் அனைத்தையும் மீளவும் படைக்க வேண்டுமென்று கருத்திற் கொள்ளுகின்றார்.

பிரமதேவர் தமது படைப்புத் தொழிலை தமது சக்தியாகிய சரஸ்வதி தேவியின் துணைகொண்டே செய்கின்றார். கரும்பு நாவுக்குச் சுவை ஊட்டுவது போல பிரமதேவரின் நாவை இருப்பிடமாகக் கொண்டசரஸ்வதி தேவி பிரமதேவரின் தொழிலுக்கும் சுவை ஊட்டுகின்றார். உடல்க்ளைப்படைத்த பிரமதேவர் நாவிலிருக்கும் சரஸ்வதி தேவியின் கருணையால் வேதங்களையும் படைத்தார். அதனால் வேதா என்றும் நான் மறைக்கிழவன் என்றும் அழைக்கப்படுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் 64 கலைகள் உண்டு என்பார்கள். அத்தனை கலைகளிலும் வல்லவர் சரஸ்வதி தேவி. ஆனால் அவர் கலைகள் எல்லாம் தெரிந்ததாகத் தம்மைக் காட்டிக் கொள்வதே இல்லை. "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" என்று கூறித்தமது அடக்கத்தை மென்மேலும் பிரகாசிக்கச் செய்கிறார்.

"சகல கலைகளுக்கெல்லாம் நாயகியான பூங்கொடியே! வெண்தாமரை மலரிலே நீ விருப்பமுடன் வீற்றிருப்பாய் என் உள்ளமும் வெள்ளை உள்ளமே! இங்கும் வந்து நீ எழுந்தருளி இராயோ? வெண் தாமரை மலருக்கு அல்லாமல், நின் திருவடிகளைத் தாங்குகிற பேற்றினைப் பெறுவதற்கு என் வெள்ளை உள்ளமாகிய குளிர்ந்த தாமரை மலருக்குத் தகுதி கிடையாதோ? தாயே! நின் திருவடிகளை இங்கும் வைத்து எனக்கும் நீ கருணைசெய்ய மாட்டா (யோ?

வெண்டாமரைக் கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொ
லோ? சகமேழு மளித்
துண்டான் உறங்க ஒழித்தான் பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகலகலாவல்லியே!

வெள்ளை நிறமுடைய தாமரை மலருக்கே அல்லாமல் நினது திருப்பாதங்களைத் தாங்குகின்ற பாக்கியம் பெறுவதற்கு எனது வெள்ளை உள்ளமாகிய குளிர்ந்த தாமரை தகுதி அற்றதா? ஏழு உலகங்களையும் பாதுகாத்து தானே உண்டருளிய திருமால் திருப்பாற் கடலிலே அறிதுயில் கொள்ளவும், உருத்திரமூர்த்தி அழித்தல் தொழிலைச் செய்து ஊழிக் காலத்தில் ஊழிக் கூத்தில் பித்துக் கொண்டவனாகவும் இருக்க மீண்டும் அவ்வுயிர்களைப் படைக்கும் காலத்தை அறிந்தவனாகிய நான்முகனது நாவில் வீற்றிருக்கும் சுவை கொண்ட கரும்பை ஒத்தவளே, சகல கலைகளுக்கும் இருப்பிடமான வல்லிக்கொடி போன்றவளே! என்பது பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த தீர்த்தம்

மதுரை திருப்புகழ் தவமணி
சிவஸ்ரீ கே. வி. தியாகராஜன்

சிவபெருமானது மூர்த்தங்கள் இருபத்திஐந்து என சிவாகமங்களும், பன்னிரு திருமுறைகளும் சைவ சாத்திரங்களும் கூறுகின்றன. இவைகட்கெல்லாம் மேலாக "பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடுந் தீர்த்தன்" என சிவபெருமானை நம் மணிவாசகப் பெருமான் திருவெம்பாவையில் கூறுவதை நாம் காண்கின்றோம். எம் பெருமான் தீர்த்த வடிவமாகவுமிருக்கின்றான். இந்தியாவில் இருப்பது கங்கை. இலங்கையில் இருப்பது மாணிக்க கங்கை.

"மணிதரளம் வீசி அணி அருவி சூழும்" மாணிக்க கங்கை என்பார் அருணகிரிநாதர். மாணிக்க கங்காதேவியானவள் நவரத்தின மணிகளும் முத்தும் பவளமும் அணிந்து சர்வாலங்கார பூக்ஷிதையாய் அழகில் தமக்கொப்பாரில்லையென பெருமிதத்துடன் பவனிவருகின்றாள். கதிர்காமக் கரையிலுள்ள திருக்கோயிலில் வீற்றிருக்கும் அழகே வடிவான கதிர்காமக்கந்தனின் திருவுருவத்தைத் தரிசித்ததும் தன் செயலழிந்தாள். அங்குள்ள முருகப்பெருமானின் எழுதரிய அறுமுகமும், மணிநுதலும் வயிரமிடை இட்டுச் சமைந்த செஞ்சுட்டிக் கலன்களும், துங்கநீள் பன்னிரு கருணைவிழி மலரும், இலகுபதினிரு குழையும் ரத்னக் குதம்பையும் பத்மக் கரங்களும், செம்பொந்நூலும், மொழி புகழுமிடைமணியும் அரைவடமும் முத்துச் சதங்கையும், சித்ரச் சிகண்டியும் செங்கை வேலும் அழகின் எல்லையாய் மாணிக்கச் சுடர் வடிவில் நிற்கும் முருகப்பெருமானது சேமக் கோமள பாதத் தாமரைகளைக் கண்டதும் அழகென்றால் இவனல்லவா அழகன்—முருகன் அழகெங்கே—என் அழகு எங்கே என்று வியந்து தாம் அணிந்த பொன்னும் மணியும் முத்தும் பவளமுமான ஆபரணங்களை முருகப்பெருமானது சேமக்கோமள பாதத் தாமரைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூட்டிமகிழ்கின்றாள் என்பார் திருப்புகழால் அருணகிரி நாதர். எனவே இலங்கை வாசிகள் உலகிலேயே மிகச்சிறந்த புனிதமான தீர்த்தம் மாணிக்க கங்கை நதித் தீர்த்தம் என்பார்கள்.

இந்தியாவில் சிவபெருமான் திருவிளையாடல் புரிந்த துலாதசாந்த க்ஷேத்திரமாகிய மதுரை வாழ் அன்பரைக் கேட்டால் முப்பத்தாறு தத்துவங்கட்கும் அப்பாற் பட்ட சிவபெருமான், வைகை நதியின் மணலைத் தானே திருமுடியில் பிட்டுவாணிச்சிக்காக சுமந்தார். ஆகவே வைகைநதிதீர்த்தம் தான் சிறந்ததென்பார். சிறிது தெற்கே சென்று சோழநாடு அன்பரைக் கேட்டால், எங்கள் காவேரி நதியை ஏழ்தலம் புகழ் காவேரி என்று திருப்புகழில் அருணகிரிநாதர் பாடுகின்றார். காவேரி நீரில்லையாயின் தமிழக மக்கட்கு உணவேது! எனவே காவேரி நீர் தான் சிறந்தது என்பார்கள். கொஞ்சம் வடக்கே சென்று யமுனநதி பாயும் நாட்டன்பரிடம் கேட்டால்கிருஷ்ணபரமாத்மா திருமேனி தவழ்ந்த திருமேனி சம்பந்த முடைய யமுனநதியே சிறந்தது என்பார். எல்லாவற்றிற்கும் மேலாக காசியம்பதி சென்று அங்குள்ள அன்பர்களைக் கேட்டால் கங்காநதிக்கு மேல் ஒரு நதி ஈரேழு புவனங்களிலும் இல்லை.

"புரிசடைமேல் புனலேற்ற புனிதன் தான் காண்க" என அப்பர் சுவாமிகள் கங்கையைத்தானே பாடியுள்ளார் என, வேதங்களிலிருந்தும் ஆகமங்களிலிருந்தும் ஆயிரமாயிரம் சான்றுகள் காட்டி கங்கை தீர்த்தம் தான் சிறந்தது என்பார்கள். இமயமலையில் 12600 அடி உயரத்தில் உள்ள (கங்கை) அங்கு அலக்நந்தா என்பார்கள். தண்ணீரைத் தொட்டால் கைமரத்துவிடும். அவ்வளவு குளிர்ச்சி. கங்கோத்பத்திக்கு பிறகு கங்கை முதன் முதலாக காட்சி தரும் இடம் பத்திரிநாத் என்றதலம். அங்குள்ள அன்பர்களைக் கேட்டால் இதற்குமேல் சிறந்த தீர்த்தம் எங்குமேயில்லை என அறுயிதிட்டுக் கூறுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த தீர்த்தங்கட்கெல்லாம் மேலான சிறந்த தீர்த்தம் ஒன்று உள்ளது. அது எது? சிந்திப்போம்! யாரொருவர் தனக்கென தன்னலங்கருதி வாழாமல் பிறர்க்கென உழைக்கின்றரோ அந்த உத்தமர்களின் நெற்றியில் உழைப்பின் போது துளிர்க்கின்ற வேர்வை நீருக்கு சமானமாக இத்தனை நதிகளின் தீர்த்தமும் ஈடாகாது என்பார் ஆன்றோர்கள்.

அப்படி உலகிற்காக உழைத்தவர்கள் தான் நமது சமய குருமார்கள். அப்படி உழைத்தவர்கள் விவேகானந்தர், ராமகிருஷ்ண பரமஹம்ஸர், துளசிதாசர் போன்ற மகான்கள். இன்றைக்கு நம் கண்கூடாகப் பார்க்கின்றோம். காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள், அவரது குருநாதர் காஞ்சி பெரியவர்கள். குமரி முதல் இமயம் வரை நடந்தே சென்று, நடமாடும் திருக்கோயிலாக ஆங்காங்கு எழுந்தருளி சமய போதனைகள் செய்து வருகிறார்கள். தேசத் தலைவர்களில் மகாத்மா காந்திஜி போன்றவர்கள் தமக்கென வாழாது நாட்டிற்காக வாழ்ந்தவர்கள். இந்த மாமடல் இலங்கையில் வாழ்கின்ற பெரியோர்களில் ஒருவர் வாழையடி வாழையாக வந்தவர் நமதன்பிற்குரிய திரு. நா. முத்தையா அவர்கள். ஸ்ரீ காஞ்சி சுவாமிகளின் பூரண ஆசி பெற்றவர். அவர் தொடர்பு கொள்ளாத மகான்களே இருக்க முடியாது. தாம் விடுகின்ற ஒவ்வொரு மூச்சும், சமய வாழ்விற்கும், பக்தியும் பண்பும் ஒழுக்கமும் கொண்டு மக்கள் அறவாழ்வு வாழ வேண்டுமென்று அல்லும் பகலும் அனவரதமும் தூய பிரம்மச்சரிய விரதம் பூண்டும், நாடு முழுவதும் பிரயாணம் செய்து சமயத் தொண்டாற்றி வரும் ஒப்பற்ற தொண்டர் திரு. நா. முத்தையா அவர்களைப் பற்றி இச்சிறு கட்டுரையில் எப்படி முழுமையாக எழுத வல்லேன். ஆத்மஜோதி என்ற அருமையான தெய்வீகம் ததும்பும் மாதப் பத்திரிகையை எத்தனையோ இடர்ப்பாடுகளிருப்பினும், தொடர்ந்து வெளியிட்டு வருவது மிகவும் போற்றுதற்குரியது. இக்காலத்து மாத சஞ்சிகைகளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தால் இருக்கின்ற தூய மனமும் கறை படும்படி வருகையில், புனிதமான திருக்கோயில்களின் மூலஸ்தானத்திலுள்ள மூர்த்தி போல் பரிசுத்தமான கருத்துக்களை சுமந்து வரும் ஆத்மஜோதி வளம்பெற்று வளர்க என வாழ்த்துகின்றோம்.

முருகப் பெருமானுக்கு வீரபாகு தேவர் போல் ஸ்ரீ ராமருக்கு லக்ஷ்மணப் பெருமான் வாழ்ந்தது போல் அன்பர் திரு. நா. அருமைநாயகம் வாய்த்து அண்ணனின் அடிச்சுவட்டில் தொண்டாற்றி வரும் அருமை நண்பர் திரு. அருமைநாயகம் அவர்கள் அன்பும் பண்பும் மிக மிக மிகப் போற்றுதற்குரியது. இவ்விருவர் தொண்டு செய்வது மட்டுமின்றி எம்போன்றோரையும் ஈழத்திற்கு அழைத்து பெருமைபடச் செய்து உள்ளங் குளிர உதவிகள் பல புரிந்து தொண்டாற்றி வரும் அவர்கள் பாசத்தை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் நெஞ்சம் நெகிழ்கின்றது.

முருகனை நினைப்பவர்கள் பெறும்பயன் "ஆயிரம் பிறை தொழுவர், அமுதாசனம் பெறுவர், அன்னவாகன மேறப் பெறுவர்" என்றெல்லாம் அருணகிரிப் பெருந்தகை "மயில்விருத்தத்தில் வாழ்த்துவதைக் காணலாம். ஆயிரம் பௌர்ணமி என்பது 83 ஆண்டுகளைக் குறிக்கும்.

கதிர்காமம் திருக்கோயிலின் மேற்பாகத்திலுள்ள பெரும் ஆலமரம் போன்று தழைத்தும், மாணிக்க கங்கை மணலினும் பெருகி திரு நா. முத்தையா அவர்களும், அவரது இளவலும், அவரது குடும்பத்தினர்களும் வாழ்வாங்கு வாழ்ந்து, மணிவிழா நிகழ்ந்து, ஆயிரம் பிறைகள் தொழுது பவளவிழா, முத்துவிழாக்கள் பல நிகழ்ந்து நீடூழி வாழ்ந்துவர, அவரது தொண்டுகள் சிறக்க ஞானபண்டிதனது அருணசரணாரவிந்தங்களில் இதய பூர்வமாகப் பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்மவீரன் ஆத்மஜோதி ஆசான்

# நா. முத்தையா

தி. மாணிக்கவாசகர்
கல்விப்பணிப்பாளர்-வடமாநிலம்

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தம்தம்
கருமமே கட்டளைக் கல்"

பிறப்பு, சேவை, அறிவு என்பனவற்றால் மக்கள் எய்தும் பெருமைக்கு உரை கல்லாவது அவர்கள் செய்யும் கருமமே. ஆத்மஜோதி முத்தையா அவர்கள் இதற்கு விதிவிலக்காக முடியாது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏழாலை என்னும் கிராமத்தைச் சேர்ந்த இவருக்கு மலைநாட்டில் சஷ்டியப்த விழா நடைபெறுகிறது என்றால் அவர் பிரதேச, ஜாதி வேறுபாடற்ற முழுமையான சமயத் தொண்டனாகவும், சமுதாயத் தொண்டனாகவும் இருப்பதுவும், புனிதமான ஆசிரிய சேவையை வழங்கியதுமான கருமமே காரண மென்று நான் சொல்வேன்.

அவர் கருமத்தில் வெற்றிபெற அவருடைய ஊக்கமே காரணமாக இருந்தது.

"உடையார் எனப்படுவது ஊக்கம் அஃது இல்லார்
உடையது உடையரோ மற்று"

"வெள்ளத்து அனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு"

என்ற வள்ளுவன் குறளுக்கேற்ப அவருடைய ஊக்கமே இன்று இவர் சமய மேதையாகவும் சமுதாயத் தொண்டனாகவும் விளங்குகிறார் என்றால் மிகையாகாது. யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் மலைநாட்டில் மட்டுமல்லாது இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் சைவ மக்கள் யாபேரும் "ஆத்மஜோதி முத்தையா"வை அறிந்துள்ளார்கள் என்றால் அன்னாரின் சேவையின் பெறுமதி அளப்பரியதொன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனையும், இலாபத்தையும், வெறும் புகழையும் எதிர்பார்த்து சேவைகளைச் செய்து வரும் மனிதர்களுக்கு எதிர்மாறான முறையிலே கைம்மாறு கருதாமல் சேவை செய்கிறவர் ஆத்மஜோதி முத்தையா அவர்கள். இவர் நாவலப்பிட்டியில் ஆசிரியத் தொழிலை மேற்கொண்ட காலத்தில் உள்ள தாழ்ந்த நிலையில் இருந்த சைவ சமய வழிபாட்டிற்கும் இன்று இருக்கும் உயர்ந்த வழிபாட்டிற்கும் பெரிய இடைவெளியுண்டு. இவ் இடைவெளியை நிறைவு படுத்திய கர்மவீரராக இருந்தவர் இவரேயாகும். சைவ சமயக் கோட்பாடுகளில் ஈடுபாடு கொண்டு சிறந்த சமயத் தொண்டாற்றிச் சேவைசெய்து வருகிறார். தொண்டர் தம் பெருமை சொல்லலும் பெரிதே எனினும் இவர், தொண்டைச் சிறப்பாக நடத்தி முடிக்கக் காரணமாக இருந்த சூழ்நிலை, கருவிகள் ஆகியவற்றைச் சற்று நோக்குவோம்.

கண்டி மாவட்டத்தில் சைவ உணர்ச்சி மிக்க மக்கள் வாழ்ந்த நாவலப்பிட்டியில் அவர் கடமையாற்றச் சென்றது அவருக்குச் சாதகமான இடமாக இருந்தது. சைவ சமய கோட்பாடுகளை முறையாகக் கற்றுப் போதிக்கத் தெரிந்த இவருக்கு பாடசாலைகளிலும் தனது சமயத் தொண்டை ஆற்றக் கூடிய முறையில் உதவியது புனிதமான ஆசிரியத் தொழில்.

"செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து"

என்றுங்கு மதம், வெகுளி, காமம் ஆகிய குறையில்லாது சிறந்த குணமுடையவராக அவர் இருந்ததுடன் தனது சமய சமுதாயத் தொண்டுக்காகவே முற்றும் முழுவதற்கும் அர்ப்பணிப்பதற்காக பிரமச்சாரிய வாழ்க்கையை மேற்கொண்டு இருந்தது.

நாவலப்பிட்டியில் இவரால் அமைந்த சைவசமய ஆச்சிரமத்தின் தொண்டு, சைவ சமய கோட்பாடுகளுடன் மிகவும் சிறப்பாக கொண்ட "ஆத்மஜோதி" சஞ்சிகையை வெளியிட உதவிய ஆத்மஜோதி நிலையம் என்பவற்றைச் சிறப்பாகக் கூறலாம். அடுத்து இவருடைய சமய சேவையால் ஏற்பட்ட பலன்களை சற்று நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சமயத் தொண்டஞக இருந்து கொண்டு பல சமயத் தொண்டர்களை உருவாக்கியுள்ளார். சைவசமய அபிமானிகள் அத்துறையில் முன்னேறிச் செல்வதற்கு வழிகாட்டி நிற்கும் ஓர் ஒப்பற்ற மாமணியாக விளங்குகிருர். இவர் நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் பஜனையையும், சொற்பொழிவுகளையும் தவருது நடாத்துபவர். இதஞல் நாவலப்பிட்டியில் உள்ள பல சைவசமயத்தைச் சேர்ந்தவர்கள் சைவசமயக் கோட்பாடுகளுக்கேற்ப சமயத்தைக் கடைப்பிடித்து வாழ்க்கையில் மேற்கொள்ள இவர் சொற்பொழிவுகள் உதவியாக இருந்தன.

இவர் நாவலப்பிட்டியில் மாத்திரமல்லாது இலங்கையில் பல இடங்களிலும் நடைபெறும் சமயக் கருத்தரங்குகளில் பங்குபற்றி சமய எழுச்சியை ஏற்படுத்திய ஒருவர். உள் நாட்டில் மட்டுமன்றி வெளி நாடுகளிலும் சமயக் கருத்தரங்குகளில் பங்குபற்றி சமய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருகிருர். இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு இவர் சென்று சமயச் சொற்பொழிவினை நிகழ்த்தி வெளிநாட்டு சைவசமய மக்களையும் கவர்ந்துள்ளார்.

இவர் நடாத்துகின்ற மாதாந்த சஞ்சிகையான ''ஆத்மஜோதி'' பத்திரிகை மிகவும் பிரயோசனமான சைவசமய வெளியீடாகும். ஏனெனில் இக்காலத்தில் சைவசமயக் கோட்பாடுகள் நுணுக்கம், தத்துவம் தெரிந்தவர்கள் மிகக்குறைவு. இதஞல கோட்பாடு தத்துவங்களை அறிய இலங்கை வாழ் சைவசமயிகளுக்கு இப்பத்திரிகை மிகவும் உதவியாக உள்ளது எனலாம். இலங்கையில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் இச்சஞ்சிகை, சைவ சமயிகளாலும் விருப்பிப் போற்றப்படுவதுடன் அந்நாடுகளில் சைவசமயப் பிரச்சாரத்திற்கும் ஒரு சிறந்த சாதனமாக விளங்கி வருகிறது.

இவருடைய சமயத் தொண்டு மூலம் அவர் இலட்சியத்தை வென்றுவிட்டார் என்றே கூறவேண்டும். அவர் பயனை எதிர்பார்க்காவிட்டாலும் அவருக்குப் பயன் சார்ந்தே தீரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப்படும்."

ஆத்மஜோதி முத்தையா அவர்கள் வெறும் சமயத் தொண்டனாக மட்டுமல்லாது சமுதாயத் தொண்டனாக வும் விளங்குகிறார். மலைநாட்டில் பெரும்பாலும் வசதி குறைந்தவர்களே வாழ்கின்றார்கள். இவர் மலைநாட்டுடன் மட்டும் நின்று விடவில்லை.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே"

என்று கூறிய மூன்னுரையுடன் "ஏழாலை" என்னும் நூலை எழுதித்தான் பிறந்த ஏழாலை ஊருக்கு அர்ப்பணித் துள்ளார். அந்நூலிலே ஏழாலை ஊரில் வாழ்ந்த புலவர்கள், பெரியவர்கள், கோவில்கள், ஆதீனமடம், மகாவித்தி யாலயங்கள், ஏழாலையில் பெயர்போன "சயந்தன்" நாடகம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு பழைய வரலாற் றையே தொகுத்து அவ்வூரின் சிறப்பைக் கூறி தான் பிறந்த ஊரின் பெருமையை இலங்கை முழுவதற்கும் பரப்பிய பணியைச் செய்துள்ளார்.

என்றும் புனிதமான உடையும், தூய்மையான மன மும், சிறந்த தோற்றமும், பேசுவதற்கு இனியவருமான ஆத்மஜோதி முத்தையா அவர்களுடைய சஷ்டியப்த பூர்த்தி விழா நிறைவு பெற்று அவர் சமய, சமுதாய சேவைகள் தொடரவேண்டும். உலகம் போற்றி நிற்கும் அன்னாரிலே சைவம் தழைக்க வேண்டும். எங்கும் சைவ நீதி வளர வேண்டும்.

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பா ராட்டும் உலகு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம் ஒருவனையும் விட்டதில்லை

*தமிழ் வடிவம்:—* ம சி சிதம்பரப்பிள்ளை

**புத்த**பெருமான் உலகில் உள்ள உயர்ந்த குரு. தர்மத்தை உறுதுணையாகக் கொண்டு உலகத்திலிருந்து விடுதலை பெறும் மார்க்கத்தை கிராமத்துக்குக் கிராமம் கால்நடையாகச் சென்று (தர்மத்தைப்) பரப்பி வந்தார். இவ்வாறு ஒரு கிராமத்துக்குச் சென்றடைந்தார். ஒரே ஒருமகனைப் பெற்று அதனையும் தவற விட்டு வருந்திநிற்கும் ஒரு அப்பாவித் தாயைப்பார்க்க நேர்ந்தது. இறந்துபோன தனது செல்வக் குழந்தையை எவ்வாறு மீளவும் உயிர்ப்பிக்கலாம் என்று பித்துப்பிடித்தவளாக வீடு வீடாகச் சென்று விசாரிக்கலானுள். இறந்த மகனை உயிர்பெறச் செய்வ தென்பது கனவிலும் இயலாத செயல் எனக்கூறினர். அத்தா யினுல் அதனை நம்பமுடியவில்லை. புத்தபெருமான் அக்கிரா மத்துக்கு வந்துள்ளார் என்றும், அவரிடம் சென்று உள்ள குறையை முறையிடவும் எனப் புத்திமதி கூறினுர் கிராமத்தவர் ஒருவர்.

தாயானவள் பகவானிடம் (புத்தபெருமானிடம்) சென்று தனது குறையை எடுத்துக்கூறி தனது ஆசை மகனை எவ்வாறு யினும் மீண்டும் உயிர்பெறச் செய்து தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்று இரந்து நின்றுள். உடனே அப்பெண்ணை நோக்கி, ''ஒருபோதும் மரணம் சம்பவிக்காத வீடொன்றி லிருந்து கைநிறைந்த 'எள்ளு' பெற்றுக்கொண்டு வரவேண் டும். அவ்வாறு கொண்டு வந்தால் இறந்த சிசுவை எழுப்பித் தரலாம்'' என்று பெருமானுர் புகன்றுர்

புத்திர சோகத்திஞல் துயருறும் தாயானவள் பெருமா னுடைய இந்தச் செய்தியைக் கேட்டு, இணக்கம் தெரிவித்து வீடுவீடாகச் சென்று, "உங்கள் வீட்டில் எவராவது இறந்துள் ளனரா? எனக்கு கைநிரம்பிய எள்ளு வேண்டும். இறந்தவர் கள் இல்லத்திலிருந்து பெறும் எள்ளினுல் எனக்கு ஒரு பிர யோசனமுமில்லை" என்று கூறிக் கையேந்தி நின்றுள். அதற்கு அவ்வீட்டார், ''இந்த வீட்டில் இருப்பவர்களிலும் இறந்தவர்கள் அநேகம்" என்றனர். இவ்வாறு ஒவ்வொரு வீட்டிலும் கூறி னர். எனவே புத்தபெருமான் கூறியபிரகாரம் கைநிரம்பிய எள்ளைப் பெறமுடியவில்லை. இதுகாரணமாக, உண்மை ஞானம் அவளது நெஞ்சில்—ஈரநெஞ்சில்—உதயமானது.

"பிறந்தவர் ஒருநாள் மடிவர்"என்ற உண்மையை உணர்ந் தாள். புத்தபெருமானது புனிதத் திருவடிகளை வணங்கித் தனக்குத் தர்மத்தை—நிர்வாண — தர்மத்தைப் போதித்தருளு மாறு இரந்துநின்றுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியற்சீரும் மேல்கதிப்பேறும்

வித்துவான் மு. கந்தையா

ஏழாலை

நோய் பிணி வறுமைகளின் கெடுபிடிகளுக்கு அகப்பட்டுவிடாமல் ஆயுட்காலம் முழுவதும் செம்மையாக வாழவேண்டும் என்ற நிலை சர்வசாமானியமானது. ஆனால், ஆயுட்கால எல்லைக்கு அப்பால் — — —? என்ற சிந்தனை எழும் பொழுதுதான் பிரச்சினை கால் கொள்கின்றது.

ஆன்மா என்பது சதா வாழவேண்டுவதொன்று: (Soul is a living principle) இம்மையிற் போல மறுமையிலும் அதற்கு வாழ்வுண்டு; இவையிரண்டிலும் பார்க்க மகோன்னதமான வாழ்வு அம்மையிலுமுண்டு. இம்மை மறுமை வாழ்வுகள் வினைவழி நிகழ்வன: மும்மல மயக்கொடு கூடின. பிரபஞ்சமே தஞ்சமாகக் கொண்டிருப்பனவு அம்மை வாழ்வு வினைச்சார்பற்றது; மலமயக்கற்றது; பரம்பொருளே தஞ்சமாகக் கொண்டது.

இம்மை மறுமை வாழ்வுகள் யதார்த்த நோக்கில் ஒரு பொய். அம்மை வாழ்வே மெய். முன்னையது பொய்ம்மை; பின்னையது செம்மை. ஆன்மாவின் அந்தரங்கமான சூழ்நிலைகள் எப்போதும் பொய்ம்மையையே பெருக்க முனைந்து கொண்டிருப்பன. இந்தநிலை ஆன்மாவின் செம்மைப் பேற்றுக்குச் சென்மப் பகை யென்னும்படியாக உள்ளது. ஏதானுமொரு ஆன்மாவின் விஷயத்தில் இந்த நிலையில் ஒரு திருப்பம் ஏற்படும் பட்சத்தில் அது அதற்கொரு மகத்தான பேறு எனப்படும். அப்பேற்று நிலையில், சம்பந்தப்பட்ட அந்த ஆன்மாவின் மகிழ்ச்சி நிலைப்பரிமளிப்பை அளந்து கொட்டிக் கொண்டிருக்கின்றது மணிவாசகரின் திருவாசகமொன்று.

''பொய்ம்மையே பெருக்கிப்
பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய
சிவபத மளித்த
செல்வமே சிவபெருமானே''

பொய்ம்மை நாட்டத்தின் பொருந்தாமையினையுஞ் செம்மை நாட்டத்தின் சீர்மையினையும் மனங்கொள்ள இத்திருவாசகமொன்றே போதுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்துமென்!

ஆன்மாவைப் பந்தித்துள்ள ஆணவம் என்பது ஒரு மகா நாசகாரி. செம்மை நோக்கித் திரும்பும் உயிரையுங்கூட மறுபடி வலிந்திழுத்துப் பொய்மையிலே பொருத்தி விடும் வல்லமை அதற்குண்டு. அதற்குரிய இரண்டு சத்திகளிலே ஒன்று அதோகியாமிகா சக்தி என்று ஆகமங்களிலே பெயர்பெற்றுள்ளது. அதோகியாமிகா என்றால் கீழ்நிலையில் தள்ளிக்கொண்டிருப்பது என்று பொருள்.

இம்மை மறுமை வாழ்வுகள் சம்பந்தமான இன்பசுக போகங்களிலே பற்றுக் கொள்ளாமல் விலகி, மூர்த்தி, தலம், தீர்த்தம், தியானம்,சாதனை என்ற வழிகளில் முயல்வோர்களுக்கும் அவை காரணமாக லபிக்கக் கூடிய உலகப் பிரசித்தி, கீர்த்தி, பிரபாவம்போல்பவை ஒருகால்தளிர்க்கும். அச்சந்தர்ப்பத்தைப் பற்றிக்கொண்டு, அவைஏதுவாக அவர்களை மீளவும் இம்மை மறுமைப் பற்றுநிலைக்குத் தள்ளிவிடும் ஆபத்தான போக்கு அந்தஆணவ சக்திக்கு உண்டு. பரவல் வழக்கில் அடிபடும் பல்லோர் வரலாறுகள் இதற்கு உதாரணமாகலாம்.

'மன்றவ ரடியார்க் கென்றும்
வழிப்பகை களிறே யன்றோ'

பெரிய புராணம்—எறிபத்தநாயனர் புராணம். களிறு யானை. அது இங்கே உருவகவாய்பாட்டால் ஆணவத்தைக் குறிக்கும். சிவதொண்டு நெறியிற் செல்வார்க்கும் ஆணவசக்தி இடைநின்று தடைசெய்யும் என்பது இதன் குறிப்புப்பொருளாகும்.

செம்மை நிலையை எய்தும் பேறு ஒவ்வொருவர்க்கும் உளது. அதை எய்த விடாமல் நீளநெடுக முட்டுக்கட்டையிடும் ஆணவத்தின் செயலுமுளது. இந்த ஆணவக் கொடுமையை விலக்கித் திருத்தஞ் செய்வதற்கென்றே நமக்கு வாழ்க்கையுமமைந்துள்ளது. எனவே இம்மை வாழ்விற் புகுந்திருக்கும் நம்மனோர் நிலை மாபெரும் பொறுப்பு வாய்ந்ததாகும். இந்த நிலையைத் திருத்திக் கொண்டால் அல்லது வாழ்க்கை பலன்பட்ட வாழ்க்கை யாகாது. இதிலேதான் கிடக்கிறது நம் விமோசனம். ஆதலின், நம்து வாழ்வியற் சீர் எப்படி அமைய வேண்டும் என்பதை இந்தக் கருத்துக் கண்ணோட்டத்தில் வைத்தே நிதார்த்தம் பண்ணிக்கொள்வோம்.

ஆணவ சக்தியின் பிரதிபலிப்புக்களாக ஆன்மாவிடத்திலே வீறிட்டுக் கொண்டிருப்பன இரு வேறு தன்மைகள். ஒன்று 'நான்' என்றெழும் அகங்காரம். மற்றையது, 'எனது' என்றிருக்கும் மமகாரம். இவற்றை ஒழித்துக்கட்டும் விஷயம் சும்மா கிள்ளுக்கீரை விளையாட்டாகாது. வாழ்க்கையில் துறை தோறும் துறை தோறும் பழகிப் பயின்று பண்பாட்டு ரீதியில் வந்தேற வேண்டியது அது.

'நான்' என்று ஒரு முதல் இங்கிருப்பதற்கில்லை. இந்த 'நான்' உணர்வைச் சவுக்கிட்டுச் சாய்த்துக் கொண்டிருக்கும் 'தான்' என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ப்பொருள் ஒன்று அந்த 'நான்' உணர்வுக்கிடமான ஆத்மாவினுள் உள்ளது. ''எத்தவத்தைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் எக்கோலங் கொண்டாலும் எப்பணியைப் புரிந்தாலும்'' நான் உணர்வுக்குக் கிஞ்சித்தும் அவகாசமளிக்காமல் 'தான்' உணர்வுக்கே முற்றாக தலைசாய்த்து நிற்கவேண்டும் என்ற விளக்கத்தின் பரிமளிப்பு வாழ்வியல் முழுவதிலும் கமழ்ந்து கொண்டிருக்க வேண்டும். தன் காரியம், பிறர் காரியம்; தன் தேவை, பிறர் தேவை; குடும்ப விஷயம், அயல் விஷயம் என்றவாறு தர வேறுபாடோ தகுதி வேறுபாடோ கருதாமல் எங்கும் எந்நிலையிலும் 'தான்' என்ற அம்மெய்ப் பொருளுக்கே தலைமை தந்து செயற்படும் நிலை எந்த எந்த அளவிற் கைக்கூடுமோ அந்த அந்த அளவில் 'நான்' உணர்வு செவி மடியும். அதே ரீதியில் 'எனது' என்ற உணர்வுங் கூடவே மடியும்.

'நான்' என்கிற ஆன்மா, 'தான்' எனப்படுகின்ற இறைவனைத் தன்னை மெய்யன்பினால் பாவிக்கும் தியானமும், அத்தியானத்தில் உறைத்து நின்று புரியும் பூசையும் இதற்கேற்ற சாதனைகளாகும். சாதனையில்லாமற் சாத்தியமில்லை. இத்தகைய தியான பூசனைகளில்லாமல் 'நான்' உணர்வோ 'எனது' என்ற உணர்வோ இன்றிச் செயல் புரியும் நிலை வாழ்க்கையில் லயங்கொள்ள மாட்டாது. இவ்வுண்மையைக் கடைப்பிடித்தொழுகுவோர் எவராயினும் இம்மை மறுமைகளை நாடாத அம்மை நெறியாகிய செம்மை நெறியை நோக்கி நிற்பவர்கள் என்பது வெளிப்படை.

அவர்கள் பாக்கியவான்கள்; பாவன புருஷர்கள்: அவர்கள் எப்படியும் மேல்கதிப் பேற்றுக்கே உரியவர்கள். செம்மை நெறியென்ற நீளாதி நீள ஏணிப்படிகளில் மேனோக்கி மேனோக்கி மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருப்பவர்கள் அவர்கள்.

எங்கள் ஆத்மஜோதி முத்தையா அவர்களுக்கும் இளவயசு முதற் கொண்டே அத்தகையோர் சார்பும் அநுசரணைகளும் நிரம்ப உள. அவர்தம் வாழ்வியற் சீரிலும் செயல் முறைப்பண்புகளிலும் அவை அழியாச் சுவடுகளாகத் தழும்பேறியுள்ளன. அத்துறை முன்னேற்றத்தில் தற்போது அவர்க்கு நிகழும் சஷ்டியப்த பூர்த்தி ஒரு மைல் கல் எனப்படலாம். இதனை ஒரு அரிய சந்தர்ப்பமாகக் கொண்டு அந்நெறிச் சார்புடையார் அனைவர் சார்பிலும் அவரை வாழ்த்துதல் நம் தலைக்கடனாகும்.

இஷ்டசித்தி வேட்கையின்றி
எப்பணிக்கும் முன்னியல்வார்.

சஷ்டியப்த பூர்த்திபெறும்
முத்தையனார் வாழியவே! என வாழ்த்துவோம்.

"நானென்றொருமுத லுண்டென்ற
நான்தலைநாண என்னுள்
தானென் றொருமுதல் ஆனந்தமாகத்
தலைப்பட் டொப்பில்
ஆனந்தந் தந்தென் அறிவையெல்
லாமுண்டு அவசநல்கி
மோனந் தனைவினைத் தாலினி
யாது மொழிகு வதே''

—தாயுமானவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாக்ஞவல்க்யர்

— சென்னை–பல்கலைக் கழகப் பேராசிரியர் —

டாக்டர் டி. எம். பி. மகாதேவன்

ப்ருஹதாரண்யகம் என்ற உபநிஷத்தில் மிகப் பெரிய ஞானியாய் விளங்குபவர் யாக்ஞவல்க்யர். அவர் எவ்வாறு பெரிய ஞானி என்று உலகிற்கு அறிவிக்கப்பட்டார் என்பது ஒரு சுவையான கதை.

விதேஹ நாட்டு மன்னர் ஜனகர் ஒரு பண்டித சபையைக் கூட்டினார். ஆயிரம் பசுக்களைக் கொண்டு வந்து நிறுத்தினார். ஒவ்வொன்றின் கொம்புகளிலும் பத்து பொன் கட்டிகள் கட்டப்பெற்றிருந்தன. பண்டிதர்களை விளித்து அரசர் இவ்வாறு கூறினார்:

''உங்களுள் எவர் ப்ரஹ்ம நிஷ்டரோ அவர் இந்த பசுக்களையும் பொன்னையும் எடுத்துச் செல்லலாம்'' என்று. சிறிது நேரம் சபையில் நிசப்தம் நிலவியது. கடைசியில் ஒரு பண்டிதர் எழுந்து நின்றார். அவர்தான் யாக்ஞவல்க்யர். அருகிலிருந்த தமது சிஷ்யனிடம் அந்த ஆயிரம் பசுக்களை ஓட்டிக்கொண்டு போகும்படி சொன்னார்.

ஏனைய பண்டிதர்கள் கோபம் கொண்டனர். அவர்களுள் ஒருவர் யாக்ஞவல்க்யரைக் கேட்டார், ''இங்கு குழுமியுள்ள வித்துவான்களுள் நீர்தான் ப்ரஹ்மநிஷ்டரா?'' என்று. யாக்ஞவல்க்யர் நகைச்சுவை ததும்ப பதிலளித்தார். ''உங்களுள் எவர் ப்ரஹ்மநிஷ்டரோ அவருக்கு நமஸ்காரம் செய்கின்றோம். நாம் விரும்புவது பசுக்கள்'' என்று.

சபையிலிருந்த பலர் அவரிடம் கேள்விகள் கேட்டார்கள், அவருக்கு என்ன தெரியும் என்பதை நிரூபிப்பதற்காக கர்மகாண்டத்தில் காணப்படும் வேள்விகளைப்பற்றியும், கர்மம், மறுபிறப்பு, உபாஸனை முறை முதலிய விஷயங்கள் பற்றியும் பல வித்வான்கள் கேட்டார்கள். எல்லா கேள்விகளுக்கும் பொருத்தமான விடைகள் அளித்தார் யாக்ஞவல்க்யர்.

உஷஸ்தர் என்பவர் பரப்ரஹ்மத்தைக் குறித்து வினவினார். ''எந்த ப்ரஹ்மம் ப்ரத்யக்ஷமாகவும் நேராகவும் உள்ளதோ, எது எல்லாவற்றிற்கு உள்ளும் இருக்கிறதோ, அதைப்பற்றி விளக்கம் தாருங்கள்'' என்று. ''இது உன்னுடைய ஆத்மா; எல்லா வஸ்துக்கள் உள்ளும் உளது'' என்று பதில் உரைத்தார் யாக்ஞவல்க்யர். மேலும் விளக்கிச் சொல்ல வேண்டும் என்று கேட்கப்பட்ட போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் இவ்வாறு உபதேசித்தார்: "எது ப்ராணன்களுக்கு ஆதாரமோ அது உன் ஆத்மா, எல்லா பொருள்களுக்கும் உள்ளே இருப்பது. பார்வையைப் பார்ப்பது அது; அதைப் பார்க்க முடியாது. செவிகேட்பதை கேட்பது அது, அதைக் கேட்க முடியாது; மனதை எண்ணுவது அது, அதை எண்ண முடியாது; அறிவை அறிவது அது, அதை அறிய முடியாது. இந்த உன் ஆத்மா ஸர்வாந்தரமாயுள்ளது, மற்றதெல்லாம் அழிந்து போவது".

பண்டித சபையில் அமர்ந்திருந்த ஒரு ஸ்த்ரீ எழுந்து யாக்ஞவல்க்யரை விளித்து ஒரு கேள்வியைக் கேட்டார். கார்கி என்பது அவள் பெயர். நாம் காண்பதெல்லாம் ஜலத்தால் வியாபிக்கப்பட்டிருக்கிறது. ஜலம் எதனுல் வியாபிக்கப்பட்டுள்ளது?

"ஆகாசத்தால்" இவ்வாறு படிப்படியாக ஸ்தூலத்திலிருந்து ஸூக்ஷ்மத்திற்கு செல்லும்படி உபதேசித்தார். "ஸ்தூலப்ரபஞ்சத்தின் ஆத்மாவாகிய விராட் எதை ஆதாரமாகவுடையது?"

ஸூக்ஷ்ம ப்ரபஞ்சத்தின் ஆத்மாவாகிய ஹிரண்யகர்ப்பனை"
"அதற்கு எது ஆதாரம்?"

இந்தக்கட்டத்தில் யாக்ஞவல்க்யர் கார்கியிடம் சொன்னார். "வரம்புமீறி கேள்விகள் கேட்காதே! உன் தலை விழுந்துவிடும்" என்று.

கொஞ்ச நேரம் கார்கி வாளாவிருந்தாள். மற்றவர்கள் கேள்விகள் கேட்டார்கள். பிறகு மறுபடியும் கார்கி எழுந்து நின்று சபையோரைப் பார்த்துச் சொன்னாள்: "நான் யாக்ஞவல்க்யரை இரண்டு கேள்விகள் கேட்கப் போகிறேன், அவற்றிற்கு அவர் சரியான விடையளித்தால் நீங்கள் எவரும் ப்ரஹ்மவித்தையில் வெல்ல முடியாது" என்று. சபையில் இருந்த வித்வான்கள் "கேள்" என்றார்கள். யாக்ஞவல்கியரைப் பார்த்து கார்கி பேசினாள்: "காசியிலுள்ள ஒரு வீரனே, அல்லது விதேஹ அரசரின் வில்லாளியோ எப்படி இரண்டு அம்புகள் தொடுத்து எய்தால் எதிரி அழிந்து போவானே, அதே போல நான் உமக்கு இரு கேள்விகளை விடுக்கப் போகிறேன்." "அவற்றை எய்வாயாக!" என்றார் யாக்ஞவல்க்யர். "வானுக்கு மேலும் உள்ளதோ, பூமிக்குக் கீழும் எது உள்ளதோ, எதுவாயும், பூமியாகவும், இவ்விரண்டிற்கு இடையேயும் உள்ளதோ, அது எதை ஆதாரப்பட்டுள்ளது?" "ஆகாசத்தை" என்று பதிலளித்தார்: இரண்டாவது கேள்வி: எது எங்கும் வியாபித்துள்ளதோ, எல்லாக் காலங்களிலும் இருக்கிறதோ, அதற்கு ஆதாரம் எது?

அது "அக்ஷரம், அழியாத பரம்பொருள்" என்றார். "விலக்கல் வாயிலாக அதைக் குறிப்பிடவேண்டும். அது ஸ்வயம்ப்ரகாசமானது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைத் தவிர வேறொன்றும் உண்மையில் இல்லை'' இந்த உபதேசத்தைக் கேட்டு அகமகிழ்ந்து, கார்கி சபையில் இருந்த வித்வான்களுக்கு உரைத்தாள்: யாக்ஞவல்க்யரை ப்ரஹ்மோபதேசம் செய்வதில் எவரும் மீற முடியாது. அவரை நாம் எல்லோரும் வணங்குவோம்.''

யாக்ஞவல்க்யர் ஒருநாள் ஜனகமஹாராஜாவின் அரண்மனைக்குச் சென்றார், ''இன்றைக்கு நான் ஒன்றும்பேசப்போவதில்லை''என்றதீர்மானத்தோடு. முன்னொரு சமயம் அரசருக்கு ஒரு வரம் கொடுத்திருந்தார் மகர்ஷி. அதைப் பயன்படுத்திக்கொண்டு அரசர் ஒரு கேள்வி கேட்டார். ''மனிதனுக்கு எது விளக்காகப் பிரகாசிக்கிறது'' என்பது அந்தக் கேள்வி.

''சூர்யன் ஜோதியான வெளிச்சம், அரசே!'' என்றார் யாக்ஞவல்க்யர்.

''சூர்யன் அஸ்தமித்தபிறகு மனிதனுக்கு ஜோதி எது?''

''சந்திரன்'' என்றார்.

''சந்திரனும் மறைந்தபிறகு எது ஜோதி?''

''அக்னி'' என்பது பதில்

''அக்கினியும் அணைந்த பிறகு?''

''வாக்கு ஜோதியாய் உள்ளது'' என்றார் மகர்ஷி. ''காடமான இருட்டில் தனது கைகூட தெரியாமல் இருக்கும் போது சப்தத்தின் உதவியால் ஒருவன் செல்லவேண்டிய இடத்திற்கு ஒருவன் செல்கிறான்.'' ''வாக்கும் நின்றுவிட்டபோது எது ஜோதி?''

''ஆத்மாதான் ஒருவனுக்கு ஜோதி; அது ஸ்வயம் ஜோதி'' என்று கடைசியாக உபதேசித்தார்.

ஆத்மா என்பது விக்ஞானமயமாய், ப்ராணன்களை இயக்குவதாயும், ஹ்ருதயமத்தியில் ப்ரகாசமுள்ளதாயும் இருக்கிறது. ஸ்வப்னுவஸ்தையில் வேறு எந்த வெளிச்சங்களுமில்லை. மனோவாஸனைகளால் கல்பிக்கப்பட்ட கனவு உலகத்தை ஆத்மா தான் ப்ரகாசிக்கச் செய்கிறது. அதைப் பிரகாசப்படுத்துவது வேறொன்றும் இல்லை.

நித்ரா அல்லது ஸுஷுப்தி அவஸ்தையில் வெளி உலகமும் இல்லை, உள் உலகமும் இல்லை. ஆனால் ஆத்மா ப்ரகாசிக்கிறது. விஷயங்களின் இன்மைக்கும் அது ஸாக்ஷியாய் உள்ளது. ஒருபற்றும் இல்லாமல், ஒன்றோடும் ஒட்டிக் கொள்ளாமல் விளங்குவது ஆத்மா;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உபதேசத்தைக்கேட்ட ஜனகர் மிகவும் சந்தோஷமடைந்து ''யாக்ஞவல்க்யரே! உமக்கு ஆயிரம் பசுக்களை அளிக்கின்றேன். மேலும் மோக்ஷ மார்க்கத்தைப்பற்றிக் கூறுவீராக'' என்று.

விழிப்பு, கனவு, தூக்கம் என்ற மூன்று நிலைகளைப்பற்றி விளக்கிவிட்டு, ஆத்மாதான் நந்தாவிளக்காய், மாறாமல், அழியாமல் இருக்கிறது என்று விளக்கினார். ஆசைகளுக்கும், பாவங்களுக்கும் அப்பாற்பட்டது அது, அதைவிட இரண்டாவது பொருள்கிடையாது. ஜலத்தைப்போல நிர்மலமாய், எல்லாவற்றிற்கும்ஸாக்ஷியாய் உள்ளது. இதை உணர்வதால் ஒருவன் வீடு பெறுகிறான். ஆத்மானுபூதி உத்தமமானது: பரம ஆனந்தானுபவம் அந்த அனுபூதி வரும் வரையில் பிறப்பும் இறப்பும் ஜீவனுக்கு வந்துகொண்டேயிருக்கும். ப்ரஹ்மானந்தம் அல்லது ஆத்மானந்தத்தை யடைந்துவிட்டால் மறுபடியும் ஸம்ஸார பந்தத்தில் விழுவது என்பது கிடையாது. இவ்வாறு ஜனகருக்கு உபதேசித்தார் யாக்ஞவல்க்யர்.

இந்த உபதேசத்தை ஆதிசங்கரர் தமது ஏகச்லோகி என்ற ஒருச்லோகத்தில் அமைத்து அருளியுள்ளார்.

இந்தச் சுலோகத்தின் பொருளை இனிய தமிழ் செய்யுள் வடிவில் வடித்துத் தந்துள்ளார் ரமண மஹர்ஷிகள்.

ஒளியுனக்கெது பகல் இனன் எனக்கு
இருள் விளக்கு;
ஒளி உணர் ஒளிஎது, கண்; அது;
உணர் ஒளி எது
ஒளி மதி மதி உணர் ஒளி எது
அது அகம்
ஒளிதனில் ஒளியும் நீ என குரு;
அகம் அதே.

யாக்ஞவல்க்யர் பூர்ணமாக உபதேசித்தார் ஜனகருக்கு. ஆனந்த பரவசராய் மஹாராஜா தம் ராஜ்யத்தையும் தம்மையும் அவருக்கு அர்ப்பணிப்பதாக விக்ஞாபனம் செய்தார்.

கிருஹஸ்தாச்ரமத்தில் இருந்து கொண்டே ப்ரஹ்மஞானியாய் விளங்கினார் யாக்ஞவல்க்யர், உரிய காலத்தில் சந்நியாசாச்ரமம் எடுத்துக் கொள்ள விரும்பினார். அவருக்கு இரண்டு மனைவியர், காத்யாயனீ, மைத்ரேயீ என்பவர்கள். தம்முடைய சொத்தை இருவருக்கும் பங்கிடு செய்துவிட்டு கானகம் செல்ல முற்பட்டார். காத்யாயனீ ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் விவேகியான மைத்ரேயீ கணவரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். இந்த பூமி முழுவதும் எல்லாவித பொருள்களாலும் நிறைந்து அது எனக்கு சொந்தமானால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இறவா நிலையைப் பெறுவேனா? என்று. யாக்ஞவல்க்யர் பதில ளித்தார் "இல்லை" என்று. பணத்தினால் இறவாத் தன்மை மீது ஆசைகூட வைக்க முடியாது.

"அப்படி என்றால் எனக்கு சொத்து எதற்கு? இறவாமையை எய்த வழி எதுவோ அதைச் சொல்லுங்கள்" என்று மைத்ரேயி வேண்டினாள்.

"பிரியமானவளே! நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டு தியானம் செய்வாயாக" என்று ஆரம்பித்து யாக்ஞவல்க்யர் உபதே சிக்கலானார். ஒரு ஸ்திரீக்குக் கணவன் அவனுக்காகப் ப்ரியமாவ தில்லை, ஆத்மாவுக்காகத்தான் பிரியமாகின்றான். கணவனுக்கு மனைவி அவளுக்காக பிரியமாவதில்லை, ஆத்மாவுக்காகத்தான்'. இது எல்லா வற்றிற்கும் பொருந்தும். "எல்லாம் எல்லாவற்றிற்காகவும் பிரியமாய் இருப்பதில்லை, ஆத்மாவுக்காகவே ப்ரியமாய், இருக்கின்றனர்."

ஆத்மா தான் பார்க்கப்படவேண்டும், அதற்காக அது சிரவணம் செய்யப்படவேண்டும், மனனம் செய்யப்படவேண்டும், தியானம் செய்யப்படவேண்டும். ஆத்மாவை உணர்ந்தால் எல்லாம் அறியப் பட்டதாகும். எல்லாவற்றிற்கும் ஆதாரம் அதுவே. இந்த ஆத்மா பெரும் பொருள், முடிவற்றது, எல்லையற்றது, சுத்த ஞானஸ்வரூப மானது.

ஆத்மா எல்லாவற்றையும் அறிவது; அதை இந்திரியங்களாலும் மனதாலும் அறிய முடியாது. அது அறிவு மயமானது. புத்திரனைக் காட்டிலும், பொருளைக் காட்டிலும், எல்லாவற்றைக் காட்டிலும், அது ப்ரியமானது. ஆனந்தமே அதன் ஸ்வரூபம்.

உப்புக்கட்டி ஒன்றை ஜலத்தில் போட்டுவிட்டால் அதை மறுபடி யும் எடுக்க முடியாது. ஜலம் எல்லாம் உப்புகரிக்கும். அது போல ஆத்மாவில் எல்லாம் கலந்து விட்டால், தனியாக வேறொன்றும் இருக்க முடியாது. ஒன்றிப்போன பிறகு தனியாக ஒரு ஞானம் இருக்காது. இந்த இடத்தில் மைத்ரேயி தனக்கு ஒரு சந்தேகம் எழு கின்றது என்று கேட்டாள். "ஞானம் எப்படி அழிந்து போகும்?" யாக்ஞவல்க்யர் விளக்கிப் பேசினார்: "ஞானஸ்வரூபமான ஆத்மா இருக்காது என்று நான் சொல்லவில்லை: மனோவ்யாபாரமான வேறு பட்ட ஞானம் இருக்காது என்றுதான் நான் சொன்னதிற்குப் பொருள்." இதை அறிந்து கொண்டால், இரண்டற்ற ஆத்ம வஸ் துவை அடைந்து விட்டால் அழியாத்தன்மையை நீபெற்றுவிடுவாய்."* இது யாக்ஞவல்க்யர் மைத்ரேயிக்கு அருளிய உபதேசம்.

ஆதி சங்கரரின் முக்ய சிஷ்யர்களுள் ஒருவரான சுரேச்வரர் தமது வார்த்திகத்தில் யாக்ஞவல்க்யர் மைத்ரேயியிடம் அவளுடைய ஆர் வத்தைப் புகழ்ந்து பேசுவதாகச் சொல்கின்றார்: "அமிதப் ப்ரீதியால் உமாதேவி சூலம் தாங்கிய பரமேஸ்வரனின் பாதி சரீரத்தை ஆக்ர மித்துக் கொண்டாள். நீயோவென்றால் முழுமையான ஆத்மாவினால் என்னை, அதாவது ஆத்மாவை, முழுவதும் அடைய விரும்புகின்றாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுந்தொகை போற்றும் பெருந்தகை முருகன்

திரு. ந. ரா. முருகவேள், M.A. M.O.L.,
ஆசிரியர்: 'திருக்கோயில்' சென்னை—34

## முன்னுரை:

தமிழ்நூற் பயிற்சி ஒரளவாயினும் உடையவர்கள் அனைவரும், யாப்பருங்கலக் காரிகை என்னும் இலக்கண நூலைப்பற்றி அறிந்திருப்பர். அகவற்பா வெண்பா கலிப்பா வஞ்சிப்பா என்னும் தமிழ்ச் செய்யுட்களுக்கு உரிய இலக்கணங்களை விளக்குவது, இந் நூல்: 'காரிகை கற்றுக் கவிபாடுதலில் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே' எனவும், 'காடும் செடியும் அன்றோ தமிழ்க் காரிகை கற்றதுவே' எனவும் பிறவாறும் வழங்கும் பழமொழிகள், யாப்பருங்கலக்காரிகை என்னும் செய்யுள் இலக்கண நூலின் சிறப்பினையும், தமிழ் மக்களிடையே அது மிகவும் போற்றி மதித்துப் பயிலப்பெற்று வரும் மாட்சிமையினையும், நன்கினிது உணர்த்தும்.

## குணசாகரர்:

இந்நூலினை இயற்றிய ஆசிரியர், அமிதசாகரர் என்பவராவர். அவர்தம் காலம் கி. பி. 10-ஆம் நூற்றுண்டு; அஃதாவது இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே என்பர். இந்நூலுக்கு உரை எழுதியவர் குணசாகரர் என்பவர். இவர் அமித சாகரரின் மாணவராக, அவர் தம் சமகாலத்தவராக வாழ்ந்திருந்தவர் எனக் கொள்ளுதல் கூடும். இக் குணசாகரர் தாம் வரைந்த யாப்பருங்கலக்காரிகை உரையின் இறுதியில், ஒழிபியல் என்னும் பகுதியின் முடிவில், செய்யுட்களில் வருவதற்குரியன அல்லாத எழுத்துக் குற்றம், சொற்குற்றம், பொருட்குற்றம், யாப்புக் குற்றம், அலங்காரக் குற்றம், ஆனந்தக் குற்றம் என்பன வற்றைப் பற்றி விளக்குகின்றார். விளக்கிவிட்டு அக் குற்றங்கள் ஒன்றும் இல்லாத சிறந்த பாடல் ஒன்றை மேற்கோள் காட்டுகின்றார்.

''தாமரை புரையும் காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித் திகழ்ஒளிக்
குன்றி ஏய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வரும் அழகிய பாடல், எல்லாக் குற்றமும் தீர்ந்த செய்யுட்கு மேற்கோளாகக் குணசாகரரால், எடுத்துக் காட்டப்பெற்றுள்ளது.

முருகன் துதி:

இப் பாடல், குறுந்தொகை என்னும் சங்க நூலின் கடவுள் வாழ்த்துப்பாடல் ஆகப், பாரதம் பாடிய பெருந்தேவனுர் என்னும் பழம் பெரும் புலவராற் பாடப்பெற்றதாகும். இப்பாடல் தமிழ்க் கடவுள் ஆகிய முருகனைப் பற்றிய துதியாக அமைந்திருக்கின்றது. முருகனைப் பற்றிய இத்துதிப் பாடல், சமண சமயத்தைச் சார்ந்தவர் என்று கருதப்படும் முனிவர் ஆகிய குணசாகரரால், யாப்பருங் கலக்காரிகை என்னும் தமது செய்யுள் இலக்கண நூலில், எல்லாக் குற்றமும் தீர்ந்த இனிய செய்யுளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் காட்டப்பெற்றிருப்பது, இப்பாடலின் இணையற்ற மாட்சிமையினை எழிலுற விளக்கும் சான்ருக அமையும். ஆதலின் இச்சிறந்த பாடலின் பொருள் நலத்தினை, ஈண்டு இயன்ற அளவு ஒரு சிறிது காண்போம்.

## பாடலின் பொருள்.

"தாமரை மலரைப் போன்ற அழகிய சிவந்த திருவடிகளையும் பவளத்தை ஒத்த திருமேனியினையும், விளங்குகின்ற ஒளிமிக்க குன்றிமணியைப் போன்ற உடையினையும், கிரவுஞ்சம் என்னும் மலையினது நடுவிடம் பிளக்கும்படி செலுத்திய அழகிய ஒளிமிகுந்த நீண்ட வேல் ஆகிய படையினையும், சேவல் ஆகிய அழகிய கொடியினையும் உடைய முருகப்பெருமான் காப்பாற்றுவதனுல், இவ்வுலகமானது இன்பமயமான நாட்களை எய்தி வருகின்றது. ஆதலின் உயிர்களுக்கு இடையூறு இல்லை" என்பது, இப்பாடலின் திரண்ட பொருள். முருகப் பெருமானின் இத்தகைய திருவுருவத்தினைத் தியானம் செய்க, செய்யின் எல்லா நலமும் எய்தலாம் என்பது இதன் கருத்து.

1. இப்பாடல் நம்மனோர் பலகாலும் எண்ணிச் சுவைத்து மகிழ்தற்கு ஏற்ற வகையில் மிகவும் சுருக்கமாக, எளிய இனிய சொற்களால் இயன்றிருப்பது, வியந்து மகிழ்தற்குரியது. முருகனுக்கும் ஆறு என்னும் எண்ணுக்கும் மிகுந்த தொடர்பு உண்டு. முருகனின் சிறந்த தலங்கள் ஆறு; முகங்கள் ஆறு; மந்திர எழுத்துக்களும் ஆறு. ஆதலின் இப்பாடலும் ஆறு வரிகளில் அமைந்திருப்பது, ஒரு பொருத்தமாகக் காணப்படுகின்றது.

2. மேலும் இப்பாடலின்கண் முருகனுடைய திருவடி, நிறம், ஒளி, ஆடை, வேல், சேவற்கொடி, என்னும் ஆறு பொருட்களைப் பற்றியே ஆசிரியர் குறிப்பிட்டுப் புனைந்துரைத்திருத்தலும், கருதற்பாலதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. முருகனின் சிவந்த நிறமும், அழகிய தோற்றமும், மண முடைமை முதலிய தெய்வத் தன்மைகளும், சரவணப் பூம்பொய் கையில் பதுமப்பாயலில் அப்பெருமான் தோன்றியருளிய சிறப்பும், ஆகியவற்றை நினைந்தொறும் நமக்குத் தாமரை மலரின் நினைவே முதற்கண் முந்துற்றுக் கிளர்தலின் அவ்வியல்புக்கு ஏற்ப இப்பாட லும் தாமரை எனத் தொடங்குதல், தருதிப்பாடு மிக்கதாகத் திகழ் கின்றது. 'தாமரை' என்பது ஒரு மங்கலமொழியாதலும், ஈண்டு நாம் மனங் கொள்ளத்தக்கது.

4. தாமரை மலர், முருகனின் திருமுகம் முதலிய பிற உறுப்பு களுக்கும் ஒப்புமையுடையதாயினும், முருகனின் திருவடியையே முதற் கண் நினைவுகூர்ந்து அதற்கு உவமையாக உரைக்கப்பெற்றது: கடவுள ரைப் பாடுங்கால் அவர்தம் திருவடிகளை நினைவு கூர்வதே கவிஞர் களின் இயல்பான பண்பு. இதனைத் திருவள்ளுவர் முதலாகிய எல்லாச் சான்றோர் பாடல்களிலும் காணலாம். நின்னிற் சிறந்த நின் தாளிணையவை' எனப் பரிபாடல் பாடுதற்கேற்பக் கடவுளைக் காட்டிலும், அவர்தம் திருவடிகளே மிகவும் சிறந்தவை என்று கொண்டு, சான்றோர் அனைவரும் பாடுதலின், இப்பாடலினும் அம் மரபு செவ்விதின் அமைந்தது.

5. குறுந்தொகை என்னும் சங்க நூல், நானிலத்து ஐந்திணை ஒழுக்கமும் பற்றி நுதலி எழுந்ததாகலின், அப்பொருளையே இப்பாடல் கருக்கொண்டு திகழ்கின்றது. 'தாமரை புரையும் காமர் சேவடி' என்றதனால் மருதநிலத்தின் கருப்பொருள் ஆகிய தாமரையும், 'பவளத்தன்ன மேனி' என்றதனால் நெய்தல் நிலத்துக் கருப்பொருள் ஆகிய பவழமும், 'குன்றி எய்க்கும் உடுக்கை' என்றதனால் முல்லைக்கு உரியதாகக் கருதப்பெறும் குன்றிமணிக் கொடியும், 'குன் றின் நெஞ்சுபக' என்றதனால் குறிஞ்சிக்குரிய மலையும், ஆக நானில மும் குறிக்கப்பட்டன.

6. பாலைக்கெனத் தனியே நிலம் இல்லாமையாலும், ''முல்லை யும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்தே, பாலை என்று படிவம் கொள்ளுகின்றன.'' ஆதலாலும், அம்முறையில் குறிப்பாகப் பாலை நிலமும் ஈண்டு உணர்த்தப்பட்டது. முல்லைக்குரிய குன்றியையும், குறிஞ்சிக்குரிய குன்றையும் ஒரே வரியில் இயையுமாறு வைத்ததனால் பாலைநிலம் இங்குச் சுட்டப்பெற்றது எனக்கொள்ளலாம்.

7. மருதம் நெய்தல் முல்லை ஆகிய ஏனை நிலங்களைக் கருப் பொருள்களாலும், குறிஞ்சியை மலையாகிய முதற் பொருளாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டியமை, "சேயோன் மேய மைவரை யுலகம்" எனப்படும் குறிஞ்சி நிலவுரிமை முருகனுக்கே யுரியதாதலையுணர்த்துதற்கு ஆகும்.

8. முருகன் இளமையும், அழகும் வீரமும் உடையவன் ஆதலின், 'தாமரை புரையும் காமர் சேவடி' என்று இளமையினையும், 'பவழத்தன்ன மேனித் திகழ்ஒளி' என்று அழகினையும், 'குன்றின் நெஞ்சுபக எறிந்த' என்று வீரத்தினையும், ஆசிரியர் விதந்தெடுத்துப் புகழ்ந்தார்.

9. மேலும், தம்நிகர் இல்லாத தலைவருக்கு அளியும் தெறலும் என்னும் இரண்டு குணங்கள் இன்றியமையாதன. முருகன் தன் நிகர் இல்லாத தனிப்பெருந்தலைவன், ஆதலின் அப்பெருமானுக்கும் இவ்விரு குணங்களும் உண்டு. எனவே 'சேவலங்கொடியோன் காப்ப' என்றதனல் அளியும், 'குன்றின் நெஞ்சுபக' என்றதனல் சுட்டப் பெற்றது.

10. இப்பாடலில் மருத நிலத்துக் கருப்பொருள் (தாமரை) முதலிலும், குறிஞ்சி நிலத்து முதற் பொருள் (மலை) ஈற்றிலும் அமைந்ததனல், முறையே அவற்றிற்குரிய ஊடலும் கூடலும் ஆகிய உரிப்பொருள்கள் 'ஊடுதல் காமத்திற்கின்பம், அதற்கின்பம் கூடி முயங்கப்பெறின்' என்னும் முதுமொழியின்படி நிகழும் இன்பத்தின் இயல்பு உணர்த்தியவாருயிற்று.

11. 'சேவலங் கொடியோன்' என்பது சேவலையேயன்றி, மயிலையும் உணர்த்தியதாகக் கொள்ளலாம். முருகனுக்கு மயிற்கொடியும் உண்டு என்று, 'பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ' எனவரும் திருமுருகாற்றுப்படை வரியால் (122) உணரலாம். ஆண் மயிலுக்குச் சேவல் எனப்பெயர் வழங்குதல் மரபு அன்று ஆயினும்,

"சேவற் பெயர்கொடை
சிறகொடு சிவணும்
மாயிருந் தூவி
மயில்அலங் கடையே"

எனவரும் தொல்காப்பிய நூற்பாவின் உரையில், 'செவ்வேள் ஊர்ந்த மயிலுக்காயின் அதுவும் நேரவும்படும்' எனவரும் பேராசிரியர் விளக்கத்தினல், ஈண்டுச் 'சேவலங் கொடியோன்' என்புழிச் சேவல் மயிலைக் குறிப்பதாகக் கொள்ளுதலும் பொருந்தும்.

## முடிவுரை:

இங்ஙனம் பற்பல நுண்பொருள்கள் பொருந்திய இச்சிறந்த இனிய செய்யுள், குணசாகரர் குறிப்பிட்டு வியந்தவாறு, எல்லாக் குற்றமும் தீர்ந்த சிறந்த நல்ல செய்யுளே என்பதில் ஐயமில்லை. சிறந்த இந்தச் செய்யுளைக் கொண்டு, முருகனைப் பலகாலும் துதி செய்து தியானித்து, முருகன் அருளைப் பெற்று உய்ய முயலுவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்—ஏழாலே வாசியும்
பிரபல சமூக சேவையாளருமாகிய
"ஆத்மஜோதி"

# திரு. நா. முத்தையா அவர்கள்

உலக இந்துமாமன்ற மகாநாட்டில்
கலந்து கொண்டதை முன்னிட்டு
ஏழாலைப் பொதுமக்களால் வாசித்தளிக்கப்பட்ட

# பாராட்டுப் பத்திரம்

மாவொடு வாழை மலிவளர் தெங்கு
பூகம் பலாவொடு புகழ்பெறு கனிகள்
மாண்புடன் விளங்கும் மலிசீர் ஈழ
நாட்டை மிக்க நயம்பெறு செய்பயிர்ப்
பலன்கொழு பதியாம் நலங்கொள் ஏழாலை
ஏர்வளர் குடியில் சீர்வளர்ந் துற்ற
நாக மணியும் நலமார் மனையாள்
பொன்னம் மாவும் புரிதரு தவத்தால்
ஞாலத் துதித்த நலம்பெறு சேயோன்
இத்தரை புகழ்ந்திடு முத்தை யாவெனும்
நாமம் தரித்த நலம்பெறு புகழோய்!
கல்வி யறிவு கருதுறு புலமை
விழுப்பம துடைய ஒழுக்க முறைமை
பிரமச் சரிய விரத மேன்மை
ஆத்மீகம் உயர் அரியநற் பணிகள்
சமூக சேவை சார்ந்திடு முயற்சிகள்
மாணவர்ப் பயிற்றும் மாண்பார் பெருமை
சைவப் பணியில் சார்ந்துயர்ந் தொழுகி
உயர்புகழ் நிறீஇய உத்தமத் தன்மை
அத்தனை யாவையும் சுத்தமா யுறைதரு
மாணிக்க மணியே! ஆணிப் பொன்னே!
ஆத்ம சோதியென அனைவரு மழைத்திடும்
நற்பெய ருடையோய்! நவில்தரு ஞானியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலப் பிட்டியில் ஆவ லுடனுறீஇ
சைவப் பிரசங்க சன்மார்க்க மழைபொழீஇ
எவ்வவர் தமக்கும் ஏற்றிடு மவாஞய்
ஆத்ம ஜோதி அச்சகம் நிறுவி
ஆத்ம ஜோதியாம் ஆரமிழ் தாமெனும்
வெளியீடு தன்னுல் உளமா சகற்றி
உயர்ந்திடு கின்ற உத்தம வள்ளால்
மலேசியாப் பகுதியில் மாண்புடன் நடந்த
உலக இந்துமா உயர்மகா நாட்டில்
இலங்கைப் பிரதி நிதியா யிலங்கித்
தாயகம் திரும்பிய தக்கோய் நின்னை
அன்புடன் வாழ்த்தி யின்புறு கின்ருேம்
நின்புகழ் ஞாலம் இன்புற ஓங்குக!
நினது சேவை நீடு வாழ்க!
தமிழும் சைவமும் தங்கிய நாட்டில்
அமிள்தாய் மிளிர்ந்து சமயத் தொண்டு
மேலும் உஞற்றி மேதக் கோனுய்
எம்முரும் பெருமை எழில்பெற் ருேங்க
வாழிய நலனே! வாழிய நலனே!
மாநிலத் தென்றும் வாழிய நலனே!

வாழி

பத்திமை நெறியாற் பாரினில் என்றும் பரிமளிக்கும்
உத்தம ஞகி உயர்நெறி ஒழுகி உண்மையுடன்
முத்தைய வள்ளலாம் மூதறிஞோனிந்த மேன்மையுடன்
இத்தரை தன்னில் நீள்புகழ் பெற்று இலங்குகவே!

## குணமும் மணமும்

உன்னிடத்தில் எத்தனை திமைகள் இருந்தாலும் அத்திமைகளை உலகம் பொருள்படுத்தாது. கொடுக்கின்ற தருமகுணமாகிய வாசனை ஒன்றுமட்டும் இருக்குமானுல் உலகம் உன்னைப் பாராட்டும், உன்னை மதிக்கும்.

தாழம்பூ, பாம்புகளால் சூழப்பட்டிருக்கின்றது. அதனிடம் பழங்கள் இல்லை, முள்ளோடு கூடியிருக்கின்றது. சேற்றில் நிற்கின்றது. எளிதாக அடையக்கூடாத இடத்தில் இருக்கின்றது. இத்தனை குற்றங்கள் இருப்பினும் வாசனை என்ற ஒன்று இருப்பதனுல் மக்கள் மதித்து அதனை எடுத்துப்பாராட்டிச் சூடிக் கொள்ளுகின்றுர்கள். வாசனை என்ற ஒரு நற்குணத்தால் ஏனைய திமைகள் மறைந்துவிடுகின்றன.

—திருமுருக கிருபானந்தவாரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைத் தன்மையும் இயற்கை முறையும்

ஆன்மநேயர்-சமூகத் தொண்டர்
தவத்திரு நா. சின்னைய செட்டியார்

உலகில் உயிர்கள் தோன்றக் காரணமாயிருந்த ஒரு பெரும் ஆற்றலாம் இறைவனே, தோன்றிய உயிர்கள் வாழவும் உதவிபுரிந்து வருகின்ருர். தோன்றுதற்குக் கருவிகளாகக் கொள்ளப்பட்ட ஐம்பெரும் பொருள்களே, தோன்றிய உயிர்கள் வளர்வதற்கும் அவற்றின் வளத்திற்கும் சாதனமாய் அமைந்திருக்கின்றன. மண், நீர், நெருப்பு, காற்று, வெளி என்னும் இவ்வைந்து பொருள்களும், இவற்றின் கூட்டுப் பொருட்களும் இல்லாமல் இவ்வுலகம் இல்லை. உலகில் வாழும் உயிர்களும் இல்லை என்றே சொல்லலாம்.

அவ்வளவு சிறப்புமிக்க இப்பொருட்கள் உலகில் காணும் எல்லா உயிர்களுக்கும்—மக்களுக்கும் பொதுவாகவே அமைக்கப்பட்டு இருக்கின்றன. இவற்றில் எதனையும் யாரும் தமக்கே எனக்கொண்டு உரிமை பாராட்டுவது கூடாது. பிறர் அவற்றை பயன்படுத்த முடியாதவாறு செய்வது இயற்கை நியதிக்கு மாறுபட்டதாகும். இவற்றை எல்லாரும் பொதுவாக ஆண்டு அனுபவிக்க உதவும் அறிவுடையவர்களே அறிஞர்களென்றும் அறிவாற்றல் கொண்டவர்களென்றும் கொள்ளப்படுவர்.

மாருக, உணவுக்கும் உடைக்குமான ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு மதிப்பைக் கற்பித்து அதன் அடிப்படையில் அவற்றை அடையுமாறு செய்தமை, நாணய மாற்று முறை ஏற்படுத்தியதாகும். இந்த நாணயமாற்று முறையில் முன்னர் இருந்த பண்டமாற்று முறையில் ஏற்பட்டிருந்த சமூக ஒற்றுமையும், ஒருமைப்பாடும் கெட்டன. இதுவே மக்கள் வேறுபாட்டிற்கு காரணமாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறையால் சாதாரண மக்களுக்கு தம் உயிராற்றல்களை உலழும் வளமும் வளர்த்துக் கொள்ளாத மக்களுக்கு இவற்றைப் பகுத்தளித்து பயன்படாதவாறு, இடையூறுகள் விளைவிக்கும் தன்மை ஏற்பட்டுவிட்டது. அப்பொருள்களை ஒரு சிலரே அனுபவிக்கச் செய்யும் செயல்கள் பெருகி இன்று உலகில் பல்வித இழுக்குகளுக்கு, வேண்டும் வேண்டாதனவாகிய விருப்பு வெறுப்புகள் ஏற்படும் கொடுமைகளுக்கு இடமாகின்றன.

இவற்றின் அடிப்படையிலேயே இன்று சமூக வாழ்வில் பணத்திற்கும், பதவிக்கும் முதலிடம் ஏற்பட்டு, உலகெங்கும் உள்ள மக்கள் பலவிதக் கொடுமைகளுக்கும், பழிபாவங்களுக்கும் உட்படுகின்றனர். பொதுவாக இயற்கைப் பொதுத் தன்மையை மறந்து புரியும் இத்தகைய அடாத செயல்களின் விளைவுகளால் மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் சொல்லில் அடங்கா; பஞ்சம், பசி, பிணி முதலியனவும் மக்கள் இத்தகாச் செயல்களைப் புரிவதாலேயே—கெட்ட எண்ணத் தொகுப்பின் நினைவாலேயே இயற்கை நியதியால் ஏற்படுத்தப் படுகின்றன. இதனை இன்று ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

ஆகவே, இன்று உலகில் நேர்ந்துள்ள, மேலும் வளர்ந்து வரும் பழிபாவங்கள் நீங்க வேண்டுமெனில், அறிஞர்கள் பலரும் இப்பொருள்களை வழங்கியுள்ள இறைக் கருணையை எண்ணி, இறைவனின் பொதுத் தன்மையைச் சரியாகப் புரிந்து கொண்டு, அவற்றை எல்லாரும் பொதுவாக ஆண்டு அனுபவிக்கும், இன்ப வாழ்வு கொண்டு விளங்குதற்கான, வழி முறைகளை வகுக்க வேண்டுவது இன்றியமையாததாகும். இவ்வாறு ஒழுகி ஆன்மநேயமே உலகில் அமைதியும், ஆனந்தத்தையும் உண்டாக்க அடிகோலும் என்பதை உணர்ந்து ஒழுகும் போக்கு உலகில் சிறக்கச் செய்யவேண்டும். இது பற்றியே வள்ளல் இராமலிங்க அடிகளார், "கல்லார்க்குங் கற்றவர்க்குங்....." என்னும் பாவின் மூலம் இறைவனின் பொதுத் தன்மையை அறிவுறுத்துகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் ஆற்றலும் அழியாப் பெரும்பொருளாம் இறைவனுடன் இணைந்ததேயாகும்; அறிவும் ஆற்றலும் மிக்க மனிதனின் தன்மை அப்பேராற்றற் பெருமானின் தன்மையைச் சார்ந்ததேயாகும். யார் ஒருவர் அப்பேராற்றலுடன் பிணைப்புக் கொள்கின்றனரோ அவர்களும் அப்பெரும் பொருளின் தன்மையினராகவே அமைந்துவிடுகின்றனர்.

ஆனமையால், இன்பமும் இயற்கை அறிவாற்றலும் அடைதற்கான பெரும்பேருக உள்ள அப்பெருமானை அடைந்து அமைதியுறுவதே அகில உயிர்களின் கடமையும் கட்டாயமுமாகப் பேசப்படுகின்றது. பலதர மதங்களும் சமய சாஸ்திர சம்பிரதாயங்களும் இதனை அடைந்து ஆனந்த முறவே அறிவுறுத்துகின்றன. மோட்சம் என்னும் துன்பமற்ற சுகநிலையையே ஒவ்வொருவரும் அடைய அவாவுகின்றனர். இதற்காகவே எல்லாரும் எத்துறையிலும் ஈடுபட்டு அல்லும் பகலும் உழைக்கின்றனர்.

இச்சுகநிலை அடைந்து அமைதியுறவே பல பெரியோர்கள் பலவித சாதனைகளையும், சம்பிரதாயங்களையும் ஏற்படுத்தியுள்ளனர். அவற்றைப் பின்பற்றுவோர்களில் பலர் இச்சாதனை சம்பிரதாயங்களில் ஈடுபடுகின்றனர். ஆயினும், இந்த ஏற்பாடுகளின் கருத்துக்களை அறிதற்கோ அறிந்து அமைந்து கொள்வதற்கோ, எவ்வித முயற்சியையும் கொள்வதாக பெரும்பாலோர் இல்லை.

தெய்வந் தொழுதல், வந்தனை வழிபாடுகள் செய்தல் முதலிய எவையும் நாம் வாழ்வதற்கான உயிராற்றல் அழியாமல் நரை, திரை, பிணி, மூப்பு மரணாதிகளை அடைய ஒட்டாமல், செய்யும் கருவியாக, உதவுவதாக இல்லை; வெற்று வேடிக்கை விநோதங்களுக்காகவும், பொழுது போக்கிற்காகவும் வாணிக முறைக்காக உதவுவதாகவுமோ அமைவதாகவே இருக்கின்றன. மன ஒருமைப்பாடு அடையவும் அறிவாற்றல்கள்பெற்று ஆண்டவன் தன்மையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்து அறிவும் ஆரோக்கியமும் ஆயுளும் பெருகுவதற் காக உதவும் பணமும், உயிராற்றலும் உரமும் வளமும் கொண்டு விளங்கும் தன்மையையும் தருவனவாக இல்லை எனலாம்.

ஆகவே இவ்வித வழிபாடு முதலிய சாதனங்கள் இன்று வேண்டாதனவாக விளங்குவதை அண்மையில் நம்மிடை வாழ்ந்திருந்த பேரறிஞர் பெருமக்களாகிய வள்ளல் இராமலிங்க அடிகளார், சுவாமி சிவானந்தபரம ஹம்சர் முதலானவர்களும், இவ்வாரவார ஆற்ப்பாட் டங்களில் யாரும் ஈடுபடாமல் ஒவ்வொருவரும் தத்தம் உயிராற்றலை வளர்ப்பதிலும் அதன்மூலம் இறைத்தன்மை யாம் பொதுத்தன்மை பரவுவதற்கான பணியைச் செய்ய வேண்டுவதையுமே தம்முதற் கடமையாகக் கொள்ளுதல் வேண்டும் என அறிவுறுத்தியுள்ளனர்.

மக்கள் வாழ வழி வகுத்தளித்த இறைவன், மக்களின் விருப்பு வெறுப்பாதிகள் செயற்படுதற்கான திட்டமுறை யையும் அமைதிக்கு ஆக்கந் தரும் வகையில் இயற்கை நியதியை வழங்கி இருப்பதையும் உணர்தல் வேண்டும். மக்கள் புரியும் ஒவ்வொரு வினையும், நினைவு சொல், செயலாதிகளால் புரியப்படுவன எல்லாம் அவர்களினின்று பிரியும் இயக்கச் சக்தியாம் உயிராற்றல் அலைக் கூட்டங் களாக அண்ட வெளியில் பரவி அதனதன் தரத்திற் கொப்ப ஒருங்கிணைந்து ஆக்கவும், அழிக்கவும் ஆன சக்தி களாக மாறும் முறையாம் மாண்பினை ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும். இவ்வாறு உணர்ந்து ஒழுகும் மனிதன் உள்ளத்தின் உயர்த் தன்மையைக் குறிக்கவே— இவ்வினைகளின் விளைவுகளின் சிறப்பை எடுத்துக்காட் டவே – திருவள்ளுவர்,

''எண்ணிய எண்ணியாங் கெய்துவ எண்ணியர் திண் ணிய ராகப் பெறின்'' என்று அருளியிருக்கின்றார். மனித எண்ணங்கள் எவ்வாறு செயல்படுகின்றன; இயற்கை நியதி எவ்வாறு செயல்படுகின்றது என்பது ஓர் எடுத்துக் காட்டால் விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது, விஞ்ஞான உலகில் இன்று ராக்கெட்டு களும், அண்ட வெளியில் பயணஞ் செய்வோர்களும் புரியும் செயல்முறையை அவர்களுடைய செயலாக்கங்களை விண்ணி லிருந்து மண்ணிற்கும் பூமியிலிருந்து வான்வெளிக்கும் நடைபெறும் கருத்துப் பரிமாற்றங்களின் கால அளவுகள் அவை எவ்வளவு விரைவில் செயல்படுகின்றதென்பதை ஓர்ந்து உணர்தற்கூடும். பூமியிலிருந்து கூறும் ஆணைகளுக் கேற்ப வானத்திலிருக்கும் அண்டவெளி நிபுணர்கள் நடந்து கொள்ளுதற்கான கால விரைவு பற்றி எண்ணு வதும் இதற்கு உதவும். அண்டவெளியின் உதவியையும் அவற்றிற்காகும் கால அளவும் எவ்வளவு என எண்ணிப் பார்ப்போர் இறைவனின் இயற்கை நியதியால் மக்களின் எண்ணங்களுக்கேற்ப விளைவுகளை அவ்வப்போதே தீர் மானித்துச் செயல்படுத்தும் நிலையை மறுக்கவும் கூடுவரோ?

ஆகவே மக்கள் வினைகளை விளைவுகளுக்காம் வினை களை கருவிகளாகச் செய்யும் போக்கு இயற்கையிலேயே அமையப் பெற்றிருப்பதை உணரலாம், இதை நோக்கும் போது இறைவனின் பொதுத்தன்மையை யாரேனும் மறுக்கவும் கூடுமோ? வினைக்கேற்ற விளைவைத் தருதற் கான ஏற்பாடு இயற்கை நியதியாக அமையப் பெற்றுள்ள தால், இதற்கு ஒரு கால அளவும் தேவை இல்லாமலா கின்றது; எவ்வித ஏற்றுதலும் போற்றுதலும் இதனைத் தடுக்கவும் மாற்றவும் முடியாமலாகின்றது. ஆண்மையால் இவ்வித இறைத் தன்மையை உணர்ந்து தம் ஜீவனைக்காத்து மற்ற உயிர்களுக்கு உதவி ஒழுகும் உத்தமர்கள், பிறர்க் கும் உதவி வாழும் பண்பும் பெற்று பயனுள்ள வாழ்க்கை யை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிவறிந்த ஆன் றோர்களும் அன்றும் வற்புறுத்திக் கூறியுள்ளனர்.

இதனைக் குறிக்கவே இராமலிங்க அடிகளார், "ஜோதி" வழிபாடு என்னும் உயிர்காக்கும் முறையினையும் அதன் மூலம் ஜீவகாருண்யமென்னும் உயிரையும் வளர்க்கும் போக்கினையும் போதித்துள்ளார். இதனையொட்டி சுவாமி சிவானந்தர் காட்டிய செய்முறை போதமே இன்று மக் களைச் செம்மை வழியில் செலுத்தி உலகில் சகோதரத் துவத்தையும் சமநிலையையும் நிலைக்கச் செய்கின்றது. எல்லாரும் ஜாதி மத சமய வேறுபாடுகளற்ற சிறந்த சம நோக்கில் பற்றற்ற பொதுவுடைமைப் போக்கினையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று உயர்ந்து வாழ வழி வகுத்திருப்பது எல்லாரும் உணரத்தக்கதாகும். இதனை மக்கள் உணர்ந்து ஒழுகுவார்களாக! உயிரையும் உரமிக்க நலவளங்களையும் கொண்டு உலகில் நீடுவாழ இதனினும் சிறந்த சாதனை இல்லை என்பது உறுதியாகும்.

சித்த வித்தையாம் பிரம்ம வித்தையே இச் சிறந்த செம்மை நிலையை உலக அமைதிக்கு அப்பேரறிஞர் பெருமான் அளித்த பேருதவியாகும். இதனை அறிந்து ஒழுக ஒவ்வொருவரும் முற்படுவார்களாக!

வாழ்க மக்களினம்! வளர்க செம்மை ஒழுக்கப் பழக்கம்!!

## வழிபாட்டு விதிகள்

1. நீராடி, தோய்த்துலர்ந்த தூய ஆடை உடுத்தி, தூய்மை உடலுடனும் உளத்துடனும் கோயிலை அடைதல்.
2. கோயில் கோபுரத்தைக் கண்டவுடனே அதனை வணங்கி கோயிலுக்குள் நுழைதல். மீண்டும் ஒருமுறை கை, கால்களை கழுவி தூய்மை செய்து கொள்ளல்.
3. கொடி மரத்தை அடைந்து, உடலுறுப்புகள் நிலத்தில் படும்படி வீழ்ந்து வணங்குதல்.
4. திருமுறை பதிகங்களை ஓதிக்கொண்டே இடப்பக்கமாக கோயிலை முதலாம் முறையாக வலம் வருதல்.
5. பலிபீடத்தை அடைந்து நின்று வணங்கல்
6. விநாயகப் பெருமானை திருவினை அடைந்து வணங்குதல் (விநாயகப் பெருமான் திரு முன்னிலையில் மட்டுமே தலையில் இரு கைகளாலும் குட்டிக் கொண்டு; இரு கைகளாலும் காதுகளை மாற்றிப் பிடித்துக் கொண்டு மூன்று முறை தோப்பு கரணம் போடவேண்டும். மற்றைய மூர்த்திகளின் சந்நிதியில் இவ்வாறு தலையில் குட்டிக்கொள்ளலும், தோப்புக் கரணம் போடுதலும் ஆகா.)
7. ஆலயத்தின் சுற்றுப் பிரகாரத்தில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளை வணங்கல்.
8. மூலஸ்தான மூர்த்தியை வணங்கல் (பன்னிரு திருமுறைப் பாடல்கள் அல்லது பஞ்ச புராணப் பதிகங்களை ஓதல்) வேண்டும்.
9. இரண்டாம் முறையாக கோயிலை வலம் வருதல். வரும்போது பிரகாரத்திலுள்ள மூர்த்திகளை வணங்கி இரண்டாம் முறை கோயில் வலம் வருவதை முடித்தல்
10. மூன்றும் முறையாக கோயிலை வலம் வருதல்.
11. இறுதியாக கொடி மரத்தின் அருகில் வந்து நின்று, சாஷ்டாங்க வணக்கம் செய்தல்.
12. இறை எண்ணத்துடன் இல்லம் திரும்புதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க பல்லாண்டு — வளமார் புகழ்கொண்டு

த. ஏகாம்பரம்
தலைவர்-இறைபணி மன்றம்
தாம்பரம்-சென்னை-59

எல்லாம் வல்ல இறைவன் இன்னருளினாலே எத்துணையோ புண்ணியம் புரிந்து அரிதினும் அரியதாகிய இம் மானிடப் பிறவியை எடுத்துள்ளோம். இவ்வளவு அரிதாக அடைந்துள்ள மானிடப் பிறவியை உயர் நற்கதியடையும் பொருட்டு நல்வழியாம் ''தெய்வீக சன்மார்க்கம்'' என்னும் நன்னெறியிற் செலுத்தி நாளும், நம் ஆத்மா கடைத்தேறி உய்யும் வகையில் நல் உபதேசம் புரிந்து வாழ வைப்பது குருவருள் ஆகும்! அத்தகைய சற்குருவருளும், இறைவன் திருவருளும் ஒருங்கிணைந்த, உயர் குண நலங்கள் நிரம்பப்பெற்ற உத்தம நல்லறிஞர் பெருந்தகையாளர் தவத்திரு. நா. முத்தையா அவர்கள் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஈழ நன்னாட்டிலிருந்து ''ஆத்மஜோதி'' என்ற அற்புதப் பெயர் அமைந்த—தெய்வீக, ஆன்மிக, சமய, இலக்கிய, மொழி, கலை, கலாச்சாரத்துறைகளில் ஆன்மநேய ஒருமைப் பண்பாட்டினை உயர்த்தி மக்களின் வாழ்க்கையினை வாழ்விக்கவல்ல கருத்துக் கருவூலங்கள் சுடர் விட்டு ஒளிரும் அரிய பெரிய தத்துவங்களை அடக்கிய மாதாந்திர தமிழ் இலக்கிய சஞ்சிகையினை-எத்தனையோ இடர்ப்பாடுகள், இடுக்கண்கள், இடையூறுகள், எதிர்ப்புகள், பொருள் இழப்புகள், தொல்லைகள் ஆகியவைகளுக்கிடையே ஆர்வம் ஒரு சிறிதும் குன்றாமல் ''என் கடன் பணி செய்து கிடப்பதேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே!'' என்ற தாயுமானாரின் அருட் கொள்கையைப் பின்பற்றி தொடர்ந்து ''ஆத்மஜோதி'' யை ஒளிபரப்பி அஞ்ஞான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளகற்றும் நற்றொண்டில் தம்மை ஆட்படுத்திக்கொண்டு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு குன்றுவண்ணம் மக்களை நன்னெறிப்படுத்தும் சமய, சமூகப்பணிகளில் தம்மை, தம்மைச் சார்ந்தோர்களை ஈடுபடுத்திக்கொண்டு, ஒரு சிறிதும் பற்றற்ற உயர் நெறி நின்று சான்றோர் என்ற சொல்லிற்கு எடுத்துக் காட்டாய் விளங்கி வருபவர் தவத்திரு. நா. முத்தையா அவர்கள் ஆவார்கள்.

ஆத்மாவின் அஞ்ஞான இருளையகற்றி வாழ்க்கையை தெய்வீக சன்மார்க்கமென்னும் நன்மார்க்கத்தில் நடத்திட ஒளி அருளி உதவுவதே கல்வியின் சிறந்த நற்பயன் ஆகும்! "கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழார் எனின்" என்பது திருவள்ளுவப் பெருந்தகை அருளியுள்ள "குற" ளின் கருத்து — இந்த அரும் பெரும் நற்கருத்தினை வேதவாக்காகக் கடைப்பிடித்து "கல்வியின் பயன்" கருதி மக்களை நல்வழிப் படுத்தும் நற்றொண்டையே பயனுடைய உயர் தொண்டாய்க் கருதி-மக்களை வாழ்வித்து, "உயர் கருணை புரியும் இன்பக் கட" லாம் இன்ப அமுத வாரிதியில் திளைக்க வைப்பதையே தம் வாழ்வின் உயர் நோக்கமெனக்கருதி -குடும்பத்தில் வாழ்ந்தாலும் பற்றற்ற பண்பாளராய், தீவிர பிரம்மச்சரியம், ஜெப, தப, தியான நிலை கைகூடி வரப்பெற்று நற்பண்புகள் நிறைந்த நன்மன நல்லியல்புகளுடனும், அன்பு, பண்பு, பக்தி, பரிவு, ஞானம் நற்கல்வி, நற்றொண்டு, நல்லொழுக்கம், நற்குணம், மனத்தூய்மை உள்ளத்தின் மேம்பாட்டுணர்ச்சி முதலிய நற்பண்புச் செல்வ நலங்கள் யாவும் ஒரு வடிவாய்த் திகழும் நல் அன்பர் பெருந்தகை தவத்திரு. நா. முத்தையா அவர்களுக்கு இவ்வாண்டில் அறுபதாம் ஆண்டின் நிறைவுப் பெருவிழா சிறப்புற நடைபெறுவதறிந்து அகம் மிக மகிழ்வுறுகின்றனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பத்தால் துவளாத உள்ளமும், இன்பத்தில் நாட்டமில்லா இதயமுமே, அச்சம், வெகுளி, அவா, காமம், சினம் ஆயவற்றை ஒழித்தபிறகே - நம்முள் இயங்கிக் கொண்டிருக்கும் ஆத்மாவை, "ஆத்மஜோதி"யை, ஆன்மாவின் தன்மையை, மகிமையை நம்மால் உணர்ந்து அறிய அனுபவிக்க இயலும்! - மனம் அடங்காதவனுக்கு ஆத்மபோதம்இல்லை! தியான நிலைகைகூடாத அஞ்ஞானிகளுக்கு மனச்சாந்தி - சமாதானம் இல்லை! சாந்தியில்லாதவனுக்கு சத்தியத்தின் தரிசனம், மற்றும நிம்மதி இல்லை! நிம்மதியில்லாவிடில் இன்பம் இல்லை! - ஆகவே - புலன்களின் வேட்கையை அடக்கி, வென்று, ஆசாபாச அலைகளற்ற நிர்மலமான - தூய நன்மனத்தினுல் கண்டு அறியப்படுவதே ஆத்மஜோதி! - ஆத்மஜோதிக் காட்சிபெற்ற நிலையிலேதான் "நான்" "எனது" என்ற பற்று அறும்! - பற்றற்று, பயமற்று, சினமற்று, மனமற்று "எல்லாம் அற தம்மையிழந்த நன்னிலையிலேதான் உலகத்தோர் விருப்பித்தேடும்பேரின்பமயமான தெய்விக நலம் ஒளிரும் ஆத்மஜோதி தத்துவத்தின் பயனை ஒருவன் தன்னிடத்திலேயே கண்டறிந்து இன்பமுற இயலும்!

"இறையருள்" என்னும் பூஞ்சோலையிலே அருட்கலைகள் பல உண்டு! அவற்றுள் ஒளிமயமாக துரியங்கடந்த நற்பெருவெளி"யில் துலங்குவதே ஆத்மஜோதி! - மாறுகின்ற இவ்வையகத்தில் வாழுகின்ற நமக்கெல்லாம் நாளும் நம்வாழ்க்கையில் நொடிப்பொழுதில் பலதரப்பட்ட பிரச்சினைகள், இடர்கள், இன்னல்கள் நேரிடுகின்றன. அத்தகைய நேரங்களிலெல்லாம் தோன்றாத்துணையாய் நம் உள்ளத்தேயிருந்து நல்வழிகாட்டி நம்மை வாழ்விப்பதும் என்றும் அணையா நந்தாவிளக்காய ஆத்மஜோதியே!

அத்தகைமைத்தான "ஆத்மஜோதி" என்னும் அரிய பெயரினைத்தாங்கிய மாதாந்திர சஞ்சிகையை வெளியிட்டு கடல் கடந்து வாழும் சன்னித்தமிழ் நாட்டவரிடையே ஒற்றுமையையும், உயர்பண்பினையும், பக்தியையும், சத்தியத்தையும், சமாதானத்தையும், சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும் எல்லாவற்றிற்கும் மேலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்விக நன்னம்பிக்கையினையும் ஊட்டும் மகத்தான நற்றொண்டில் ஈடுபட்டு கடந்த கால்நூற்றாண்டுக்கும் மேலாக அமைதியுடனும், அடக்கத்துடனும், ஆர்வத்துடனும், இறையருளுடன், ஈகைச்சிறப்புடன், உள்ளப்பெருமிதத்துடன் ஊக்கம் குன்றாமல் என்றுங்குறையா இலக்கியச்செறிவுடன், ஏற்றமிகு நற்பண்பாட்டுணர்வுடன் ஐந்துகரத்தானின் அருள்துணையுடன், ஒரு மைப்பாட்டுணர்ச்சி உயர்வுடன், ஓங்காரமான பேரருள் திறத்தால் ஆங்கார உணர்ச்சியகன்றிட,ஔவியம் பேசாமல், ஔடதகுணத்துடன் அஃதோர் நல் எடுத்துக் காட்டாக, கலைச்சிறப்புமிக்க - கவின்மிகு எழிலுடன், ஏற்றமிகு நற்புகழுடன் இயற்றிவரும் அரும்பெரும் புலமைமிகு அறிஞர் புகழ் சான்றோராகிய தவத்திரு. நா. முத்தையா அவர்கட்கு, அவர்கள் அறுபது ஆண்டுகளைக் கடந்த இனிய நற்பெருவிழா - 22-5-1978-ல் ஈழம் பெரிதுவக்க சிறப்புத்திருவிழாவாக நடைபெறுவதை அறிந்து களிபேருவகையடைகின்றோம்.

1972-ம் ஆண்டில் எமது ''இறைபணிமன்றம்'' மேற்கொண்ட ''ஈழநாட்டுத்திருத்தலயாத்திரை''விழா நிகழ்ச்சியின் போழ்து - தவத்திரு. நா. முத்தையா அவர்களும், அவர்தம் இளவல் திரு. நா. அருமைநாயகம் அவர்களும் இலங்கையில் தலைமன்னரில் எம்மை வரவேற்று உபசாரங்கள் பல செய்து, விருந்தளித்து உற்ற உறவினர்களை விட மேலாக உவகையோடு, பெற்ற அன்னையினும் பரிந்து, அன்புகூர்ந்து, எம்முடன் யாத்திரையில் கலந்து கொண்டு-கண்டி, கதிர்காமம், கொழும்பு, யாழ்ப்பாணம், நயினைதீவு, நவலப்பிட்டியா, வவுனியா, திருக்கேதீச்சரம், திருகோணமலை, மற்றும் பல திருத்தலங்களுக்கும், எம்முடன் வருகைதந்தும், பல திருக்கோயில்களிலும், பொது இடங்களிலும், அறிஞர்சபைகளிலும் எமது '' மன்ற '' அங்கத்தினர்களின் திருப்புகழ் இன்னிசை நிகழ்ச்சிகள், பலவற்றை ஏற்பாடு செய்து உதவியும் கண்ணை இமை போலக் காத்து யாத்திரையை வரலாற்றுச் சிறப்புமிக்க வகையில் வெற்றி பெறும் வண்ணம் ஏற்பாடுகள் செய்தும், உடனிருந்து ஊக்கமளித்துதவிய பான்மையினையும், சமீபத்தில் சென்னை மாநகரில் காஞ்சிபுரம் ஜெகத்குரு ஸ்ரீ ஆச்சாரியஸ்வாமிகளால் அனுக்ரகிக்கப்பட்ட உலக இந்து சமய மகாநாடு சபையில் தவத்திரு. நா. முத்தையா அவர்கள் ஆற்றிய பேருரையினையும், எம் வாழ்நாள் உள்ளளவரை மறக்க இயலாததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதிக்கு ஆத்ம நிவேதனம்

ஸ்ரீமத் ஸ்ரீ ரங்கானந்தசுவாமிகள்

முகாம்-மதுரை

ஆத்மஜோதி ஆசிரியரான என் நண்பர் திரு. நா. முத்தையா மாஸ்டர் அவர்கள் ஈழநாடு ஈன்ற ஒரு நல்ல முத்து ஆவர். பிரம்மச்சாரியாக வாழ்ந்து, ஈழத்தின் மூலை முடுக்குகளில் ஆன்மிகக் கைங்கர்யத்தைச் செய்து வரும் பெருந்தகையாளர் முத்தையா மாஸ்டர். இவரது திவ்ய ஜீவியத்தில் அறுபது ஆண்டுகள் பூர்த்தியடைகின்றன. இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து இறைத்தொண்டை எங்கும் பரவச் செய்ய இறைவன் அருள்புரிய பல்லாண்டு பாடுவோமாக! இவருக்கு எமது நெஞ்சு கனிந்த நல்வாழ்த்துக்கள்! திரு. முத்தையா அவர்களோடு இணைந்து ஈழத்தில் பலவிடங்களில் தொண்டாற்ற எனக்கும் பல வாய்ப்புக்கள் கிடைத்தன. அதற்கும் நன்றி செலுத்துமுகமாக என் சில எண்ணங்களை வண்ணமாக்கி, ஆத்மஜோதி 'சஷ்டியப்த பூர்த்தி விழா' சிறப்பு மலருக்கு பணிவன்புடன் ஆத்மஜோதிக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

இறைவனே ஆத்மஜோதியாவான். நாம் இயற்றும் சிவபூஜையில் சில மந்திரங்கள் வருகின்றன. ஜீவாலாய நம: (ஒளிவடிவாகியவருக்கு நமஸ்காரம்), ஜ்வல லிங்காய நம: (ஜோதிர் லிங்க வடிவாகியவருக்கு நமஸ்காரம்), ஆத்மாய நம: (உயிருக்கு உயிராகியவருக்கு நமஸ்காரம்), ஆத்மலிங்காய நம: என்பதற்கு உரை இதுவாகும். ஸர்வ ப்ராணிஞம் ஆத்மரூபேண ஹ்ருதய குஹாயாம் லினதயா ஸம்யமாஞய நம: எல்லா உயிர்களின் இதயத்திலும் மறைந்து உறைபவருக்கு நமஸ்காரம் என்று வேதங்கள் பாடிப்பரவுகின்றன. இறைவனை, 'ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதி', 'மாசற்ற சோதி' என்று பாடுகிறார் மணிவாசகப்பெருமான்.

சோதியே சுகவாரியே ஆன இறைவன் நம் உயிருக்கு உயிராய்-நம் ஆன்மாவாய் — உள்ளான். அவனே எங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்தும் கரந்தும் உள்ளான். நம் ஆன்மாவாய் உள்ளபடியால் நம் உண்மை வடிவம் ஆன்ம வடிவமே ஆகும்; அதாவது நம் ஆத்மா சிவமே என்பதாம். சிவத்தை உணர்வதும் சிவமயமாவதும்தான் சாக்ஷாத்காரம் எனப்படுகிறது. இதுதான் வேதம் விளக்கும் உண்மை. இதை வேதாந்த சித்தாந்தங்கள் அறிவுறுத்துகின்றன.

இறைவன் மனம் வாக்குக்கு எட்டாதவனாயினும் மனத்தால் தான் நினைக்கவும் வாக்கால் தான் துதிக்கவும் வேண்டியிருக்கிறது. சித்தம் தூய்மையடையவும், தெளிவு அடையவும், நம் அன்பைப் பொழியவும் இறைவனை ஒரு வடிவிற் கொண்டு இலை, பூ, நீர், கனிகளால் பூசிக்கவும் வேண்டியிருக்கிறது. அற்பமான அழிவுடைய பொருள்களைக் கொண்டும் அழிவற்ற நித்தியமான அவனை அடைய முடியும் என்று வேதங்கள் உறுதி கூறுகின்றன!

சிரத்தையும் நுட்ப அறிவும் கொண்ட நசிகேதஸ் யமதர்மனைச்சார்ந்து உபதேசம் பெற்றான். அப்போது கூறும் வாக்கு கடோபநிஷத்தில் இவ்வாறு வருகிறது: ''அநித்யைர் த்ரவ்யை: ப்ராப்த வானஸ்மி நித்யம்'' (1-2-10) அநித்யமான திரவியங்களையும் (இறைவனுக்கு) அர்ப்பித்து நித்தியப் பொருளை (இறைவனை) அடைந்தவனாவேன்.

இந்த உலகில் உள்ள அனைத்தும், நம்உடல் உடைமை யாவுமே அழியும் பான்மையன. உடல், பொருள், ஆவி யாவற்றையுமே இறைவனுக்கு உரியனவாகச் செய்ய வேண்டும்; அவன் பணிக்கே ஆக்க வேண்டும். அதற்கு இறைவனிடம் பேரன்பு இருந்தாலன்றி இயலாது. அன்பு ஒன்றுதான் கொடுக்கச் செய்யும்; வாங்குவதற்கு எண்ணம் வராது. எல்லாமே அவன் தந்தவை. அவன் தந்தவற்றை கொண்டு அவனுக்கே தொண்டு செய்வதில் பிணக்கு ஏன்? அஞ்ஞானமன்றோ காரணம்! அன்பின் தூய்மையால் தொண்டாற்றும்போது மன பரிபாகம் விருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடைந்து தியாகமும் சேவையும் அதாவது, துறவும் தொண்டும்—நிலைபெறுகின்றன. இறைவன் திருவடிகளில் பற்று உண்டாகிறது. அவனே நித்யப்பொருள். நித்யத்தை-அழியாப் பொருளை - அடைந்துவிட்டால் அழிவு ஏது? இறப்பும் இல்லை, பிறப்பும் இல்லை. இந்நிலையே சாக்ஷாத்காரம் எனப்படுகிறது.

சிவபெருமானே எல்லாமாகி — வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி, ஊனாகி, உயிராகி-யாவுமாகி இருக்கிறான். எல்லா உயிர்களும் சிவமே. ஜீவனுள்ளும் சிவம் இருப்பதால், ஜீவனை சிவமாக பூசிக்க வேண்டும் என்ற பேருண்மையை ஸ்ரீ ராமகிருஷ்ணர் விவேகானந்தருக்குக் காட்டினார். ஜீவ சிவ மந்திரம் அது! ஜீவ சேவை சிவ பூஜை ஆகும் என்றார் பரமஹம்ச தேவர். குருதேவரின் உபதேசக் கருத்து ஓர்ந்துணரத்தக்கது.

இறைவனே எல்லாம் ஆகி எங்கும் நிறைந்துள்ளான். ஆலயத்துள் இருக்கும் சிலையில் மாத்திரம் இருப்பான் என்பதல்ல. அவனுடைய பல விபூதிகளை (பெருமைகளை) எண்ணி எண்ணிப் பணிந்து போற்றினால் அவன் திருவருளால் பேரறிவைப் பெறலாம். பக்திக்கு பணிவு ஆதாரமாகிறது. பணிவுடையவனுக்கு இன்னல் இல்லை. உலகநாதனுக்கும், உலகுக்கும் தன்னைத் தொண்டனாகக் கருதுகிறான் பக்தன். தாச மார்க்கம் தானே வந்து அமைகிறது. தாசனுக்கு, அடியானுக்குத் தொண்டாற்றுவதில் தான் இன்பம் பெறுகிறான். அவனிடமுள்ள 'அகங்காரமும், மமகாரமும்' மாய்கின்றன. இந்த இரண்டு காரங்களும் அழிவதற்காகவே 'நமஸ்காரம்'! அகங்கார, மமகாரங்கள் ஒழிந்தால் பக்தனுடைய சித்தம் தெளிவு அடைகிறது. தெளிவான சித்தத்தில் சிவபெருமான் தோன்றுகிறான். சித்தம் சிவமாகி விட்டால் பேரின்பம் எய்துகிறான் பக்தன். இந்த உணர்வில் நிலைபெறுவதே சிவயோகம். அதிலே பெறப்படுவது சிவஞானம். அதையே பழுத்த மனம் என்பர். தம் ஆத்மா சிவத்தில் கலக்கச் செய்வதே ஆத்ம நிவேதனம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரறிவு, பேரானந்தம், பேரன்பு, பெருங்கருணை என்பவையே இறைநிலை. இறைவன் கருணைக்கடல், அவன் கருணையின்றி எதுவும் எய்தவியலாது. அவன் கருணைக்கு நம்மை உரியபாத்திரமாக்கிவிட முயற்சிப்பதே ஆத்ம சாதனம். நம் முயற்சிகள் எவ்வளவு குறையுடையதாயினும், கருணைக் கடலான இறைவன் குறைகளைப் பொருட்படுத்த மாட்டான், அக்குறைகளை நிறைவு படுத்தி விடுவான்.

பற்று பாசங்களால் கல்லாக, இரும்பாக ஆகி இருக்கின்றன நம் நெஞ்சங்கள்! அவற்றைக் கூட கனிய வைத்து விடுவான் கருணை வள்ளல்! "இரும்புதரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து என்பு உருக்கி, கரும்பு தரு சுவை எனக்குக் காட்டினை உன் கழல் இணைகள்" என்று இறைவனின் கருணுவிலாசத்தைக் கூறிப் பாடிப் பரவசமடைகிருர் மணிவாசகப் பெருமான்! "கல்லா மனத்துக் கடைப் பட்ட நாயேனை, பிச்சேற்றிக், கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை வெள்ளத்து அழுத்தி வினை கடிந்த வேதியன்" என்று நமக்கு அறிவுறுத்துகிருர், அநுபவ ரீதியாக!

ஆகவே இறைவனிடம் ஏதாவது ஒரு சம்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு அன்பு செலுத்தவேண்டும். தாயாக, தந்தையாக, குழந்தையாக, நண்பனுக, ஆண்டானுக, நாயகனுக, அவரவர் மன நிலைக்கேற்ப உறவை ஏற்படுத்திக் கொண்டு இறையன்பை வளர்க்கவேண்டும். உயர்ந்தபக்தியும், உயர்ந்த ஞானமும் முடிவில் ஒன்றே என்று தெரியும். வெளியுறவைக் கொண்டு செய்த சாதனத்தின் பயனுக நமக்கும் இறைவனுக்குமுள்ள தொலைவு குறுகிக்கொண்டே போய் முடிவில் நம்முள் உள்ள சிவஜோதியே நம் ஆத்மஜோதி என்று உணரப்பெறுவோம்! அப்போதுதான் பேரானந்தப் பரவசம் உண்டாகிறது. இந்த நிலையை என்னென்பது! அந்தப் பேரின்பப் பெருநிலையை எய்துவதே நம் குறிக்கோள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நம் மனதுக்குள் இறை எண்ணத்தைத் திணிக்க வேண்டும்'' என்பார் ஒரு பெரியவர். கடவுள் சிந்தையை மனதில்நிரப்ப நிரப்ப அங்குள்ள குப்பைகள் தாமே அகன்று விடும்! சித்தம் ஒருதொட்டிபோன்றது. அதில் நம்வியவகார வாழ்க்கையில் ஈட்டும் எல்லாவித (காமம் — கோபம்— லோபம்—பொறாமை) ஆகிய குப்பைகளைச் சேர்த்துவைத்துக் குப்பைத் தொட்டியாகி வருவதே நம் லட்சணம்! அந்தக் குப்பைகளை (சித்தமலத்தை) நீக்குவதே ஆத்ம சாதனம் ஆகிறது! அதற்கான வழியாது? தேவாரத் திருவாசகங்களை ஓதி ஓதி, இறைவனைப் பாடிப்பரவினல் சித்த விகாரங்கள் நீங்கிவிடும். சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி நம்மை ஆண்டுகொள்வான் அத்தன் என்ற உறுதிவாக்கு மணிவாக்கிலிருந்து வந்துள்ளது தெரிந்ததுதானே! ஆத்ம ஜோதிக்கு ஆத்ம நிவேதனம் செய்வதே சிறந்த சாதனம். அருட்பெரும் சோதி தனிப்பெருங் கருணை என்பார் இராமலிங்க அடிகளார்! அந்தச் சோதியைப் போற்றுவோமாக! மாசற்ற சோதிமலர்ந்த மலர்ச்சுடரே போற்றி போற்றி!

## கடவுள் பேசவும் செய்கின்றார்!

மனிதனுக்குக் கடவுள் தம்மை நிச்சயமாகக் காட்டியருளி அவனுடன் பேசவும் செய்கின்றார். அப்பொழுது தான் ஒருவனுக்குக் கடவுளுடைய ஆதேசம் கிடைக்கப் பெறும். அத்தகைய ஆதேசம் பெற்ற போதகருடைய மொழிகள் எவ்வளவு வேகம் உடையன தெரியுமா? மலைகளைக் கூட அசைத்துவிட வல்லனவாகும் அம்மொழிகள். ஆனல் வெறும் பிரசங்கங்கள் உள்ளனவே! மக்கள் ஒரு சில நாட்கள் அவற்றிற்குச் செவி சாய்த்துக் கேட்பர், பின்னர் அவற்றை மறந்துவிடுவர். வெறும் சொற்களைக் கேட்டு மட்டும் மக்கள் ஒரு நாளும் செயல்படமாட்டார்கள்.

— சுவாமி இராமகிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்

| | ரூபா. சதம். |
|---|---|
| ஏழாலை | 10 - 00 |
| பன்னிருமாத நினைவுகள் | 10 - 00 |
| திருமுறைச் செல்வம் | 7 - 50 |
| வெள்ளி விழா சிறப்பு மலர் (1973) | 5 - 00 |
| கந்தக் கதம்பம் | 3 - 00 |
| ஆத்மநாதம் | 3 - 00 |
| தேங்கனிச்சோலை | 2 - 50 |
| பாட்டாளி பாட்டு | 1 - 50 |
| மதுபானம் விளைவிக்கும் மகா நாசம் | 1 - 00 |

*"சரீரத்தின் மத்தியில் சோதிமயமாகப் பிரகாசமாயிருப்பது ஆத்மா. அது சத்தியத்தினாலும், தவத்தினாலும், நல்ல ஞானத்தினாலும் அடையத்தக்கது. பிரம்மச்சரியத்தால் உணரத்தக்கது.*
*அதை அறிவோர் புலன்களை வென்றவர்.*
*அத்தகையோருக்குத் தோஷங்கள் கிடையா"*

—உபநிடதம்.

காலங்கடந்த இந்த உபநிடதப் பேருண்மையினால்
அனுபூதி பெற்ற மெய்ந்நெறியாளரின் உபதேசங்களை
ஓயாது இடித்துரைக்கும் ஒரே ஒரு பத்திரிகை

## "ஆத்மஜோதி"

ஈழத்திலும் இந்தியாவிலும், மலேசியாவிலும்
ஆயிரக்கணக்கான மெய்ந்நெறிநாட்ட
முடையவரின் அபிமானத்துக்குரிய மாத சஞ்சிகை

## ஆத்மஜோதி

ஆண்டுச் சந்தா ரூபா பத்து.
வெளிநாடுகளுக்கு ரூபா இருபது.
ஆயுள் சந்தா ரூபா இருநூற்றி ஐம்பது.

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி.

தொலைபேசி: 353

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered at the G.P.O. as a Newspaper M. L 359/00.

# விஷேட அறிவித்தல்

இச்சிறப்பிதழ் வைகாசி - ஆனி மாதங்களுக்குரியதாகும்.
அடுத்த ஆத்மஜோதி இதழ் ஆடி மாதத்தில் வெளிவரும் என்பதைக் கருத்திற் கொள்க.

## நன்றி

— ஆத்மஜோதி ஆசிரியர் —
சிவத்திரு. நா. முத்தையா அவர்களின்
சஷ்டியப்த பூர்த்திவிழாவை முன்னிட்டு வெளி வந்துள்ள சிறப்பிதழுக்கு ஆசிச் செய்திகள், கட்டுரைகள், பாமாலைகள் அனுப்பிய அனைவருக்கும்
நன்றி கூறுகிறேம்.

— ஆசிரியர் குழுவினர்.

# சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்,

அன்பு வணக்கம்

தங்கள் கைகளில் கிடைக்கும் இந்தச் சுடர் 30 ஆவது ஆண்டு 7-8 வது சுடராகும். கடந்த 29 ஆண்டுகளாகச் சோதிக்குக் கிடைத்த அன்பர்களின் ஆதரவு எதிர்காலத்திலும் கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. ஒவ்வொரு அன்பர் இல்லத்திலும் ஜோதி சுடர்விட்டுப் பிரகாசிக்க வேண்டும் என்பதே எமது தலையாய குறிக்கோள். ஒவ்வொரு சந்தா நேயரும் தத்தம் புதிய ஆண்டுச் சந்தா 10 ரூபாவை அனுப்பி வைப்பதோடு ஒவ்வொரு புதிய அங்கத்தவரை அறிமுகம் செய்து வைத்தால் சோதியின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டு புரிந்தவர்களாவீர்கள்.

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி
இலங்கை

ஆத்மஜோதி நிலையத்தினர்

அச்சிடுவிப்போர் ஆத்மஜோதி நிலையம்
அச்சிடுவோர்:— ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்.
வெளியிட்ட திகதி: 15—5—78.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org